சுகநர சபை, யாழ்ப்பாணம்

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 தை 28 புதன்கிழமை (10.02.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 076

# நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது! ஏப்ரல் 8 ஆம் திகதி பொதுத் தேர்தல்?

கொழும்பு, பெப். 10

நாடாளுமன்றம் நேற்று இரவு கலைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான வர்த்தமானி அறிவிப்பை வெளியிடுவதற்குரிய ஆவணங்களில் ஜனாதிபதி கையொப்பமிட்டு, அவை அரச அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என ஜனாதிபதி செயலக ஊடகப்பிரிவின் பொறுப்பாளர் லூசியன் ராஜகருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் தேர்தல் சட்டங்களுக்கு ஏற்ப வரும் 19ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேட்பு மனுக்கள் கோரப்பட வேண்டும்.

இதன் பின்னர் ஆறு தொடக்கம் ஏழு வார காலத்துக்குள் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அனேகமாக ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி தேர்தல் நடைபெறலாம்

(24ஆம் பக்கம் பார்க்க)

# பொன்சேகாவை மிருகம் போன்று நடத்தினர் என மனைவி வேதனை

## சதிப்புரட்சிக்குத் திட்டமிட்டார் என்பது அர்த்தமற்ற குற்றச்சாட்டு





கொழும்பு, பெப்ரவரி 10

முன்னாள் இராணுவத் தளபதியும், ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளருமான ஜெனரல் சரத் பொன்சேகாவை மிருகங்களை இழுத்துச் செல்வது போன்று படையினர் இழுத்துச் சென்றுள்ளனர் என வேதனை வெளியிட்டுள்ளார் அவரது மனைவி அனோமா பொன்சேகா.

தமது கணவரை நீதியாகவும் மனிதர் போலவும் நடத்துங்கள் என்றும் அரசிடம் அவர் கண்ணீர் மல்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் 'குயின்ஸ்' வீதியில் உள்ள தனது இல்லத்தில் நேற்றுக் காலை செய்தியாளர்களைச் சந்தித்த சமயம் அனோமா பொன்சேகா இந்த வேண்டுகோளை விடுத்தார்.

தனது கணவர் சதிப்புரட்சி முயற்சியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டையும் முழுமையாக நிராகரித்துள்ள அவர், மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

எனது கணவர் கைது செய்யப்படவில்லை. இது ஆட்கடத்தல்.

சரத் பொன்சேகாவை (24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவை பார்வையிட குடும்பத்தாருக்கு அனுமதி வழங்கப்படும் என அரசு அறிவிப்பு

கொழும்பு, பெப். 10

முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டு பாதுகாப்பாக சகல வசதிகளுடனும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

பொன்சேகாவின் உறவினர்கள் அவரை பார்வையிடக் கோருவார்களேயாயின் அவர்களுக்கு அரசு அனுமதி வழங்கும். எனினும்,

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் கைதைக் கண்டித்து நாடு முழுவதும் இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு,09 .பெப்

முன்னாள் இராணுவ தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா கைதுசெய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று புதன்கிழமை எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளன. நாடு முழுவதிலும் முக்கிய நகரங்களில் இவ்வாறான போராட்டங்கள் நடத்தப்பட்டவுள்ளன.

இதேவேளை, சரத் பொன்சேகாவின்

(24ஆம் பக்கம் பார்க்க)

## தளபதிப் பதவியில் இருந்த போதே குற்றமிழைத்தாராம்

கொழும்பு, பெப். 10

சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்து தேசிய பாதுகாப்புக் கவுன்ஸில் கூட்டங்களில் கலந்துகொண்ட வேளை

(24ஆம் பக்கம் பார்க்க)

## உலகப் பொருளாதார நெருக்கடி காரணமாக் 60 ஆயிரம் இலங்கையர் வேலையிழப்பு

கொழும்பு,பெப்.09

உலகப் பொருளாதார நெருக்கடியின் காரணமாக சுமார் 60 ஆயிரம் இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்களை இழந்துள்ளனர் என அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வுத் தகவலொன்று சுட்டிக்காட்டுகின்றது.

தொழில் உறவு மற்றும் தொழில் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் மூலம் இந்தத் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

2008ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தொழில்களை இழந்தவர்கள் இந்தக் கணக்கெடுப்பில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தொழில்களை இழந்து நெருக்கடியை எதிர்நோக்கும் நபர்களுக்கு நிவாரணங்கள்

(24ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து அவசர அவசரமாகத் திரும்புகிறார் ரணில்

கொழும்பு, பெப். 10

தற்போது இந்தியா சென்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அந்த விஜயத்தை இடைநடுவில் நிறுத்திவிட்டு இன்று காலை நாடு திரும்புகின்றார்.

ஞாயிற்றுக்கிழமை இந்தியா சென்ற ரணில் அங்கு அரசியல் தலைவர்கள் பலரைச் சந்தித்து இலங்கையில் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் தொடர்பாக விளக்கங்கள்

(24ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச் சுடர் உள்ளே**

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை மாணவர்களுக்கான அடிப்படை இரசாயனவியல் மாதிரி வினாத்தாள்

## அரசமைப்பையும், ஜனநாயகத்தையும் மீறும் நடவடிக்கை என ரணில் கண்டனம்

கொழும்பு, பெப். 10

சரத் பொன்சேகா ஒருபோதும் இந்த அரசுக்கு எதிராக சதிசெய்யவில்லை என்றும் அவரைக் கைது செய்திருப்பதன் மூலம் அரசு இலங்கையின் அரசமைப்பை முற்றாக மீறியுள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

பொன்சேகாவைப் பாதுகாப்பதற்கு அனைத்துக் கட்சிகளுடனும் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தற்போது இந்தியாவில் இருக்கும் ரணில் விக்கிரமசிங்க பொன்சேகாவின் கைதைக் கண்டித்து இந்தியாவிலிருந்து அறிக்கையொன்[illegible]

(24ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டுக்கும் படையினருக்கும் பொன்சேகா துரோகம் இழைப்பதில் உறுதியாக இருந்தார்

### இப்படிக் குற்றம் சுமத்துகின்றது அரசுத்தரப்பு

கொழும்பு, பெப். 10

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நாட்டிற்குத் துரோக[illegible] மிக உறுதியாக இருந்தார் எனக் குற்றம் சாட்டியுள்ள அரச தகவல் திணைக்கள இணையத்தளம், ஜனாதிபதிக்கு எதிராக சதி முயற்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டுகளுக்காக அவர் இராணுவ நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்படுவார் என்றும் தெரிவித்துள்ளது.

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிருசுவில் படித்த மகளிர் திட்டப் பகுதியில்

# அடிப்படை வசதிகளின்றி சிரமப்படும் மீளக்குடியேறியுள்ள குடும்பங்கள்

மிருசுவில், பெப்.10

மிருசுவில் படித்த மகளிர் திட்டப் பகுதிக்கான போக்குவரத்துச் சேவை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்று பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த யுத்த நடவடிக்கை காரணமாக பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்ட இப் பிரதேசம் அண்மையில் மீள்குடியேற்றத்திற்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் தற்போது இப் பிரதேசத்தில் பல நூற்றுக் கணக்கான குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன.

யுத்த நடவடிக்கைகளுக்கு முன்னர் இப் பிரதேசத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை மூன்று வேளை நடைபெற்று வந்தது. மின்சார விநியோகமும் பொதுமக்களுக்குச் சீராகக்கிடைத்தது.

தற்போது இப் பிரதேச பொதுமக்கள் மீள்குடியேறி சுமார் நான்கு மாத காலமாகியும் அடிப்படை வசதிகள் எதுவும் ஏற்படுத்தப் படவில்லை. இங்குள்ள அம்மன் கோவிலுக்கு வெளியிடங்களில் இருந்து தினமும் அடியவர்கள் பெரும் சிரமத்துடன் தனியார் வாகனங்களிலேயே வருகின்றனர்.

எழுதுமட்டுவாழ் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயம் என்பன இப் பிரதேசத்திற்கு அப்பால் அமைந்துள்ளன. இங்கு பணிபுரியும் ஊழியர்களும் மற்றும் மாணவர்களும் பல் வேறு போக்குவரத்துச் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இதே வேளை கடந்த யுத்த காலப் பகுதியில் பாதுகாப்பு வலயமாக காணப் பட்ட இப் பிரதேசத்தில் பல வருட காலமாக இங்குள்ள வீதிகள் புனரமைக்கப் படாத நிலையில் குண்டும் குழியுமாக காணப்படுவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது மீள்குடியேறிவரும் பிரதேசங் களை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்கு அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் முன்வரவேண்டும் என்றும் இப் பிரதேசத்திற்கான அடிப்படை வசதி களை ஏற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதி காரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண் டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இலங்கையில் படித்த பெண்களுக்காக வழங்கப்பட்ட ஒரேயொரு குடியேற்றத் திட்டமாக மிருசுவில் பகுதி யில் உள்ள இப் பிரதேசம் விளங்குகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ)

## நாடு திரும்பினார் ஜனாதிபதி

ரஷ்யாவுக்கான மூன்று நாள் உத்தியோக பூர்வவிஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை நாடு திரும்பினார்.

இந்த் விஜயத்தின் போது ரஷ்யாவிடமிருந்து முப்பது கோடி அமெரிக்க டொலர்களை இலங்கை கடனாகப் பெறுவது தொடர்பான ஒப்பந்தத்தில் ஜனாதிபதி கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)

# சுதுமலை வடக்குப் பகுதி வீதியை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

## பிரதேச சபை செயலாளருக்குக் கடிதம்

சண்டிலிப்பாய், பெப்.10

ஐம்பது வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் மேடும் பள்ளமுமாக இருக்கும் சுதுமலை வடக்கு கன்னித் தோட்ட வீதியை திருத்தி அமைத்துத் தருமாறு வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இப் பகுதி மக்கள் நாளாந்தம் படும் கஷ்டங்கள் குறித்து சுதுமலை வடக்கு கிராம உத்தியோகத்தர் எஸ்.லோகநாதன் பிரதேச சபை செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது.

சுதுமலை ஊடாகச் செல்லும் தாவடி வீதியையும், சுதுமலை ஊடாகச் செல்லும் இணுவில் வீதியையும் இணைக்கும் மேற்படி வீதி சுமார் 50வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாமல் இருக்கிறது. இதனால் பொது மக்கள் குறிப்பாக மாணவர்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

இப் பகுதியில் உள்ள அநேக மாணவர்கள் மானிப்பாய் இந்துக்கல்லூரி, மகளிர் கல்லூரி, சிந்மயபாரதி வித்தியாலயம் மற்றும் கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்.மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றார்கள்.

இவர்கள் இந்தப் பாதையையே பயன்படுத்துகின்றார்கள். பெரும்பாலான விவசாயிகளும் இதனையே பயன்படுத்துகிறார்கள்.

எனவே அனைத்து மக்களினதும் நலன் கருதி இவ் வீதியை முன்னுரிமை அடிப்படையில் புனரமைத்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்றுள்ளது. (ஓ-115)

# கோதுமை மாவின் விலை மட்டுமே குறைந்துள்ளது; தின்பண்டங்களின் விலைகளை எப்படிக் குறைப்பது?

## உணவகங்களின் உரிமையாளர்கள் இப்படிக் கேட்கின்றனர்

யாழ்ப்பாணம், பெப்.10

தின்பண்டங்களைத் தயாரிக்கும் உணவுப் பொருள்களில் கோதுமை மாவின் விலையைத் தவிர வேறு எந்தப் பொருள்களின் விலைகளும் குறைவடையவில்லை. இந் நிலையில் தின்பண்டங்களின் விலைகளைப் பெரியளவில் குறைக்க முடியாதுள்ளது.

இவ்வாறு யாழ்.நகரில் உள்ள உணவகங்களின் உரிமையாளர்கள் அரச அதிபரிடம் தமது பிரச்சினையை எடுத்துரைத்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள உணவகங்களில் தின்பண்டங்களின் விலைகள் நிர்ணயம் தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே உரிமையாளர்கள் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தனர்.

அந்தக் கலந்துரையாடலில் உணவகங்களின் உரிமையாளர்கள் தெரிவித்தவை வருமாறு:

தின்பண்டங்களைத் தயாரிக்கும் உணவுப் பொருள்களில் கோதுமை மாவின் விலை மட்டும் குறைந்துள்ளது. ஆனால் அதற்கான ஏனைய உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளதே தவிர குறைவடையவில்லை. அதாவது சீனி, உழுந்து, தேங்காய் எண்ணை போன்றவற்றின் விலைகள் உயர்ந்துள்ளன.

இந் நிலையில் தின்பண்டங்களின் விலைகள் பெரியளவில் குறைக்கப்படுமாயின் உணவகங்களின் உரிமையாளர்களாகிய நாம் பெரிதும் பாதிக்கப்படுவோம்.

எனவே தின்பண்டங்களின் விலைகளை நிர்ணயம் செய்கின்ற போது உணவக உரிமையாளர்களின் நலனைக் கருத்திற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்தக் கலந்துரையாடலில் அரச அதிபர் க.கணேஷ், பாவனையாளர் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், மற்றும் வர்த்தக சங்கத்தின் பிரதிநிதிகள், உணவகங்களின் உரிமையாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ஒ-9)

## மர்மப் பொருள் வெடித்து மாணவன் காயம்

யாழ்ப்பாணம், பெப்.10

மர்மப் பொருள் வெடித்ததில் பாடசாலை மாணவனின் கை விரல்கள் சிதறின.

இச் சம்பவம் நேற்று முன்தினம் கெற்பேலியில் இடம்பெற்றது.

நிலத்தில் புதைந்திருந்த பொருளை எடுத்து நிலத்தில் குற்றிய போது அது வெடித்ததில் காயமேற்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த சபாபதி சாரங்கன் (வயது-21) என்னும் மாணவன் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (1-207)


### கலைக்காவலனுக்கு கண்ணீர்க் காணிக்கை



கலாபூஷணம், தமிழ்க்கலைக் காவலன் செல்லையா மெற்றாஸ்மயில் அவர்கள்

பாரம்பரியக்கலை வாழ பாடுபட்டு நீ உழைத்தாய்!
ஆரம் என அரிய பெரும் கலைஞர்களை அரவணைத்தாய்!
தீரம் மிகு கலைஞனாய் திக்கெட்டும் நீ திகழ்ந்தாய்!
ஈர விழி சிந்துகிறோம் ஏந்தலே நீ ஏன் மறைந்தாய்!

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம். (C/564814) யாழ்ப்பாணம் [illegible]



### கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக 2009/01ஆம் வருட முகாமைத்துவபீட மாணவன்

இரவீந்திரதாசன் விக்ரர்அருள்தாசன்

நேற்று (09.02.2010) அகால மரணம் அடைந்தமையையிட்டு துயரடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

2009/01ஆம் வருட முகாமைத்துவபீட மாணவர்கள்.
யாழ்.பல்கலைக்கழகம். (C/564817)



### கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக 2009/01ஆம் வருட முகாமைத்துவபீட மாணவி

வேலாயுதம் திருவிழி

நேற்று (09.02.2010) அகால மரணம் அடைந்தமையையிட்டு துயரடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

2009/01ஆம் வருட முகாமைத்துவபீட மாணவர்கள்.
யாழ்.பல்கலைக்கழகம். (C/564816)


### வாசகர்களின் கவனத்திற்கு

உதயனின் நேற்றைய (09.02.2010) பதிப்பின் பன்னிரண்டாம் பக்கத்தில் அறிவித்தல் என்ற தலைப்பில் பிரசுரமான விளம்பரத்தில் -

தெரிவிக்கப்பட்ட தகவல்கள், பெயர் விவரங்கள் உறுதிப்படுத்தப்படாதவை. தற்செயலாக ஏற்பட்ட தவறு குறித்து வருந்துகிறோம்.

நிர்வாகி,
விளம்பரப்பகுதி.


### சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

#### வேத, ஆகம பரீட்சைகள்

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தால் வருடந்தோறும் நடத்தப்பட்டு வரும் அந்தண மாணவர்களுக்கான வேத, ஆகம பரீட்சைகள் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆனைப்பந்தியிலுள்ள குருகுல கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன. இப் பரீட்சைகளில் தோற்ற விரும்பும் மாணவர்கள் தங்கள் பெயர்களை ஒன்றியத்தில் உடன் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C/564808) செயலாளர்.



### மரண அறிவித்தல்



ஐயாத்துரை மயில்வாகனம்

சாவகச்சேரி, சங்கத்தானை, சாரதா வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட ஐயாத்துரை மயில்வாகனம் நேற்று (09.02.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-சின்னத்தங்கம் தம்பதிகளின் மகனும், அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், மார்க்கண்டு, பத்மநாதன், குமரையா, யோகலிங்கம் (காந்தி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரி, சரஸ்வதி, கமலாதேவி, விமலாதேவி ஆகியோரின் மைத்துனரும், அருமைராணி, ராதாகிருஸ்ணன் (சுவிஸ்), சிறிதரன், சுமதி (சுவிஸ்), சிவசோதி, சிவகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பூபாலசிங்கம், ஜெயந்தி (சுவிஸ்), விஜயலட்சுமி, இராசேந்திரம் (சுவிஸ்), குணரட்ணம், சஞ்சீவ்குமார் ஆகியோரின் மாமனாரும், நீருஜா, பவித்திரா, முரளிதாஸ், கௌரிசங்கர், ஜீவிதா, வாணிசபேசன், ஸ்ரீதேவிபவன், கார்த்திகாயினி (சுவிஸ்), சௌமியா (சுவிஸ்), திலீபன், கார்த்தீபன், திவ்யா, கௌதமி (சுவிஸ்), றஜீவன் (சுவிஸ்), ராகவி (சுவிஸ்), நிலோஜன், நிதர்சன், விபூசன், கீர்த்தனா, மதுசிகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2010) புதன் கிழமை பி.ப 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
குடும்பத்தினர்.
தொடர்பு இல: 0217201125, 0774248865

சாரதா வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (92380)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பொன்சேகா கைதின் பெறுபேறு

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டமையும், அவர் கைது செய்யப்பட்டிருக்கின்ற முறைமையும் நாட்டு மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

அதுவும், கடந்த தேர்தலில் அவரை அதிகளவில் ஆதரித்த வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் இந்தக் கைதின் போக்கு ஆழமான மனவுணர்வுகளைத் தட்டி விட்டிருக்கின்றது என்பதும் மறுக்க முடியாத உண்மையே.

இந்தச் சமயத்திலே, இலங்கைத் தமிழரின் பிரச்சினையை ஒட்டி சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் இடம்பெற்ற ஒரு கருத்தரங்கில் நீதியரசர் ஸி.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய உரையின் சாராம்சம் நினைவுக்கு வருகின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ நடவடிக்கை மூலம் அழிக்கப்பட்டு விட்டதாக இலங்கை அரசு அறிவித்த பின்னணியில் 'சமாதானமும் சகவாழ்வும்' என்ற தலைப்பில் பல்வேறு மதப் பெரியார்களும் அந்தக் கருத்தரங்கில் தமது உரைகளை முன்வைத்தனர். இந்து சமயப் பின்புலத்திலே தமது கருத்தை முன்வைத்த நீதியரசர் விக்னேஸ்வரன் பின்வருமாறு குறிப்பிட்டார்.

*''எத்துணை மிருகத்தனமாக மனிதர்களை அழிப்பினும், மனிதனின் உள்ளத்தே கிளர்ந்து எழும் விடுதலை வேட்கையை -நீதிக்கான வேட்கையை - அத்தகைய செயல்களால் அணைத்துவிட முடியாது. லட்சக் கணக்கில் யூதர்கள் அழிக்கப்பட்ட போதிலும் இன்று உலகில் வலுவான மக்கள் கூட்டமாக அவர்கள் உள்ளனர். தமது நியாயமான - சட்டபூர்வமான - கோரிக்கைகளுக்காகப் போராடும் மக்களை அழிப்பதும் ஒழிப்பதும் அதிகார மட்டத்தினரின் கொள்கையாக இருக்குமிடத்து அவர்களின் தீய கர்ம வினைப் பயன் தொடரும் என்பது இந்துமத நம்பிக்கை. வாளெடுத்தவன், வாளினாலேயே அழிவான் என்பது நம்ப முடியாதது அல்ல.*

*வன்செயலை நாடியோர் தம்மிலும் வல்லமை படைத்த வன்செயலினால் தாம் வெளியேற்றப்பட்டமையைப் புரிந்து கொண்டுள்ளனர் என்பதில் சந்தேகமில்லை. இதனிலும் அதிகப்படியான - மிகவும் நவீனத்துவம் வாய்ந்த - வன்செயல்களில் ஈடுபட்டு, அப்பாவிகளுக்கு எதிராக மிகக் கொடூரமாகச் செயற்பட்டவர்கள் இதே பாடத்தைப் படிக்க எத்தனை காலம் செல்லும்? முன்னைய காலத்திலும் இவ்வாறு நிகழ்ந்தமையைக் காண்கிறோம். நாம் விதைத்ததை நாம் அறுவடை செய்வோம் என்பதை அனைத்து சமயங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன.''* - என்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்.

ஒவ்வொரு செயலுக்கும் - ஒவ்வொரு தாக்கத்துக்கும் - ஒரு மறுதாக்கம் இருக்கும். சில சமயங்களில் காலம் சற்றுப் பிந்தும். அவ்வளவுதான். இப்போது நடைபெறும் சம்பவங்களுக்கும் உரிய விளைவுகள் கிடைத்தே தீரும். இழைக்கும் தவறுகளுக்காகப் பாடங்களைப் படித்தே தீர வேண்டும். அது உலக நியதி.

தமக்காகத் தேர்தலில் வேலைசெய்த முன்னாள் படை அதிகாரிகள், உதவியாளர்கள் கைதுசெய்யப்பட்டமையை ஒட்டி அவர்களது உறவினர்களை நேற்று முன்தினம் ஜெனரல் பொன்சேகா சந்தித்திருக்கின்றார். அவர்கள் மத்தியில் உரையாற்றியபோது தேவைப்பட்டால் சர்வதேச போர்க்குற்ற விசாரணை நீதிமன்றத்திலும் சாட்சியமளிக்கத் தாம் தயார் என அவர் அங்கு கூறினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேசமயம், தமது நிலைப்பாடு தொடர்பில் உரிய சத்தியக்கடதாசிகளைத் தயார்பண்ணி பாதுகாப்பான தரப்புகளுக்கு அனுப்பிவிட்டே தாம் பார்த்திருக்கின்றார் என்றும், தமக்கு ஏதும் நேர்ந்தாலும் உண்மைகள் வெளிவரும் என்றும் சில நாட்களுக்கு முன்னர் ஜெனரல் சரத் பொன்சேகா பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், அவரது அலுவலகம் வல்வந்தமாக சோதனையிடப்பட்டிருக்கின்றது. அங்கிருந்த கணினிகள், தஸ்தாவேஜுக்கள், ஆவணங்கள் அள்ளிச் செல்லப்பட்டிருக்கின்றன.

இந்தப் பின்னணியிலேயே அவரும் நேற்றுமுன்தினம் இரவு அள்ளிச் செல்லப்பட்டிருக்கின்றார். அவருக்கு எதிராக இராணுவச் சட்டம் பாயும் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதாவது, அவர் இனி அண்மைக்காலத்தில் வெளியே வருவதற்கோ அல்லது சர்வதேசத் தரப்புகளைச் சந்திப்பதற்கோ வாய்ப்பில்லை என்பது தெளிவாகப் புலனாகின்றது.

இவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது இக்கைது, அதன் பின்னணி, பொன்சேகா மீது சுமத்தப்படக்கூடிய குற்றச்சாட்டுகள், அவருக்கு ஏற்படக்கூடிய கதி எல்லாமே ஓரளவு ஊகிக்கத் தக்கவையே.

இலங்கை விவகாரத்தில் நடந்த கொடூரங்கள் பற்றிய உண்மை வெளிவரவேண்டும் என்றால், இவ்விடயத்தில் சர்வதேசத்தின் ஈடுபாடும், பங்குபற்றலும், அழுத்தமும் மிக வலுவாக, வலிமையாக அவசியமானவை. உண்மையைக் கண்டறிவதற்கான வாய்ப்பும், சூழலும், சந்தர்ப்பமும் பொன்சேகா இங்கு நடத்தப்படும் முறைமை மூலம் நன்கு கனிந்தும் வந்திருக்கின்றன.

இதுவரை காலமும் உண்மைகளைக் கண்டறிவதற்கான வாசலைத் தேடினார்கள். இப்போது வாசல் புலப்பட்டு விட்டது. இனி, வாசல் கதவைத் திறக்கவேண்டியதுதான் மிச்சம். அதற்கான திறப்பைப் பெறும் வழி சர்வதேசத்துக்குத்தான் தெரியும். அதனால்தான் அந்தச் சாவியைப் பெறமுடியும்.

உரிய முறையில் செயற்பட்டு சந்தர்ப்பத்தை சர்வதேசம் பயன்படுத்திக்கொள்ளுமா? அல்லது வழமை போல அறிக்கைகள், கண்டனங்கள், பயனற்ற பிரேரணை முஸ்தீபுகள் என்பவற்றோடு அடங்கி வாய்ப்பைக் கோட்டைவிடுமா?

பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். வேறு வழியில்லை.

## பருத்தித்துறை, சாவகச்சேரி, மல்லாகம், காவலூர் ஆகிய

# 4 நீதிமன்றுகளுக்கு நிரந்தரக் கட்டடங்கள்; யாழ். வருகின்றனர் உயர்மட்டக் குழுவினர்

யாழ்ப்பாணம், பெப்.10

குடாநாட்டில் பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, மல்லாகம் ஆகிய நீதிமன்றங்களுக்கு நிரந்தரக் கட்டடங்கள் அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற் கொள்ள உயர்மட்டக் குழு ஒன்று அடுத்தவாரம் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது.

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மேற்படி நான்கு நீதிமன்றங்களுக்கும் நிரந்தர கட்டடங்களை அமைக்க ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த பணிப்புரைக்கு அமைய நீதிமன்றக் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் அடுத்த வாரம் தொடங்கவிருக்கின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கி, நீதி அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் நீதிமன்றக் கட்டடங்கள் அமையவுள்ள பகுதிகளைப் பார்வையிடவுள்ளனர்.

அந்தக் கட்டடங்கள் அமையவுள்ள பகுதிகளின் மண்ணை பரிசோதிக்கும் பொறியியலாளர் குழுவும் வருகை தரவுள்ளது.

இந்த நீதிமன்றக் கட்டடங்களை அமைப்பதற்கான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்க முன்வந்திருக்கின்றது - என்று நீதிபதி தெரிவித்தார். (ஒ-1)

# அரசின் மீது சர்வதேச அழுத்தம் அதிகரிக்கும் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, பெப். 10

ஜெனரல் சரத் பொன்சேகாவை கைதுசெய்ததன் மூலம் மஹிந்தவின் அரசு, சர்வதேச சட்டங்களை முற்றாக மீறியுள்ளது என்றும் இதனால் இலங்கை அரசு மீது சர்வதேசத்தின் தலையீடுகள் அதிகரிக்கும் என்றும் ஐ.தே.கட்சியின் எம்.பியான லக்ஷ்மன் கிரியெல்ல கூறினார்.

அத்தோடு இக்கைதினால் முப்படை இரண்டாகப் பிளவுபடும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் அவர் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடிய போதே இவ்வாறு கூறினார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஜெனரல் சரத் பொன்சேகாவின் கைதை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட எதிர்த்தரப்பு வேட்பாளரைக் கைதுசெய்யும் அரசியல் பழிவாங்கல் கலாசாரம் ஒன்றை இந்த அரசுதான் இப்போது தொடக்கி வைத்துள்ளது.

1982 ஆம் ஆண்டு முதல் இப்போது வரை ஜனாதிபதித் தேர்தல்கள் ஆறு தடவைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் எந்தத் தேர்தல் முடிவின் போதும் இப்படியானதொரு பழிவாங்கல் இடம்பெற்றதில்லை. இலங்கையின் அரசியல் வரலாற்றில் இதுதான் முதல் தடவை.

### சர்வதேச சட்டங்களும் மீறப்பட்டுள்ளன

சரத் பொன்சேகா ஒரு சாதாரண மனிதர் அல்லர். அவர் இந்நாட்டுக்காக மிகப் பெரிய சேவை செய்தவர். ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்டவர் என்பதற்காக சரியான காரணங்கள் எவையும் இன்றி அவரை இவ்வாறு கைதுசெய்திருக்கின்றமையை மிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இக்கைது மூலம் உள்நாட்டுச் சட்டம் மாத்திரமன்றி சர்வதேச சட்டங்களும், சர்வதேச மனித உரிமைச் சட்டங்களும் முற்றாக மீறப்பட்டுள்ளன. இதனால், சர்வதேசத்தின் தலையீடுகள் இலங்கை அரசின் மீது அதிகரிக்கும்.சர்வதேச சமூகத்தின் மத்தியில் எமது நாட்டுக்கு நல்ல பெயர் இல்லை. இந்நிலையில், இக்கைது எமது நாட்டின் பெயரை மேலும் கெடுத்துவிடும்.

அதுமாத்திரமன்றி, எமது முப்படையினர் இரண்டாகப் பிரிவதற்கும் இந்தக் கைது வழியமைத்துக் கொடுக்கும். பல வழிகளிலும் இக்கைது எமக்கு ஆபத்தாகவே அமையும்.

அரசு நீதியாக இத்தேர்தலை வென்றிருந்தால் இவ்வாறான மோசமான செயற்பாடுகளில் ஈடுபடாது. அரசு தோல்வி மனப்பான்மையுடன் தான் செயற்படுகின்றது.

தேர்தல் முடிவு தொடர்பாக பல தகவல்கள் வெளியாகும் என்று அரசு அஞ்சுகிறது. அதுதான் அரசு இப்படிச் செயற்படுகிறது. எப்படி இருப்பினும், தேர்தல் முடிவுகளுக்கு எதிராக நாம் நீதிமன்றம் போவதைத் தடுக்க முடியாது.

அரசு உடனடியாக சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய வேண்டும். இதுதொடர்பாக ஏனைய அரசியல் கட்சிகளும் அரசிடம் வேண்டுகோள் விடுக்கவேண்டும். - என்றார். (அ-சி)

# இலங்கை நிலைமையை ஐ.நா. உன்னிப்பாக அவதானிக்கிறது

## செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் சொல்கிறார் இப்படி

நியூயோர்க், பெப். 10

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டமை குறித்து உன்னிப்பாக அவதானித்து வருவதாகத் தெரிவித்துள்ள ஐ.நா., தேர்தலிற்குப் பிந்திய காலப் பகுதியில் அமைதி நிலவுவது நாட்டின் நிரந்த சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் மிகவும் அவசியமானது எனவும் தெரிவித்துள்ளது.

இலங்கையில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டமை குறித்து செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ - மூனின் பேச்சாளர் மார்ட்டின் நெசிர்கி இவ்விடயம் குறித்து மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் இடம்பெற்றுள்ள கைது குறித்து வெளியான செய்திகளை அறிந்துள்ளோம்.

இது குறித்து மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகிறோம்.

இதற்கு முன்னரும் நாங்கள் குறிப்பிட்டமை போல, மோதலிற்குப் பின்னரான முதலாவது தேர்தல் அமைதியாக இடம்பெறுவதும் அதன் பின்னர் காணப்படும் சூழ்நிலையும் இலங்கையின் நீண்ட கால சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் மிக முக்கியமானவை.

தேர்தல் காலத்தில் மாத்திரமல்லாது அதன் பின்னரும் சகல தரப்பினரும் அவர்களது ஆதரவாளர்களும் தேர்தல் சட்டங்களைப் பின்பற்றுவதுடன் தூண்டுதல் நடவடிக்கைகளைத் தவிர்க்கவேண்டுமெனச் செயலாளர் நாயகம் பான் கீ - மூன் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வந்துள்ளார்.

இதே வேண்டுகோளை அவர் மீண்டும் விடுக்கின்றார். - எனத் தெரிவித்தார்.

# நடமாடும் ஆய்வுகூட சேவை

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் நடமாடும் ஆய்வுகூட சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கும் தெல்லிப்பழை வைத்திய சாலைக்கும் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதால், அவை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளில் நடமாடும் சேவை இடம்பெறும் என்று யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமையில் இருந்து ஒவ்வொரு பிரதேசத்திலும் இந்த நடமாடும் சேவை இடம் பெறும்.

நடமாடும் சேவை இடம்பெறும் தினங்களும், பிரதேசங்களும் வருமாறு:-

திங்கள் - பிரதேச வைத்திய சாலை, வேலணை, செவ்வாய் - பிரதேச வைத்தியசாலை, சங்கானை, புதன் - பிரதேச வைத்திய சாலை, காரைநகர், வியாழன் -பிரதேச வைத்தியசாலை, கோப்பாய், வெள்ளி- ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை, சனி - பிரதேச வைத்தியசாலை,அச்சுவேலி. (1)

## குறைந்த வலுவுடன் மின்சாரம்

யாழ்ப்பாணம், பெப்.10

சரசாலை தெற்குப் பகுதியில் இரவு வேளை குறைந்த வலுவுடன் கூடிய மின்சாரம் வருவதால் மின்குமிழ்கள் பிரகாசமாக எரிவதில்லை. இதனால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சாவகச்சேரி பிரதேச மின் அத்தியட்சகருக்கு இது குறித்து கடிதம் மூலம் அப் பகுதி மக்கள் முறையிட்டுள்ளனர். (ஒ-207)

## நாளை

| | |
|---|---|
| தை 29 | 11.02.2010 |
| | வியாழக்கிழமை |
| திதி: | திரயோதசி |
| | பி.இ. 04.30 வரை |
| நட்சத்திரம்: | பூராடம் |
| | மு.ப. 11.45 வரை |
| சுபநேரம்: | 08.04-09.34 வரை |
| ராகுகாலம்: | 02.04-03.34 வரை |

# இரணைமடு குடிதண்ணீர் திட்டம்; இன்று செயலகத்தில் ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப்.10

யாழ்.குடாநாட்டுக்கு கிளிநொச்சி, - இரணைமடு குடி தண்ணீரை விநியோகிப்பது தொடர்பான திட்டம் குறித்து இன்று புதன்கிழமை யாழ். அரச அதிபர் தலைமையில் ஆராயப் படவுள்ளது.

இது தொடர்பான அபிவிருத்திக் கூட்டம் யாழ். செயலகத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கூட்டத்துக்கு கொழும்பில் இருந்து வருகைதந்துள்ள ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகள் குடி தண்ணீர் விநியோகத்துக்கான அபிவிருத்தித் திட்டத்துக்கு நிதிப்பங்களிப்பும் செய்யவுள்ளனர்.

இதேவேளை, இரணைமடு குடி தண்ணீர் திட்டத்தை யாழ். மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்துக்கு பெறுவது தொடர்பாக யாழ். மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் கடந்த வாரம் உயர் மட்ட மாநாடு ஒன்றும் நடைபெற்று இருந்தது. (ஒ-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலுவலக உதவியாளர் தேவை

எமது காரியாலயத்துக்கு பல்வேறு கடமைகளைச் செய்யக் கூடிய 35 வயதுக்கு மேலான ஆண் / பெண் ஒருவர் தேவை. தமிழ், ஆங்கில அறிவுடையோர் விரும்பத்தக்கது. அவர்கள் வசிக்கும் இ.செ.ச. பிரிவினூடாக 15.02.2010இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ் கிளை,
73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
(C/564807)

## மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
## பொதுக்கூட்ட அறிவித்தல் - 2010

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 25.02.2010 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்க அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எரிஞ்சஅம்மன் கோவிலடி,
வியாபாரிமூலை.
(C/564813)
நிர்வாகம்.

## காணி விற்பனைக்கு

நவாலி வடக்கு, அட்டகிரி வீதிக்கு அண்மையில் 3 பரப்பு வளவுக்காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: திருமதி செல்லத்துரை இரத்தினம், நாச்சிமார் வீதி, நவாலி வடக்கு. தொ.பே 0779272699. தரகர் தேவையற்றது.

## வீடு வாடகைக்குத் தேவை

திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் பிரதேசத்திற்குள் இருவர் கொண்ட குடும்பம் வசிக்கத்தக்க சகல வசதிகளுடன் கூடிய வீடு உடன் தேவை.
தொடர்பு: 0217914064

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட்ஸ், முட்டை என்பன மலிவான விலையில் சுத்தம் செய்து எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம். புறொயிலர் மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். விலைக் கழிவு உண்டு.

தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கஸ்டிடி. தொ.பே 0217912783

## தும்பளை லூர்து மாதா தேவாலயத் திருநாள்

கத்தோலிக்க யாத்திரைத் தலங்களில் ஒன்றான தும்பளை லூர்துமாதா தேவாலய வருடாந்த உற்சவம் கடந்த செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது -

இன்று புதன் கிழமை இரவு 10 மணிக்கு திருநாள்த் திருவிழா இடம் பெற்று நாளை காலை 6 மணிக்கு கூட்டுத் திருப்பலி சொரூப பவனியுடன் நிறைவுபெறும்.

கூட்டுத் திருப் பலியைப் பருத்தித் துறைப்பங்குத்தந்தை அருட்திரு.ரெக்னோ அடிகளார் தலைமையில் யாழ்.மாவட்ட குரு முதல்வர் அருட் திரு.ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் அடிகளார் ஒப்புக்கொடுப்பார். (ஒ-236)

## திறப்பு விழா அழைப்பு

நிகழும் மங்களகரமான விரோதி வருடம் தை மாதம்
இன்று (10.02.2010) புதன்கிழமை காலை 9.54 மணிமுதல்
10.24 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில்
பிரதான வீதி, வல்வெட்டியில்



### ஒளியருவி
### லேசர் டிஜிற்றல் கலர் லாப்

எனும் ஸ்தாபனத்தினைத் திறந்து வைக்க உள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

போட்டோ, வீடியோ, எடிற்றிங், டிஜிற்றல், கறிஸ்மா அல்பம், லெமனேற்றிங், போட்டோக் கொப்பி, வைண்டிங் என்பன சிறந்த முறையில் குறைந்த செலவில் வாடிக்கையாளரைத் திருப்திப் படுத்தும் நிறுவனமாக இன்றுமுதல் தனது சேவையை பன்முகப்படுத்தி ஒளியருவி கலர்லாப் பிரகாசிக்கும்.

தங்கள் நல்வரவை நாடும்

வல்வெட்டி.
ஒளியருவி கலர்லாப் நிறுவனத்தினர்.

## சங்காபிஷேகம்

சாவகச்சேரி வடக்கு இறுவம் பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேக பூர்த்தியையொட்டிய சங்காபிஷேகம் எதிர் வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் நடைபெறும்.

காலை 7 மணிக்கு சமயதீட்சை இடம் பெறும். (ஒ-207)

ஓம் விராட் விஷ்வப் பிரமனே நமக

## 45ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

| மலர்ந்தது | மறைந்தது |
|---|---|
| 29 | 28 |
| 12 | 12 |
| 1986 | 2009 |



### செல்வி யசோபாரதி தில்லையம்பலம்

(3ஆம் வருட உள்ளகப் பயிற்சி ஆசிரியை, மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி)

கடந்த 28.12.2009 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது கனிஷ்ட புத்திரி செல்வி யசோபாரதி தில்லையம்பலம் அவர்களின் 41 ஆம் நாள் அந்தியேட்டிக்கிரியைகள் 07.02.2010 ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. 45ஆம் நாள் கிரியைகள் இன்று (10.02.2010) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இன்று நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புச் செல்வத்தின் மரணச் செய்தி அறிந்து நேரடியாகவும், தபால், தந்தி, தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும், மலர்மாலைகள், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் பல வகைகளிலும் உதவிகள் செய்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு: இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களைச் சரியாக நினைவு படுத்த முடியாததால் தயவு செய்து இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு இன்றைய இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்பாக அழைக்கின்றோம்.

பருத்தித்துறை வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
நிரந்தர முகவரி: நாவற்குழி கிழக்கு, கைதடி.
தொ.பே: 0771614742
மின்னஞ்சல்: jayabharathy06@gmail.com
(92379)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சுந்தரம்பிள்ளை கோபாலகிருஷ்ணன் (அப்பையா)

[5ஆம் வட்டாரம், நயினாதீவு]

நயினாதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை கோபாலகிருஷ்ணன் நேற்று (09.02.2010) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை மற்றும் செல்லம்மா தம்பதியினரின் அருமை மகனும், காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் சிவபாக்கியம் தம்பதியினரின் அருமை மருமகனும், முத்துலெச்சுமீ, காலஞ்சென்ற திருவிளங்கம் மற்றும் விஜயராமலிங்கம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கோகிலாதேவியின் அன்புக் கணவரும், சிவாகரன், கிருபாகரன், சுபாஸ்சந்திரபோஸ், கமலலோசினி, அருள்விழி ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாளினி, ஆரணி, சுபாஷினி, கமலகாசன் ஆகியோரின் மாமனாரும், ரோனியோ, ரிஷோ, சுமிர்தா, டிலானி, செயோன், கிஷாந், விபூஷணன் ஆகியோரின் அன்புப் பேரனும், நடராசா, சின்னம்மா, கமலாம்பிகை, ரெங்கநாதன், மோகனாதேவி, காலஞ்சென்ற துரைராஜசிங்கம் மற்றும் தர்மகுலசிங்கம், இராஜகுணசிங்கம், குணபாலசிங்கம், லோகநாதசிங்கம், சிவராஜசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், குலசிங்கம், தவேஸ்வரன், ஞானவடிவேல் ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.02.2010) வியாழக்கிழமை மு.ப. 10மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நயினாதீவு சல்லிப் பரவை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
தொ.பே: 0112471369
(92377)
தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மைத்துனர் குலசிங்கம்.

### கிட்டிணன் சின்னம்மா (தவம்)



இமையாணன் "அறிவாலயத்தைப்" பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கிட்டிணன் சின்னம்மா (தவம்) 07.02.2010 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லவன் -சின்னட்டி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கிட்டிணனின் அன்புத் துணைவியும் காலஞ்சென்ற வேலன் மற்றும் வைரவி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சீனியன் சின்னப்பிள்ளையின் அன்புச் சகோதரியும், ஸ்ரீரவீந்திரநாதன் (ஜேர்மனி), ஸ்ரீரங்கநாதன் (சுவிஸ்), ரவிச்சந்திரன், கெங்காதரன் (கணேஸ்), ஸ்ரீரஞ்சினி (இத்தாலி), காலஞ்சென்ற ஜனார்த்தனி மற்றும் ஸ்ரீகாந்தராசா (ஆசிரியர்), சிவாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், கல்பனா (ஜேர்மனி), காஞ்சனா (சுவிஸ்), காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் விஜயலலிதா, தெய்வேந்திரம் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருசிகன், துர்க்காயினி, கிஷோத், கிருஷான், கிருஷ்னாத், கிருவரன், தமிழினி, தமிழ்நிலவன், கிஷான், அபிசாயினி, எழில்ராஜ் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2010) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்லை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அறிவாலயம்",
இமையாணன் கிழக்கு,
கரவெட்டி, உடுப்பிட்டி.
(91048)
தகவல்:
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவுகளில்



அமரர்
### வல்லிபுரம் சோமசுந்தரம்

உதிப்பு
22.11.1925

உதிர்வு
11.01.2010

எமது குடும்பத் தலைவர் மறைந்த வேளையில் உடன் வந்து உதவியவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபத்தைத் தெரிவித்தவர்களுக்கும், துண்டுப்பிரசுரம் மூலம் கண்ணீர் அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து இன்று (10.02.2010) புதன்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மடத்தடி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
(சி/564606)
குடும்பத்தினர்.
தொ.பே: 0213219016
0213213299

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவின் கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக இடம்பெயர்ந்த மக்கள் குடியமர்த்தப்பட வேண்டும்

## யாழ்.வந்த கனேடியத் தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.10



வடக்கு, கிழக்கு பகுதிகளில் தமது வாழ்விடங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள், ஐக்கிய நாடுகள் சபையின் கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக மீள் குடியேற்றப்படுதல் அவசியமானது. அவ்வாறான மீள் குடியேற்றத்துக்கான உதவிகளை வழங்கக் கனேடிய அரசு தயாராக உள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள கனேடியத் தூதுவர் புறூஸ் லெவி தெரிவித்தார்.

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு வுக்கும், கனேடிய தூதுவருக்குமிடையிலான சந்திப்பு ஒன்று கியூடெக் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பின்போதே கனேடியத் தூதுவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கனடா நாட்டிலுள்ள அனைத்து விடயங்களையும் முன்மாதிரியாகப் பின்பற்றுதல் என்பது இலங்கைக்கு சாத்தியமற்றது. எனினும் எமது நாட்டு அனுபவங்களை உள்வாங்கி அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும்.

யாழ்ப்பாணத்தின் விவசாயம், மீன்பிடி, வர்த்தகம், கைத்தொழில் ஆகிய துறைகளுக்கு உதவுவதற்கு நாம் தயாராக இருக்கிறோம் இதற்கென கனடாவாழ் புலம் பெயர் மக்களுடனான ஒழுங்கிணைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் - என்றார்.

இந்தச் சந்திப்பின்போது கலந்து கொண்ட சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் வருமாறு:-

* வடக்கு, கிழக்கு பகுதிகளில் மீள் குடியமர்த்தும் திட்டம் துரிதப்படுத்தப் படுவதுடன் அந்த மக்களுக்கான வாழ்வாதார திட்டங்களும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

* யாழ். மாவட்டத்தில் 60 வீதமானோர் விவசாயத்துறையிலும் ,40 வீதமானவர்கள் மீன்பிடித்துறையிலும் ஈடுபட்டுள்ளனர். எனவே இவ்விருதுறைகளையும் அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய உதவிகளைக் கனடா அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.

* இலங்கை அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் மொழி உரிமையை நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

* யாழ்.பல்கலைக்கழக சமுதாய பிராந்தியத் திட்டமிடல் பட்டப்படிப்பு துறை மேம்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும்.

இந்தக் கலந்துரையாடலின்போது இந்தக் குழுவின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, இணைச் செயலாளர் எஸ்.பரமநாதன் மற்றும் குழுவின் உறுப்பினர்களான கே. பூரணச்சந்திரன், ஆர்.ராஜாராம், ஆர்.திலகரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர். (50-14)




# மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆங்கில, தமிழ் ஆசிரியர்கள் இல்லை

யாழ்ப்பாணம்,பெப்.10

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் தமிழ், ஆங்கில பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுவதாகப் பெற்றோர் தெரிவித்தனர்.

இப்பாடசாலையில் கடமையாற்றிய தமிழ்பாட, ஆங்கிலபாட ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதால் தரம் 3 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் ஆங்கில பாடமும் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் தமிழ் பாடமும் கற்பிக்கப்படுவதில்லையெனவும் இதனால் தமது பிள்ளைகளின் கல்வி நிலை பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தனர்.

(1-207)

# வடமராட்சிக் கல்வி வலயத்தில் 73 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

அச்சுவேலி, பெப்.10

ஒரே பாடசாலையில் 6 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து கடமையாற்றிய ஆசிரியர்களை வேறுபாடசாலைகளுக்கு இடம்மாற்றும் செயற்பாடு யாழ். மாவட்டத்தில் முதன் முதலாக வடமராட்சிக் கல்வி வலயத்தில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

கடந்த வாரம் வடமராட்சிக் கல்வி வலயத்தை சேர்ந்த ஆசிரியர்களின் இடமாற்றப்பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் 73 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்து ஏனைய ஆசிரியர்களுக்கான இடமாற்றப்பட்டியலை வெளியிடுவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

நீண்டகாலம் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக வடமராட்சிக் கல்விப்பணிப்பாளர் எஸ். செல்வராசா கருத்து தெரிவிக்கையில்,

கல்வி நிர்வாகத்தில் பொதுசன அபிப்பிராயத்துக்கு மதிப்பளிக்க வேண்டியது மிக மிக அவசியமாகும். அந்த வகையில் நீண்டகாலமாக ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய வேண்டும் என்பது பொதுசன அபிப்பிராயத்தின் மூலம் வலியுறுத்தப்படும் விடயமாக மாறியுள்ளது.

ஆசிரியர்கள் நீண்டகாலம் ஒரே பாடசாலையில் கடமையாற்றுவதன் மூலம் நன்மையும் உண்டு . தீமையும் உண்டு. இந்த நன்மையும் தீமையும் இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியரின் தனியாள் வேறுபாடும் குறித்த ஒரு பாடசாலைக்கு மட்டும் உரியதாக இல்லாமல் வேறுபாடசாலைகளையும் சென்றடைய வேண்டும் எனக் கூறினார்.

நீண்டகாலமாக ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கான இடமாற்றம் என்ற வகையில் வலிகாமம் கல்வி வலயத்தை சேர்ந்த 115 ஆசிரியர்களின் இடமாற்றப்பட்டியல் இந்தவாரம் வெளியாகியுள்ளது. இது முதலாவது இடமாற்றப்பட்டியல் என்றும் தொடர்ந்து ஏனைய ஆசிரியர்களுக்கும் இடமாற்றம் வழங்குவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

தென்மராட்சி கல்வி வலயமும் இந்த நீண்ட காலம் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கான இடமாற்றத்தை வழங்கியுள்ளது.

யாழ். கல்வி வலயத்தில் 6 வருடங்களுக்கு மேலும் 20 வருடங்களுக்கு உள்ளும் ஒரே பாட சாலையில் தொடர்ந்து கடமையாற்றிய ஆசிரியர்கள் என்ற வகையில் 650 மேற்பட்ட ஆசிரியர்கள் இனங்காணப்பட்டுள்ள போதிலும் அவர்களுக்கான இடமாற்றம் இதுவரை வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது. (50-11)



யாழ்.போதனா வைத்தியசாலையின் முன்னால் பிரதான வீதியில் பாதசாரிகள் கடவைக்குக் குறுக்கே சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தப் பட்டிருப்பதனைப் படத்தில் காணலாம். *(படம்: உமா, கரன்)*

# குறிகாட்டுவான் இறங்குதுறையில் குடி தண்ணீர் இல்லை

நெடுந்தீவு, பெப்.10

குறிகாட்டுவான் இறங்குதுறையில் குடிதண்ணீர் கிடைக்காமல் மக்கள் மீண்டும் சிரமங்களுக்கு உள்ளவதாகக் கூறப்படுகின்றது.

ஏற்கனவே குறிகாட்டுவான் துறைமுகத்தில் உள்ள குடி தண்ணீர் தொட்டிக்குத் தண்ணீர் வழங்கப்படுவதில்லை எனக் கூறப்பட்ட புகார்களை அடுத்து சில தினங்கள் நீர் வழங்கப்பட்டு வந்ததாகவும் இப்போது மீண்டும் மேற்படி தொட்டிக்கு தண்ணீர் வழங்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வேலணை பிரதேச சபை இது விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ரி-111)

# யாழ். நகர மத்தியில் அமைந்துள்ள 3 குளங்களை நவீன வசதிகளுடன் புனரமைப்பதற்கு ஏற்பாடு

## உல்லாசப் பயணிகளைக் கவருவதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம், பெப்.10

யாழ். நகரின் மத்தியில் அமைந்துள்ள மூன்று முக்கிய குளங்களைக் நவீன முறையில் புனரமைத்து உல்லாசப்பயணிகளைக் கவரும் இடமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் பணிப்புரைக்கு அமைய ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் யாழ். ஆரியகுளம், முற்றவெளிப் பகுதியில் அமைந்துள்ள புல்லுக்குளம் மற்றும் நகரின் மத்தியில் அமைந்துள்ள வண்ணாங்குளம் ஆகிய குளங்களே கழிவுகள் அகற்றப்பட்டு நவீன வசதிகளுடன் கூடியதாகக் குளங்களைச் சுற்றி இருக்கைகள், நிழற்குடைகள் என்பன அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது யாழ் குடாநாட்டில் உல்லாசப் பயணிகளின் வருகை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்ற நிலையில் இவர்களுக்கான பொழுதுபோக்கு மையங்கள் யாழ்ப்பாணத்தில் குறைவாக உள்ளன. எனவே இத்தகைய நடவடிக்கைகள் மூலம் உல்லாசப் பயணிகளின் வருகையை அதிகரிக்க முடியுமெனவும் கூறப்பட்டது.

கடந்த சனிக்கிழமை இப்பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஆளுநர் இது தொடர்பான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

ஏற்கனவே யாழ். மாநகரசபையினரினால் புல்லுக்குளத்தில் முளைத்துள்ள சல்பீனியா தாவரங்கள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (50-16)






யாழ்.பல்கலைக்கழக வணிகத் துறையின் முதலாவது பேராசிரியர் க.தேவராஜாவின் பாராட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இணுவில் பொது நூலகக் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக் கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் பேராசிரியர், தனது தாயார் திருமதி கந்தையாவுக்கு மாலை அணிவித்து ஆசீர்வாதம் பெறுவதை முதற் படத்திலும் இணுவில் மக்களின் சார்பில் முன்னாள் உடுவில் கிராம சபைத் தலைவர் ச.முத்துலிங்கம் பேராசிரியருக்கு விருதினை வழங்கிக் கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். அருகில் தேவா பொன்விழாச் சபை அமைப்பாளர் ஞான.திருக்கேதீஸ்வரனும் காணப் படுகின்றார். (50-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டிலுள்ள சகல உணவகங்களிலும் பண்டங்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையிலேயே விற்கப்பட வேண்டும்

## மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை என்று எச்சரிக்கிறார் அரசஅதிபர்

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல உணவகங்களிலும் கடந்த 9 ஆம் திகதி முதல் நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்பட வேண்டும்.இந்த நடைமுறை நேற்று அமுலுக் குக் கொண்டுவரபட்டுள்ளது.

உணவுப் பண்டங்களின் விலைகள் உணவகங்களிலும் பாவனையாளரின் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.

இந்த நடைமுறைகளைப் பின்பற்றாத உணவகங்களின் மீது பாவனையாளர் அதிகார சபையின் சட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறி வித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

உணவுப் பண்டங்களின் விற்பனை விலை தொடர்பான கலந்துரையாடல் கடந்த 5 ஆம் திகதி யாழ்.செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

இக் கலந்துரையாடலில் அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர்கள், பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகள் மற்றும் சமாதானத்திற்கும், நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் செயலாளர் ஆகியோரும் யாழ்ப்பாணம் வணிகர் கழகப் பிரதிநிதிகள், பாவனையாளர், ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதிகள், உணவகங்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தற்போது அரிசி, மா, சீனி, பால்மா, மரக்கறி என்பவற்றின் விலைகள் கணிசமான அளவு குறைவடைந்துள்ள பொழுதிலும் உணவகங்களில் உணவுப் பண்டங்களின் விலை குறைக்கப்படாமை அவதானிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் இக்கலந்துரையாடலில் தெரிவித்தார்.

மேலும் யாழ்.நகரைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், தனியார் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் மாணவர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள் மற்றும் பல்வேறு தேவைகளுக்காக தூர இடங்களில் இருந்து வருபவர்கள் மற்றும் தென்பகுதியில் இருந்து வருபவர்களும் உணவகங்களையே நாடுவதனால் இவர்களின் நலன்கருதி உணவுப் பண்டங்கள் விலைக் குறைப்புச் செய்யப்பட வேண்டும் எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து உணவுப் பண்டங்களின் விலைகளைக் குறைப்பது தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இதன்போது உணவகங்களின் பிரதிநிதிகளால் பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

பாவனையாளர்கள் கூடுதலான தரத்திலேயே உணவுப் பண்டங்கள், தேநீர் ஆகியவற்றை எதிர்பார்ப்பதனால் தரம் கூடிய அரிசி, தேயிலை பாவிக்கப்படுகின்றது.

தற்போது அரிசி, மா, மரக்கறி என்பவற்றின் விலைகள் குறைவடைந்துள்ள போதிலும் சீனி, மீன், விறகு போன்வற்றின் விலைகள் குறைவடையவில்லை.

| உணவுப் பண்டங்கள் | தீர்மானிக்கப்பட்ட விலை |
|---|---|
| சைவ மதிய உணவு (போதுமானளவு) | 60 ரூபா |
| சைவ மதிய உணவு (அளவானது) | 50 ரூபா |
| அசைவ மதிய உணவு (போதுமானளவு) | 90 ரூபா |
| வடை (பெரியது) | 20 ரூபா |
| வடை (நடுத்தரமானது) | 15 ரூபா |
| வடை (அளவானது) | 10 ரூபா |
| றோல்ஸ் (பெரியது) | 15 ரூபா |
| பற்றீஸ் | 10 ரூபா |
| றொட்டி | 10 ரூபா |
| தேநீர் | 10 ரூபா |
| பால் தேநீர் (பால்மா/பசுப்பால்) | 20ரூபா |
| இடியப்பம் | 4ரூபா |
| பிட்டு (அளவானது) | 10 ரூபா |
| தோசை | 10 ரூபா |
| அப்பம் (சோடி) | 15ரூபா |
| இட்லி (அளவின் பிரகாரம்) | 6 ரூபா,10ரூபா |

மேற்படி தெரிவிக்கப்பட்ட கருத்துக்களையும், தற்போதைய பொருள்களின் விலைகளையும் கவனத்தில் எடுத்து கீழ்க் குறிப்பிட்டவாறு உணவுப் பண்டங்களின் விலைகள் தீர்மானிக்கப்பட்டன.

நேற்றில் (09.02.2010) இருந்து மேற்படி நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் விற்பனை செய்யப்பட வேண்டும் எனவும், இவற்றின் விலை விவரம் சகல உணவகங்களிலும் பாவனையாளரின் பார்வைக்காக வைக்கப்பட வேண்டும் எனவும் அரசாங்க அதிபர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. இந்த நடைமுறையினைப் பின்பற்றாத உணவகங்கள் மீது பாவனையாளர்கள் அதிகார சபையின் சட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

உணவகங்களில் சமையல் செய்யும் இடம் மற்றும் அதனைத் தயாரிப்பவர்கள், பரிமாறுபவர்கள் சுத்தமாக இருக்க வேண்டும் எனவும் பரிமாறப்படும் இடம் வாடிக்கையாளர்களைக் கவரக்கூடிய விதத்தில் அழகாகவும், மிகவும் சுத்தமாகவும் இருக்க வேண்டும் எனவும் குடும்ப அங்கத்தவர்கள் ஒன்றாக வந்து உணவருந்தக் கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

சகல உணவகங்களும் மேற்குறிப்பிட்ட விலையில் விற்பனை செய்வதற்கு முன்வந்தமைக்கு நன்றி தெரிவிப்பதோடு யாழ்.வணிகர் கழகத் தலைவர் எவ்வாறான உதவிகளாயினும் தம்மிடம் கோருமிடத்து தாம் செய்வதற்குத் தயாராகவிருப்பதாகவும் அரசஅதிபர் தெரிவித்தார்.

எங்கள் மாவட்ட மக்களில் 75 சதவீதமானவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வருவதாகவும் அத்துடன் தற்போது தென்பகுதியில் இருந்து வருகைதருபவர்கள் கூடுதலாக இருப்பதனால் உணவகங்களில் உணவு உண்ணும் மக்களின் அளவு கூடுதலாக இருக்கின்ற காரணத்தினாலும் உணவுப்பண்டங்களை நீதியான, நியாயமான விலைகளில் விற்பனை செய்து உணவகங்களின் நன்மதிப்பைக் கட்டிக் காப்பாற்ற வேண்டும் எனவும் அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டார்.

தேவையேற்படும் பட்சத்தில் வியாபார நடவடிக்கைகள் தொடர்பாக தொலைபேசி மூலமோ அல்லது கடிதம் மூலமோ மாவட்டச் செயலகத்துடன் எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம் எனவும் அரச அதிபர் தெரிவித்தார். (50-09-224)




# மஹா சிவராத்திரி

*நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்தில் நாளை (11.02.2010) வியாழன் மாலை 4 மணிக்கு லச்ச நாம அர்ச்சனை பூர்த்தியும் விஷேட ஹோமம் நடைபெற்று உற்சவம் நடைபெறும்.*

*12.02.2010 வெள்ளிக்கிழமை சிவராத்திரி 4 சாம அபிஷேக பூஜைகள் நடைபெற்று நம்சாம லிங்கோற்ப காலத்தில் பெருமான் விறுஷவ வாகனத்தில் திருவீதியுலா நடைபெறும். அடியார்கள் சிவராத்திரி காலத்தில் ஆலயத் திருக்கேணியில் உள்ள பாபநாச புண்ணிய தீர்த்தம் எடுத்து பாபநாச லிங்க பெருமானுக்கு அபிஷேகம் செய்து சிவராத்திரி பூசை பலனை பெற்று சிவன் திருவருள் பெறுவோமாக.*



பிரதம குரு, பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவக் குருக்கள் (92371)

ஆலய அபிவிருத்திச் செயலகம்.



## காணி விற்பனைக்கு

உரும்பிராய் விளாத்தியடியில், விவசாயப் பயிற்சி நிலையத்திற்கு அண்மையில் முந்திரிகை செய்யக்கூடிய தேசி, தென்னைகள் நாட்டப்பட்ட அண்ணளவாக 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (பரப்பு 9.16)

தொடர்புகளுக்கு: பி.ப. 4மணிக்குப் பின்
தொ.பே: 021 222 8199, எந்நேரமும்: 0718475629.



# கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 741
சீட்டிழுப்பு திகதி 08.02.2010

எழுத்து: H

வெற்றி இலக்கங்கள்: 46 48 50 65

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 24,603,801.60 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 2,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 20,000/= | 13 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 2,000/= | 321 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000/= | 610 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 50/= | 15889 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரு. 40/= | 9108 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரு. 20/= | 226965 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரு. 20/= | 35863 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,927,330.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 25,270,817.60

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

செப்டெம்பர் 01ம் திகதியிலிருந்து லொத்தர் சீட்டிழுப்பின் நிகழ்ச்சிகள் தேசிய தொலைக்காட்சியில் இரவு 9.35ற்கு இடம்பெறும்.

தேசிய லொத்தர் சபை
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360

இணையதளம்: www.nlb.lk


## நற்சங்கம திறப்புவிழா

வடமராட்சி, நவிண்டில் கேம்பிறிஜ் கலாசாலையின் நாற்புலமையக நற்சங்கமத் திறப்புவிழா இன்று புதன்கிழமை பி.ப 2.30 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் க.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்துக்கல்லூரி முன்னாள் ஆசிரியர் தம்பையா வேலும்மயிலும் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினரர்களாக கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, யாழ்.பல்கலைக் கழக கணிதபுள்ளி விவரவியற்துறைத் தலைவர் கலாநிதி சி. ஸ்ரீசற்குணராசா, டாக்டர் கே.வேலும்மயிலும், வடமராட்சி கணனி வளநிலைய முகாமையாளர் இ.ஸ்ரீதரன், வடமராட்சி வலய ஆசிரிய ஆலோசகர் க.மகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (1-201)


**University of Jaffna-Sri Lanka**
**Faculty of Arts**
**DIPLOMA IN ENGLISH LANGUAGE TEACHING**
**ACADEMIC YEAR 2010/2011**

**CORRECTION**

Kindly make the following correction in the above advertisement which appeared in the Thinakkural and Uthayan on 20.01.2010

Admission requirements:

Conditions in clause 2 (a) should be corrected as follows:

a) The candidate should be a non graduate (**Trained** or untrained) English teacher with minimum of three years experience in English Language Teaching at Government / Private Schools at Primary/ Secondary levels.

Registrar,
08.02.2010

(சி/564700)



## கண்ணீர் அஞ்சலி



கடந்த 04.02.2010 அன்று இறைவனடி சேர்ந்த எமது பெரியப்பா

அமரர் **வேலுப்பிள்ளை தர்மராஜசிங்கம்**

அவர்களின் இறுதிக்கிரியைகள் நடைபெறும் இந்நாளில் (10.02.2010) அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் எமது நெஞ்சம் நெகிழ்ந்த அனுதாபங்களைப் பகிர்ந்து கொள்கின்றோம்.


இளவாலை வடக்கு,
இளவாலை.

(சி/564804)

பெறாமக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் உடுவில் மத்தி விளையாட்டுக்கழக அணியும், மருதனார்மடம் இராமநாதன் விளையாட்டுக் கழக அணியும் விறுவிறுப்பாக மோதிக் கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# பெகமுவ சென்றல், சென்.பற்றிக்ஸ் அணிகளுக்கிடையேயான பரபரப்பான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது

யாழ்ப்பாணம்.பெப்.10

'பெகமுவ சென்றல் கல்லூரிக்கும்' யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற கிரிக்கெட் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்திவருகின்ற 20 வயதுக்குட்பட்டோருக்கான தரம் II இற்கான கிரிக்கெட் போட்டித் தொடரில் கடந்த வெள்ளி மற்றும் சனி ஆகிய இரு தினங்களும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் பெகமுவ சென்றல் கல்லூரியும், சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெகமுவ சென்றல் கல்லூரி அணியினர் 36.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் திஸநாயக்க ஆட்டம் இழக்காமல் 50 ஓட்டங்களையும், அரியரெட்ண 18 ஓட்டங்களையும், டில்ரங்கா 17 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

சஜிந்திரன் 17.4 ஓவர்களில் பந்துவீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், எரிக்பிரதாப் 10 ஓவர்கள் பந்துவீசி 31 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், மைக்கல் 5 ஓவர்கள்பந்துவீசி 16ஓட்டங்களைக்கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், மிலாண்டோ ஆறு ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், றொபேட் 2 ஓவர்கள்பந்து வீசி 7 ஓட்டங்களைக்கொடுத்து ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் 60.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

121 ஓட்டங்களையே பெற்றது.

இதில் கபாஸ்கர் 32 ஓட்டங்களையும், ஜெகான், மைக்கல் ஆகியோர் தலா 15 ஓட்டங்களையும், மிலாண்டோ 12 ஓட்டங்களையும், கிளின்ரன் ஆட்டம் இழக்காமல் 10 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பெகமுவ சென்றல் கல்லூரி அணி வீரர்களான திஸநாயக்க 23.3 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், வீரசேகர 28 ஓவர்கள் பந்துவீசி 62 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், டிசில்வா இரண்டு ஓவர்கள் பந்துவீசி ஐந்து ஓட்டங்களைக் கொடுத்துஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இனிங்சிற்காக துடுப்பெடுத்தாடிய பெகமுவ சென்றல் கல்லூரி அணி 35 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அரியரட்ண 38 ஓட்டங்களையும், டிசில்வா 35 ஓட்டங்களையும், பாலசூரிய 32 ஓட்டங்களையும், தர்மபிரிய ஆட்டமிழக்காமல் 13ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

எம்.வி.கமில்ரன் 11 ஓவர்கள் பந்து வீசி ஏழு விக்கெட்டுக்களையும், றொபேட் 7 ஓவர்கள் பந்துவீசி ஒரு விக்கெட்டினையும், சஜிந்திரன் 7 ஓவர்கள் பந்துவீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

161 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனக் களமிறங்கிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி ஆட்ட நேர முடிவில் 63 ஓவர்களில் ஏழு விக்கெட்டினை இழந்து 134 ஓட்டங்களினை மட்டும் பெற்றுக் கொண்டது.

இதில் மிலாண்டோ 30 ஓட்டங்களையும், கமில்ரன் 20 ஓட்டங்களையும், ரீயூடர் 13 ஓட்டங்களையும், மைக்கல் ஆட்டம் இழக்காமல் 16 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பெகமுவ சென்றல் கல்லூரி அணி சார்பில் திஸநாயக்க 28 ஓவர்கள் பந்து வீசி மூன்று விக்கெட்டுக்களையும், வீரசேகர 24 ஓவர்கள் பந்துவீசி 52 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (04-23)

## வலிகாமம் வலயமட்ட மேசைப்பந்தாட்டப் போட்டி

வலி. வடக்கு,பெப்.10

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி உள்ளக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பளைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, அளவெட்டி அருணோதயக் கல்லூரி ஆகியனவும் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியனவும் சங்கானைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி என்பனவும் உடுவில் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் இதில் கலந்து கொள்ளவுள்ளன.

கோட்டமட்டத்தில் பங்குபற்றும் பாடசாலைகளின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுவதினால் போட்டிகள் வலய மட்டத்தில் இடம் பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (04-86)

# சகலதுறைகளிலும் ஜெரிக் துஷாந்த் ஜொலிக்க கொக்குவில் இந்துவை வென்றது மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம்,பெப்.10

ஜெரிக்துஷாந்தின் துல்லியமான பந்து வீச்சும், துடுப்பாட்டமும் கை கொடுக்க, யாழ்.மத்திய கல்லூரி அணி, இன்னிங்ஸ் மற்றும் 118 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

யாழ்.மத்திய கல்லூரியும், கொக்குவில் இந்துக் கல்லூரியும் 19 வயதுக்குட்பட்டோருக்கான அணிகளுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டி ஒன்றில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினர் 44.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் உத்தமகுமரன் 25 ஓட்டங்களையும், பந்துலன் 27 ஓட்டங்களையும், கார்த்திக் 17 ஓட்டங்களையும், ஜனதாஸ் 12 ஓட்டங்ளையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

யாழ். மத்திய கல்லூரி அணி சார்பில் தர்சன் 3.2 ஓவர்கள் பந்து வீசி, 17 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், கோகுலன் 11 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், ஜெரிக்துஷாந்த் 11 ஓவர்கள் பந்து வீசி 44 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 93.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 313 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் ஜெனேடின் 79 ஓட்டங்களையும், ஜெரிக்துஷாந்த் 67 ஓட்டங்களையும், எட்வேட்எடின் 55 ஓட்டங்களையும், ஜேம்ஸ்ஜன்சன் 45 ஓட்டங்களையும், திவகர் 12 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரியை சேர்ந்த ராகுலன் 22 ஓவர்கள் பந்து வீசி 72 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், ஜனதாஸ் 26 ஓவர்கள் பந்து வீசி 63 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 18.3 ஓவர்களிலேயே சகல விக்கெட்டுக்களையும் இழந்து 63 ஓட்டங்களை மட்டும் எடுத்து பரிதாபமாகத் தோற்றது.

இதில் உத்தமகுமரன் 12 ஓட்டங்களையும், பிரதிஸ் 23 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

யாழ். மத்திய கல்லூரி அணிசார்பில் வதுஷனன் ஒன்பது ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், ஜெரிக்துஷாந்த் 6 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், கோகுலன் 3 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனால் யாழ்.மத்திய கல்லூரி அணி ஒரு இனிங்ஸ் மற்றும் 118 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. (04-23)

## மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.10

மதிவதனன், ஜெயச்சித்திரா சகோதரரின் 15 ஆவது ஆண்டு ஞாபகார்த்தமாக நடத்தப்படும் மாபெரும் உள்ளரங்க விளையாட்டுப் போட்டியின் ஒரு அங்கமாக

யாழ். மத்திய கல்லூரியில் மேசைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 15,16 ஆம் திகதிகளில் பி.ப 2 மணியளவில் இடம் பெறவுள்ளது. (04-23)

## கட்டுவன் புலம் ம.வியின் மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்.பெப்.10

தெல்லிப்பளை, கட்டுவன்புலம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அதிபர் க.பத்மநாதன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

இதில் பிரதமவிருந்தினராக இலங்கை வங்கியின் காங்கேசன்துறை முகாமையாளர் செந்திநாதனும், சிறப்பு விருந்தினராகத் தெல்லிப்பளை-மல்லாகம் அரிமாக் கழகத்தின் தலைவர் வி.கமலநாதனும் கலந்துகொள்வர். (50-23)



பெகமுவ சென்றல் கல்லூரிக்கும் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் ஆட்டம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது. இதன் ஆரம்ப நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பெகமுவ சென்றல் கல்லூரி அதிபர் சமரவிக்கிரம, யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்திரு.ஜெறோ செல்வநாயகம் ஆகியோர் உரையாற்றுவதை முதல் இரண்டு படங்களிலும், பெகமுவ சென்றல் கல்லூரி அதிபர் சமரவிக்கிரமவுக்கு யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிவீரர்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தனித்துப் போட்டியிட்டால் ஐ.ம.சு.மு.வுக்கு சாதகம்

## அமைச்சர் முரளிதரன் நம்பிக்கை

கொழும்பு, பெப்.10

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தனித்துத் தேர்தலில் போட்டியிட்டால் அது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்குச் சாதகமானதாகவே அமையும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புத்தி ஜீவிகள் மற்றும் பிரபலங்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் களமிறக்கப்படுவார்கள்.

- என்று தேசநிர்மாண அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரி வித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் பெரும்பாலும் புத்திஜீவிகள் மற்றும் பிரபலங்களாகக் காணப்படுவார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்தில் நிலவி வரும் வன்முறைக் கலாசாரத்தை மக்கள் விரும்பவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஆயுதக் குழுக்களின் பிரசன்னத்தை மக்கள் நிராகரிக்கின்றனர். அமைதியான சுபீட்சமான முறையில் வாழ்வதனையே மக்கள் விரும்புகின்றனர். இந்நிலையில், எதிர்வரும் பொதுத் தேர்தலில் கல்விசார் தகமையுடைய நபர்களை மட்டும் தேர்தலில் களமிறக்கத் தீர்மானித்துள்ளோம்.

அவ்வாறான நபர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் ஜனாதிபதியுடன் இது குறித்து கலந்தாலோசிக்கப்படும்.

தமிழ் மற்றும் முஸ்லிம் வேட்பாளர்கள் போட்டியில் நிறுத்தப்படுவார்கள். சில மூத்த உறுப்பினர்களையும், பல புதிய முகங்களையும் இந்தத் தேர்தலில் களமிறக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சி)

## பிரேத பரிசோதனை தொடர்பான பயிற்சி வகுப்புக்கள்

யாழ்.மாவட்டத்தில் ஏற்படும் திடீர் மரணங்கள் தொடர்பாகப் பிரேத பரிசோதனைகள் மேற்கொள்வதற்கான பயிற்சி வகுப்புக்கள் இம்மாவட்டத்திலுள்ள வைத்திய அதிகாரிகள் மற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு கட்டம், கட்டமாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் ஏற்பாட்டில் விரைவில் நடத்தப்பட வுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

ஆதார வைத்தியசாலைகளான பருத்தித்துறை, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை ஆகியவற்றிலும் பிரிவு வைத்தியசாலையான சங்கானையிலும் சேவையாற்றும் மாவட்ட வைத்திய அதிகாரிகள் மற்றும் வைத்திய அதிகாரிகளுக்கு முதற்கட்டமாக இரண்டு நாள்கள் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன. இவர்களுக்கான செயன்முறைப் பயிற்சிகள் யாழ். போதனா வைத்தியசாலையில் வழங்கப்படும். அத்துடன் இவ் வைத்தியசாலைகளில் உள்ள சவச்சாலையில் பிரேத பரிசோதனை நடாத்துவதற்குரிய உபகரணங்களும் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரி-300)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 27.03.1938
உதிர்வு: 06.02.2009

அமரர்
முருகேசு நடராசா
(கருங்காலி காரைநகர்)
திதி: துவாதசி

பாசத்தின் உறைவிடமாய்
அன்பிற்கோர் இலக்கணமாய் இருந்த
எம் அம்மப்பாவே எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவில் நாங்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய வாரிவளவு
கற்பக விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்

தகவல்:
மகள், மருமகன் (சிறி),
பேரப்பிள்ளைகள்.

வாரிவளவு, காரைநகர். (92358)


# தனியார் ஆய்வுகூடப் பரிசோதனை அறிக்கைகளை அரச வைத்தியசாலைகளில் ஏற்பதற்கு அனுமதி

## சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, பெப். 10

ஆய்வுகூட வசதி இல்லாத அரச வைத்தியசாலைகளுக்கு சிகிச்சை பெற வரும் நோயாளர்களின் சிறுநீர் மற்றும் இரத்த மாதிரிகளை உடனுக்குடன் தனியார் ஆய்வு கூடங்களினூடாகப் பரிசோதனை செய்ய சுகாதாரப் பராமரிப்பு, போஷாக்குத் துறை அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இதன் நிமித்தம் ஆய்வுகூட வசதியைக் கொண்டிராத வைத்தியசாலைகளுக்கு நிதியொதுக்கீடுகளை வழங்கவும் அமைச்சு முடிவு செய்திருக்கின்றது.

சுகாதாரப் பராமரிப்பு, போஷாக்குத் துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் ஆலோசனைக்கு அமைய இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தற்போது ஆய்வுகூட வசதி இல்லாத வைத்தியசாலைகளுக்குச் சிகிச்சை பெற வரும் நோயாளர்கள், ஆய்வு கூட வசதியைக் கொண்ட வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இல்லாவிடில் நோயாளரிடமிருந்து பெறப்படும் இரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரிகள் ஆய்வுகூட வசதியைக் கொண்டிருக்கும் வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டு அறிக்கைகள் பெறப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளின் மூலம் நோயாளர்களுக்கு சிறந்த சுகாதார சேவை கிடைப்பதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. இத்தாமதங்களை நிவர்த்தி செய்யும் வகையிலேயே அமைச்சர் இந்நடவடிக்கையை மேற்கொண்டிருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)


## கண்ணீர் அஞ்சலி



எமது சக நண்பன்
Dr.அ.கிஷந்தா
அவர்களின் அன்புத் தந்தை
கனகசபாபதி
அம்சதேவா
அவர்கள் காலமான செய்தி அறிந்து
ஆழ்ந்த கவலை அடைவதுடன்
அன்னாரின் ஆத்மசாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
மருத்துவர்கள்,
23ஆம் அணி, யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடம்.
(92364)

## மரண அறிவித்தல்

### தொமிங்கு தேவசகாயம்பிள்ளை

(நாட்டுக் கூத்து அண்ணாவியார்)



சீந்தில் பந்தல், இளவாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தொமிங்கு தேவசகாயம்பிள்ளை நேற்று (09.02.2010) செவ்வாய்க் கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (10.02.2010) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு போயிட்டி புனித லூர்து அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி மாகிறெட்றாசி
(மனைவி).

சீந்தில் பந்தல்,
இளவாலை. (92361)


## மானிப்பாய் ஆஸ்பத்திரியில் துப்புரவுப் பணிகள்

நவாலி,பெப்.10

இலகு வேலைத்திட்டத்தின் கீழ் ஆனைக்கோட்டை (ஜே/133) கிராம சேவையாளர் பிரிவில் மானிப்பாய் பிரதேசஅரசினர் வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட மகப்பேற்று மனையின் சுற்றுப்புறங்கள் இப்பிரிவு கிராம சேவையாளர் எ.நிசாந்தன் தலைமையில் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

துப்புரவுப் பணியில் ஈடுபட்டுவரும் மக்களுக்கு வைத்தியசாலை அபிவிருத்தி சபையினர் குளிர்பானங்களை வழங்கி வருகின்றனர். (ரி-100)


## TVகள் விற்பனைக்கு

Sony TVகள் 21" G 21 Q, -16000/=, 2184-14000/=, Sony wega 19000/= உட்பட 25 TVகளும், குளிர்சாதனப் பெட்டிகளும், றேடியோக்களும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- R.மகேஸ்வரன் (அப்பன் போர்பனி)
சீனிப்புளியடி, ஆரம்பப்பாடசாலை அருகில்.
K.K.S.வீதி, இணுவில். தொ.பே: 0771393670

## உடனடி வேலைவாய்ப்பு
## Walk in Interviews

★Accountant
கணக்காளர்
★Computer Technician
கணனித் தொழில்நுட்பவியலாளர்
★Marketing Executive
சந்தைப்படுத்தல் பிரதிநிதி

வயதெல்லை :
20-35 வயதிற்கு உட்பட்டவர்கள்
தகைமை : ஒரு வருட அனுபவம்
(22.02.2010) திங்கள் பிற்பகல் 2 மணியளவில் இருந்து நேர்முகத் தேர்வு இடம்பெறும்.

PC House (pvt) ltd
No: 01, Stanly Road, Jaffna.
தொ.பே: 0214920572, 0214920338
(ரி-564693)

World's No 1

Abans
நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன் இலவச
விநியோகசேவையைப் பெற்றிட




Midea
Electro Mart
Authorized Dealer for Abans Ltd.
No: 1-I, 1-H, Stanley Road,
Jaffna,Sri Lanka.
e-mail: midea21@gmail.com Tel: 021-2224566 Fax: 021-2224566


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**01.06.1988**

* யாழ்.குடாநாட்டில் கடந்த காலத்தில் இராணுவ நடவடிக்கைகளால் அங்கவீனமானோர்,படுகாயமடைந்தோருக்கு நட்ட ஈடு வழங்க அரசு தீர் மானம்.
* இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய பாதுகாப்பு அமைச்சரை இலங்கை அமைச்சர் தொண்டமான் சந்தித்துப் பேச்சு.

**02.06.1988**

* இன்று நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களைக் குழப்பும் நோக்கில் மேற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் வன்செயல்கள் ரயில்கள், பஸ்கள், கடைகள் எரிப்பு. குழப்பம் விளைவிப் போரைக் கண்ட இடத்தில் சுட அரசு உத்தரவு.
* நாடு கஷ்ட நிலையிலிருந்து மீள வேண்டுமானால் வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென சுதந்திரக் கட்சித் தலைவி சிறி மாவோ தெரிவிப்பு

**03.06.1988**

* த்மிழகத்தில் தங்கியிருக்கும் ஈழத் தமிழர் போராளிகளை அங்கிருந்து முற்றாக உடனடியாக வெளியேற்ற தமிழ்நாடு அரசு நடவடிக்கை.
* மேல் மாகாணத்திலும் மத்திய மாகாணத்திலும் திட்டமிட்டபடி மாகாண சபைத் தேர்தல்கள் நடந்து முடிந்தன.

**04.06.1988**

* இந்திய அமைதிப் படையின் ஒரு பிரிவினர் ஆயுத தளபாடங்களுடன் அடுத்த வாரம் நாடு திரும்ப இருப்பதாக தெரிவிப்பு.

**05.06.1988**

* இந்தியா ஈழத்தமிழர்களின் பாதுகாவலராக இருக்கும் என ஈழத்தமிழர் நம்பினர். ஆனால் இந்தியப்படை அவர்களைத் துன்புறுத்தி வருகிறது என விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் தெரிவிப்பு.
* வட்டக்கச்சியில் இடம் பெற்ற நிலக் கண்ணி வெடித் தாக்குதலில் இந்திய அமைதிப்படையைச் சேர்ந்த பதினெட்டு இராணுவ வீரர்கள் உயிரிழப்பு.

**06.06.1988**

* செத்துக் கொண்டிருக்கும் ஈழத்தமிழினத்தைக் காப்பாற்ற முன் வருமாறு அகில இந்திய அரசியல் தலைவர்களுக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி வேண்டுகோள் விடுவிப்பு.
* சட்ட விரோதமான இந்த அரசைத் தொடர்ந்து பதவியில் இருக்க அனுமதிக்கக் கூடாது என ஜே.வி.பி. தலைவர் றோஹண விஜே வீர தெரிவிப்பு.
* வவுனியா மாவட்ட பதில் நீதிவான் வில்வராஜா இனந்தெரியாதோரால் சுட்டுக் கொலை.

**07.06.1988**

* யாழ். பல்கலைக்கழக பதில் துணை வேந்தர் பேராசிரியர் கணேசலிங்கம் அமைதிப்படை அதிகாரிகளினால் அகௌரவப்படுத்தப்பட்டமைக்கு, அமைதிப் படையின் யாழ். நகர கொமாண்டர் மன்னிப்புக் கோரினார்.
* மேல் மாகாண ஆளுநராக முன்னாள் பிரதம நீதியரசர் எஸ். சர்வானந்தா நியமனம்.
* பெரிய நாடாளுமன்றத் தேர்தல் மாவட்டங்களில் இரண்டு அல்லது மூன்று பிராந்தியங்களாக பிரிக்க அரசு முடிவு.அதற்காக எல்லை நிர்ணயக்குழு ஒன்று ஜனாதிபதியால் நியமிப்பு.

**08.06.1988**

* இந்திய அமைதிப்படையின் ஒரு பிரிவு போர்க்கருவிகள், தளபாடங்கள் சகிதம் திருகோணமலையிலிருந்து இந்தியா திரும்பியது.
* இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளின் புனர்வாழ்வுப் பணிக்கென மேற்கு ஜேர்மன் அரசு 36 லட்சம் ரூபா நிதி உதவி.
* தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை திறக்கக் கூடிய சூழ்நிலை தற்போது ஏற்பட வில்லை என கைத்தொழில் அமைச்சு அதிகாரி தெரிவிப்பு.

**09.06.1988**

* ஈழத்தமிழ் மக்களது குறைந்த பட்சக் கோரிக்கைகளை ஏற்று உடனடியாக போர் நிறுத்தம் செய்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு பிரதமர் ராஜீவ்காந்தியிடம் நெடுமாறன் மற்றும் வீரமணி கோரிக்கை.
* தென் மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் இன்றைய தினம் வாக்களிக்கச் செல்லாது பொது மக்கள் அனைவரும் வீடுகளுக்குள்ளேயே தங்கியிருக்க வேண்டுமென ஜே.வி.பி எச்சரிக்கை.
* அடுத்த சில தினங்களில் இந்தியா திரும் பவிருக்கும் அமைதிப் படை வீரர்களின் எண்ணிக்கை மற்றும் விவரங்களை தற்போது வெளியிட இயலாது எனதேசிய பாதுகாப்பு அமைச்சர் நாடாளு மன்றத்தில் தெரிவிப்பு.

**12.06.1988**

* விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சிவில் நிர்வாக சீர் குலைப்பு நடவடிக்கைகளை விடுத்து 5 தினங்களாக வவுனியாவிலுள்ள அரச திணைக்களங்கள் இயங்கவில்லை.
* ஜே.வி.பியினர் தேசிய நீரோட்டத்தில் கலந்து கொள்ள இன்னமும் காலம் பிந்தி விடவில்லை என தேசிய பாதுகாப்பு அமைச்சர் அதுலத் முதலி நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.
* இதுவரை நடந்தவற்றை மறந்து விடுதலைப்புலிகளுக்கு இந்திய அரசு நம்பிக்கைக் கரம் நீட்ட வேண்டுமென வடக்கு - கிழக்கு பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழு கோரிக்கை.

**13.06.1988**

* நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் வருடாந்த உற்சவ காலத்தில் இதுவரை இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட பணியினை இம் முறை இந்திய அமைதிப் படையினர் ஆற்ற நடவடிக்கை.
* தென்னிலங்கையில் கடந்த சில நாள்களாக இடம் பெற்ற வன் செயல்களால் அரசுக்கு 10 கோடி ரூபாவுக்கு மேல் சேதம் ஏற்பட்ட தாக தெரிவிப்பு.

**14.06.1988**

* உடனடி யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தை ஆகியவற்றை தமிழ் பேசும் மக்களும் ஏகோபித்து ஆதரிக்கிறார்கள் என்பதை வெளிப் படுத்தவே வெள்ளைக் கொடித் தினப் போராட்டம் ஒழுங்கு செய்யப் பட்டிருப்பதாக யாழ். மாநகர ஆணையாளர் இந்திய அமைதிப் படைத் தளபதிக்கு விளக்கம்.
* எதிர் காலத்தில் விதை உருளைக் கிழங்கு இறக்குமதி நிறுத்தப்படுமென விவசாய அபிவிருத்தி ஆராய்ச் சித் துறை அமைச்சர் சந்திரா பண் டார தெரிவிப்பு.

**15.06.1988**

* வடக்கு -கிழக்கில் அமைதி திரும்ப வேண்டுமானால் இந்திய அரசு நிபந்தனை எதுவுமின்றி யுத்தநிறுத்தம் செய்து விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும் என புளொட் அமைப்பின் செயலதிபர் உமா மகேஸ்வரன் தெரிவிப்பு.
* இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க இந்திய அரசு உதவ வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழக முன்னேற்ற முன்னணித் தலைவர் நடிகர் சிவாஜி கணேசன் சென்னையில் இன்று உண்ணாவிரதம் இருக்கிறார்.
* யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை என்பவற்றை வற்புறுத்தி ஈரோஸ் அமைப்பு வடமராட்சியில் வீதி மறியல், ஊர்வலங்கள் என்பவற்றுக்கு ஏற்பாடு.

# உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனைபுரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களது கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## சௌமியா முருகையா

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

**கலைப் பிரிவு- 2ஏ,பி**

நான் தரம் 6 முதல் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கற்று வருகிறேன்.இப்பெறுபேற்றைப் பெற உதவிய கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

எனது இப்பேறுபேற்றிக்கு இறையருள் முக்கிய காரணமாக அமைந்தது.எனது பெற்றோர்கள் எனது கல்வி முன்னேற்றத்திற்கு மிகவும் உறுதுணையாக இருந்ததுடன் எனது பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் வழிகாட்டல் தந்து உதவினார்கள்.

சிறந்த சமூக சேவையாளராக வருவதே எனது எதிர்கால இலட்சியம் ஆகும்.



## மகாராசா தணிகரன்

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

**கலைப்பிரிவு- 2ஏ,பி**

நான் தெரிவு செய்த பாடத்துறையில் எந்தவித கடினம் இன்றி கல்வி கற்று இப்பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ள உதவிய ஆசிரியர்களுக்கு முதற்கண் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் எனது கல்வித்துறை மட்டுமன்றி விளையாட்டுத்துறையிலும் ஈடுபட எனது கல்லூரியே சிறப்பாக அமைந்திருந்தது எனக் கூறினால் அது மிகையாகாது.

நான் எனது கல்வித்தகைமைக்கேற்ப சிறந்த தொழிலைப் பெற்றுக்கொள்வதே எனது எதிர்கால இலட்சியம்.



## சிவசுதன் நிஷாந்தினி

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

**கலைப்பிரிவு- 2ஏ,பி**

கடவுளின் கிருபை,தனியார் கல்வி நிறுவனம்,பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர், சகோதரர்கள், நண்பர்கள் ஆகியோர் எனது வெற்றிக்கு பெரும் பங்காற்றினார்கள்.

கல்லூரியின் பங்களிப்பு என்னும் போது கல்லூரி ஆசிரியர்களின் வழிகாட்டலே என் உயர்தர வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

சிறப்பாக பாடசாலையின் நூலகமும், தன்னம்பிக்கையுமே கல்லூரித் தாயின் பங்களிப்பு அதுமட்டுமன்றி பரீட்சைக்கான வழிகாட்டலுமாகும்.

எதிர்காலத்தில் சிறந்த வரலாற்றுத்துறை விரிவுரையாளராக வர வேண்டும் என்பதே எனது இலட்சியமாகும்.



## மயூரதி அருணாசலம்

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**


**கலைப்பிரிவு- ஏ,2பி**

நான் தரம்1-5வரை கல்வியில் சண்முகானந்தா வித்தியாலயத்திலும் பின் இப் பாடசாலையில் தரம் 13வரை கல்வி கற்றேன்.

பெருங்குளப்பிள்ளையாரின் அருளுக்கு நன்றி கூறிக் கொண்டு எனது குடும்பத்தில் அப்பா ஒரு விவசாயி. அவரால் வேலை செய்ய முடியாது. எனது அம்மா நான் படிக்க வேண்டும் என்பதற்காக மிகவும் கஷ்டப்பட்டார். எனது இப் பெறுபேற்றுக்கு முதற்காரணம் முழுக்காரணம் எனது அண்ணா அ.மயூரன். அவர் வேலை நீக்கம் காரணமாக கூலி வேலை செய்து தன்னுடைய நிலைக்கு தம்பியும் தங்கையும் வரக்கூடாது என்பதற்காக பல வழிகளிலும் முயற்சி செய்தார். மற்றும் பத்திரிகைக் குறிப்புக்களையும் பாடக்குறிப்புக் களையும் தந்துதவியவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

எமது பிரதேசங்களுக்கு சிறந்த சமூக சேவையாளராக வர வேண்டும் என்பதே எனது விருப்பம்.

எனக்கு கல்வி கற்றுத்தந்த ஆசிரியர்களுக்கும் குறிப்பாக உயர்தரத்தில் கற்பித்த வகுப்பாசிரியர்களிற்கும், இப் பாடசாலைக்கும், அதிபர், ஆசிரியர்களிற்கும் எனது நன்றிகளைத் தாழ்மையுடன் கூறிக்கொள்கிறேன்.



## சிந்துஜா செல்லத்துரை

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

**கலைப்பிரிவு- ஏ,2பி**

தரம் 6-13 வரை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கல்வி கற்றேன் எனக்கு சிறுவயதில் இருந்து கல்வி கற்பித்த ஆசிரியர்களும் முக்கியமாக உயர்தர வகுப்பில் கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கு எனது நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன். எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். முக்கியமாக என்னுடைய அக்காவிற்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனது பாடசாலையின் அதிபர்,உப அதிபர்களுக்கும் எனது நன்றிகள். எமக்கு படிப்பதற்கு ஒழுங்கான சூழலை ஏற்படுத்தி தந்தமைக்காக பாடசாலைச் சமூகத்தினருக்கும், மற்றும் வகுப்பாசிரியருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் எதிர்காலத்தில் சிறந்த ஒரு கல்வியாளராகி எனது சமூகத்திற்கு தொண்டாற்ற வேண்டும் என்பதே என்னுடைய எதிர்கால இலட்சியமாகும்.

**சந்திப்பு: இந்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## இராமநாதன் நுண்கலைக் கழகம்
## பல்கலைக்கழக அனுமதி - 2009/2010
## தகுதிகாண் பரீட்சை
### நுண்கலைமாணி - இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்

மேற்படி நான்கு வருட பட்டப்படிப்புக் கற்கை நெறிகளுக்கு அனுமதிபெற விரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 01.03.2010ஆம் திகதிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுமதிக்கான பொது நிபந்தனைகள்**

**அனுமதிக்கான தகைமைகள்:**

சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிகளில் யாதேனுமொன்றைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2009ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் தெரிவு செய்ய விரும்பும் பட்ட பாடநெறிக்குரிய பாடத்தில் அதாவது சங்கீதம், கர்நாடகம் அல்லது நடனம்-பரதம் அல்லது சித்திரக்கலையில் ஆகக் குறைந்தது திறமைச் சித்தியும் (C) மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக் குறைந்தது சாதாரணதர சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும்.

**தகுதிகாண் பரீட்சை**

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை உள்ளடங்கிய தகுதிகாண் பரீட்சைக்கு (Aptitud Test) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தோற்றுதல் வேண்டும்.

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்:**

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிவிண்ணப்பப் படிவத்தை A4 தாளில் தயாரித்தோ அல்லது யாழ்ப்பாண பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் பெற்றோ அல்லது www.jfn.ac.lkஎன்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணைய தளத்தில் இருந்து பிரதி செய்தோ தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா.150 ஐ ஏதாவது ஒரு மக்கள் வங்கிக்கிளையில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளை கணக்கு இல.162-1-62-090501-3 இல் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுடன் அதிபர் அல்லது சமாதான நீதிவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த உயர்தர பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோ பிரதியும் அனுப்பப்படல் வேண்டும். பரீட்சைப்பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக்கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதிசெய்யப்படவேண்டும்.

விண்ணப்பதாரிகள் சுய விலாசம் இடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட 23× 10 ச.மீ அளவுள்ள கடித உறையை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஆற்றுகை/ நேர்முகப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 01.03.2010 ஆம் திகதிக்கு முன்னதாக உதவிப் பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக் குறைந்த தகைமையைக் கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச் சீட்டு சமர்ப்பிக்கப் படாததும், பெறுபேற்று பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத்திகதிக்குள் கிடைக்கப்பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண் 021 222 6714.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். *08.02.2010*

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## இராமநாதன் நுண்கலைக் கழகம்
## பல்கலைக்கழக அனுமதி - 2009/2010
### நுண்கலைமாணி - இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்
### தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழிலும் ஆங்கிலத்திலும்)

முதல் எழுத்து குறிக்கும் பெயர்

தேசிய அடையாள அட்டை.இல:

நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்)

தொலைபேசி இல.

2.க.பொ.த.(உ.த) பரீட்சை பெறுபேறு - 2009
சுட்டிலக்கம்: ☐ Zபுள்ளி: ☐ பொதுச் சாதாரண பரீட்சை புள்ளி ☐

| பாடம் | தரம் | மொழி மூலம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |

3.பெற்றோர்/ பாதுகாவலர் பெயர்
முகவரி: (ஆங்கிலத்தில்)

4.விண்ணப்பிக்கும் பாடநெறி
(தெரிவிற்கு ✓ இடுக)
இசை ☐ நடனம் ☐ சித்திரமும் வடிவமைப்பும் ☐

5.சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள்
1.பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ☐
2.உறுதிப்படுத்திய 2009 க.பொ.த. (உ.த) பரீட்சை பெறுபேறு சான்றிதழ் (Z புள்ளி/ மாவட்டம் உள்ளடங்கலாக) ☐
3.பெயர் மாற்றம் செய்யின் அதனை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம் ☐

என்னால் தரப்பட்ட மேற்படி விவரங்கள் யாவும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.

.............. ..............................................
திகதி. விண்ணப்பதாரியின் கையொப்பம்

என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.
திகதி பதவி முத்திரை பாடசாலை அதிபர்/ சமாதான நீதிவான் கையொப்பம்.
(சி/564801)


## தென்மராட்சி வலயத்தில் 67 ஆசிரியர்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,பெப்.10

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுகளில் ஏழு வருடங்கள் தொடர்ச்சியாகக் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு உள்ளக இடமாற்றல் வலயக் கல்வி அலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

உடனடியாகச் செயற்படும் வண்ணம் ஆரம்பப் பிரிவைச் சேர்ந்த 67 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

## ஆய்வுகூட உத்தியோகத்தர் சாவகச்சேரிக்கு நியமனம்

யாழ்ப்பாணம்,பெப்.10

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு ஆய்வுகூட உத்தியோகத்தர் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டு நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

வைத்தியசாலையில் ஆய்வுகூட உதவியாளர் இல்லாததால் நோயாளர்கள் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் தனியார் ஆய்வுகூடங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு வந்தனர்.

ஆய்வுகூடத்திற்குரிய பொருள்கள் வந்து சேர்ந்ததும் நோயாளர்கள் வைத்தியசாலையிலேயே பரிசோதனைகளை மேற்கொள்ளலாமென தெரிவிக்கப்பட்டது.

வைத்தியசாலை நோயாளர் நலன் கருதி யாழ்.போதனா வைத்தியசாலை நடமாடும் ஆய்வு கூடங்களும் வாரத்தில் திங்கள், சனி ஆகிய நாள்களில் வந்து செல்வதும் குறிப்பிடத்தக்கது. (1-207)

## வரம்பிலிருந்து வீழ்ந்தவர் கால்முறிந்து ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,பெப்.10

வயல் பார்க்கச் சென்றவர் வரம்பிலிருந்து தவறி வீழ்ந்து கால் முறிந்தது.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சரசாலையில் இடம்பெற்றது.

சரசாலை தெற்கைச் சேர்ந்த முருகேசு சண்முகதாஸ் (வயது 46) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (1-207)

## நீதிபதிக்கு பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம்,பெப்.10

சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற அ.பிரேமசங்கருக்கு பிரதேச மக்களால் பிரிவுபசார விழா நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உ ள்ள தென்மராட்சி கலைமன்ற மண்டபத்தில் பிரிவுபசார விழா நடத்தப்படவுள்ளது.

(1-207)


## மலேசியா விசா

மலேசியாநாட்டிற்குசிற்றிசன் பெற்றுபோகவிரும்புகிறீர்களா?
இதோ அரிய சந்தர்ப்பம்
★ குடும்பமாக கூடியிருப்பதற்கு (ரெசிடன் விசா)
★ வியாபாரம் செய்வதற்கு (பிஸினஸ் விசா)
★ தொழில் வாய்ப்புக்கு (வேர்க் விசா)
★ சுற்றிப்பார்ப்பதற்கு (டூரிஸ்ட் விசா)
★ நீங்கள் மலேசியா நாட்டு பிரஜையை திருமணம் செய்து சிற்றிசன் பெறுவதற்கும் ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தொடர்பு 077 6611783

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஈச்சமோட்டை வீதியிலுள்ள 1½ பரப்புக் காணியுடன் சேர்ந்த சகல வசதிகளுமுள்ள 4 அறைகளுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு: 021 222 7412
(92368)

## வீடு தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அலுவலக பாவனைக்கு பகுதியாகவோ, முழுமையாகவோ வீடு தேவை.
தொடர்புகளுக்கு: 0777563145
(92372)


## சாவகச்சேரி ஆஸ்பத்திரி வளாகத்தை சுற்றி மதில்

யாழ்ப்பாணம்,பெப்.10

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தைச் சுற்றி மதில் அமைக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

ஏழு ஏக்கர் பரப்பளவுடைய வளாகத்தைச் சுற்றி மதில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஏற்பாட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை வளாகத்தைச் சுற்றி மதில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் கட்டாக்காலி கால் நடைகளின் தொல்லை நீங்கியுள்ளது. (1-207)


## ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 601240307 முதல் 601257973 வரை. சீட்டிழுப்பு இல. 621 திகதி 08-02-2010

வெற்றி எண்கள்
08 29 38 48 B (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 13,863,640/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 13,863,640/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 09 | 2,000/= | 18,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 400 | 1,000/= | 400,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 648 | 1,000/= | 648,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15780 | 60/= | 946,800/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7411 | 40/= | 296,440/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 185489 | 20/= | 3,709,780/= |
| | | மொத்தம் ரூ. | 6,819,020/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - J.M.D.L. கிங்ஸ்லி ஜயசேகர - மீறுவன்கொடை.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - G.L. மஹேஸ் ரத்நாயக்க - வெலிவேரிய.

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,219,020/=

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மொணராகலை | 601241773-5-31 |
| புத்தளம் | 601247700-6-36 |
| அம்பாறை | 601248372-2-27 |
| குருணாகல் | 601240464-9-02 |
| மாத்தறை | 601252060-3-10 |
| இரத்தினபுரி | 601246291-7-42 |
| கண்டி | 601252485-9-42 |
| காலி | 601255953-8-20 |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட
ரூ. 14,365,330/=

தொடர் இல. 701216879 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 பெப்ரவரி 11 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்


# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை தர்மராஜசிங்கம்



இளவாலை காடிவளையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தர்மராஜசிங்கம் அவர்கள் 04.02.2010 அன்று நைஜீரியாவில் காலமானார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும் காயத்திரி, துஷ்யந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் தம்பிப்பிள்ளை - அருமைப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான மகாதேவன், குணசிங்கம், பாலசிங்கம், சிவபாக்கியம், செல்வபாக்கியம், கமலாம்பிகை மற்றும் சரஸ்வதி, நவரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பத்மராஜ், மலரவன் ஆகியோரின் மாமனாரும் பவின், ஹரிஷா, சாளினா ஆகியோரின் பேரனும் தவமலர், கோமதி, பானுமதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.02.2010) புதன் கிழமை காடிவளை இளவாலையிலுள்ள அவரின் இல்லத்தில் பி.ப. 4 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காக முள்ளானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காடிவளை, தகவல்:
இளவாலை. (சி/564803) த.கமலாதேவி (மனைவி).

## செல்லத்துரை சிவபாக்கியம்



ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவி சிவபாக்கியம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலம் சென்ற செல்லப்பா -கனகம்மா தம்பதியினரின் அன்பு மகளும் சண்முகராசாவின் அன்புத்தாயும் ராணியின் அன்பு மாமியும் காலம் சென்ற நல்லம்மா சபாரெட்ணம் காலம் சென்ற குணரெத்தினம் காலம் சென்ற ராசிலிங்கம், வடிவம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாஸ்கரன், நந்தினி, அமுதினி, தயாளினி, சசிகரன், வாசுகி, சுந்தரகுமார் சிவபாலன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் யாதவன், தனுசன், தனுசியா, அபிராம், மதுமிகா, மதுசன், ஆபிசா ஆகியோரின் பூட்டியுமாவார். அன்னாரின் பூதவுடல் இலக்கம் 20/2, புங்கங்குளம் வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் இருந்து இன்று 10.02.2010 புதன்கிழமை மு.ப. 10மணிக்கு தகனக்கிரியைக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

20/2, புங்கங்குளம் வீதி, தகவல்:
யாழ்ப்பாணம். (92373) இராசேந்திரகுமார் (குஞ்சுத்தம்பி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்போக நெற்செய்கை அமோக விளைச்சல்; அறுவடையில் ஆர்வத்துடன் ஈடுபடும் விவசாயிகள்

யாழ்ப்பாணம், பெப்.10

யாழ். மாவட்டங்களில் விவசாயிகளினால் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற் செய்கையின் அறுவடை தற்போது ஆரம்பாமாகியுள்ளது.

இம்முறை வயல்களில் அமோக விளைச்சல் கிடைத்துள்ளமையால் விவசாயிகள் ஆர்வத்துடன் அறுவடையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பெரும்பாலான வயல் நிலங்களில் நெல் அறுவடைப் பணிகள் தற்போது மும்முரமாக இடம்பெற்று வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

சில வயல்களில் நெற்கதிர்கள் பச்சையாக உள்ளமையால் அறுவடை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சில விவசாயிகள் இப்போதும் நெற்பயிர்களுக்கு நீர் இறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதையும் காணமுடிகின்றது.

சென்ற ஆண்டின் பெரும்போக நெற்செய்கை காலம் பிந்தியே மேற்கொள்ளப்பட்டது. அதற்கேற்ப நல்ல மழையும் சரியான நேரத்தில் கிடைத்தது.

ஆகையால் இம்முறை அதிகளவு விளைச்சல் கிடைத்துள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.(50-224)

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்ப்பாணத்தில் மக்களைப் பீடித்து வரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அனைவரதும் ஒத்துழைப்புத் தேவை.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆர்.கேதீஸ்வரன்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்ற யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளின் வைத்திய அதிகாரிகளின் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சல் மிகவும் தீவிரமாகப் பரவிவருவதனை இங்குள்ள வைத்தியசாலைகளில் எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்கள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஆகியவைகளிலேயே டெங்குக் காய்ச்சல் தீவிரமாக பரவிவருகிறது.

இலங்கையில் 34 ஆயிரம் பேர் டெங்கு நுளம்பின் தாக்கத்துக்குள்ளாகியுள்ளார்கள். கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களிலேயே இதன் தாக்கம் அதிகமாக உள்ளது. யாழ்.மாவட்டதில் சகஜ நிலை திரும்பிய பின்னர் இந்நோய் பரவக்கூடும் என நாம் நினைத்து 2009ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தொடக்கம் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தால் டெங்கு நுளம்பு பரவாமல் தடை செய்ய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கினோம்.

நாம் எமது அலுவலகம், குடியிருக்கும் வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களை நுளம்பு வராமல் துப்புரவு செய்தால் டெங்கு நோய் பரவாமல் தடைசெய்ய முடியும். டெங்கு நுளம்பை கட்டுப்படுத்த சகலரும் கூட்டாகச் செயற்படவேண்டும். இதற்கு பொது மக்கள், அரச ஊழியர்கள் யாவரும் இணைந்து யாழ்.சுகாதார திணைக்களம் வழங்கும் அறிவுறுத்தலுக்கேற்ப செயற்படவேண்டும். என்றார். (ரி-300)

# படகுச் சேவை மீண்டும் செவ்வாய்க்கிழமைகளில்

நெடுந்தீவு,பெப்.10

நெடுந்தீவுக்கான அரச் படகுப் போக்குவரத்துச் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி இதுவரை காலமும் செவ்வாய்க்கிழமையில் சேவையில் ஈடுபடாது ஞாயிற்றுக்கிழமைகளில் சேவையை மேற் கொண்டு வந்த குமுதினி படகுச் சேவை மீண்டும் செவ்வாய்க்கிழமைகளில் நடைபெறும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க படகு பயணிகள் சேவையில் ஈடுபடும். (ரி-111)




# கச்சதீவு அந்தோனியார் உற்சவம் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பம்

நெடுந்தீவு,பெப்.10

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 29ஆம் திகதி திங்கட்கிழமை வரை நான்கு தினங்கள் நடைபெறும்.

புனித அந்தோனியார் ஆலய உற்சவத்தை முன்னிட்டு தேவையான முன்னேற்பாடுகள் குறித்து ஆராயும் பொருட்டு நெடுந்தீவு பொதுசனத் தொடர்பு அதிகாரி அலெக்ஸ்ஸாண்டர் போல் கடந்த சனிக்கிழமை கச்சதீவுக்குச் சென்று பார்வையிட்டுத் திரும்பியுள்ளார்.

கடந்த 2006ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த ஆண்டு மீண்டும் வழமைபோன்று உற்சவம் நடைபெறவுள்ளது.

கச்சதீவு உற்சவம் கடந்த காலங்களைப் போன்று இம்முறையும் ஆலய மூப்பரின் கண்காணிப்பிலேயே நடைபெறவேண்டும் என்பது பொதுமக்களின் கருத்தாகவுள்ளது.

பொதுமக்களுக்குத் தேவையான ஏற்பாடுகள் வழமைபோன்று இருக்கும் எனவும் இந்தியக் குருமார்களினதும் மக்களினதும் வருகை முன்னர் போன்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அறியப்படுகிறது. (ரி-111)



வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலங்கை வங்கியால் இரண்டு விவசாயிகளுக்கு 2 லட்சம் ரூபா கடன் திட்டத்தின் கீழ் இரண்டு சில்லு உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இணுவில் ஆஸ்கார் இன்டஸ்ரீஸ் நிறுவனத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இரண்டு சில்லு உழவு இயந்திரத்துடன் இலங்கை வங்கியின் சுன்னாக மேற்றரக் கிளை முகாமையாளர் சி.அரசகுமார், ஆஸ்கார் இன்டஸ்ரீஸ் பிரைவேற் நிறுவனப் பணிப்பாளர்கள் ஏ.யூ.யோசேப், எம்.என்.அசோகன், கிறகாக்கி சர்வதேச நிறுவனத்தின் ஏற்றுமதி இறக்குமதிப் பணிப்பாளர் அனுர அபயகுணவர்த்தன, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ மற்றும் யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.கணேசராசா ஆகியோர் நிற்பதையும் விவசாயிகள் இருவருக்கு உழவு இயந்திரங்கள் வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

# அடிக்கடி இடம்மாறும் கிராம சேவையாளர் அலுவலகம்

நவாலி,பெப்.10

ஆனைக்கோட்டை(ஜே-133) கிராம சேவையாளர் அலுவலகம் 8ஆவது தடவையாக நேற்றுமுன்தினம் முதல் வேறொரு தனியார் கட்டடத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளது.

இக்கிராம சேவையாளர் அலுவலகம் கடந்த ஒரு வருடமாக ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆலயத்திற்கு செல்லும் வீதியிலுள்ள கட்டடமொன்றில் இயங்கி வருகிறது.

தற்போது அதே வீதியில் 200 மீற்றர் தூரத்திலுள்ள வீடொன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வலுவலகத்தையும் சிறுவர் பராமரிப்பு நிலையம், முதியோர் பராமரிப்பு நிலையம் என்பவற்றையும் நிரந்தரமாக அமைப்பதற்காக ஆனைக்கோட்டையிலுள்ள நலன்விரும்பிகள் மூவர் இரண்டு பரப்புக் காணியை இலவசமாக சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் கடந்த இரண்டு வருடத்திற்கு முன்னர் கையளித்துள்ளனர்.

வடக்கின் வசந்தத்தின் கீழ் பல அரச அலுவலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதேபோன்று இந்த அலுவலகத்தையும் விரைவில் அமைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டுமென்று பொதுமக்கள் பலரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ரி-100)

# கிராமப்புறங்களில் பாம்பாட்டிகளின் வித்தைகளைப் பார்க்க சனக்கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.10

குடாநாட்டின் கிராமப் புறங்களிலும் பாம்பாட்டிகளின் வித்தைகள் அரங்கேறுகின்றன.

வலி.கிழக்கு மற்றும் வலிகாமம் மேற்கு, தென்மேற்குப் பகுதிகளில் கிராமம் கிராமமாக செல்லும் பாம்பாட்டிகள் தமது பாம்புகள் மற்றும் குரங்குகளைப் பயன்படுத்தி வித்தைகளைக் காண்பித்துப் பணம் சம்பாதிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிராமப்புறங்களில் பாம்பாட்டிகளின் வித்தைகளை மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று பார்வையிட்டு வருகின்றனர்.

இதேவேளை நீர்வேலி பகுதியில் பாம்பாட்டி ஒருவர் வித்தையைக் காட்டிக் கொண்டிருந்த சமயம் அவரின் வளர்ப்புப் பாம்பொன்று சீறிக் கொண்டு பற்றைக்குள் ஓடி மறைந்தது. பின்னர் அந்தப் பாம்பு ஒருவாறு பிடிக்கப்பட்டது.

(50-224)

# டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் வலி.கிழக்குப் பிரதேசத்தில் மும்முரம்

யாழ்ப்பாணம்,பெப்.10

வலி.கிழக்குப் பிரதேசத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வலி.கிழக்குப் பிரதேச சபை இதனை மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக வலி.கிழக்குப் பிரதேச சபை சில அறிவித்தல்களைப் பொது மக்களுக்கு வழங்கியுள்ளது.

அவை வருமாறு-

குடியிருப்புகள், வெற்றுக்காணிகள் போன்றவற்றில் அடர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகள், பு[illegible] வெட்டித் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

குடியிருப்புக்களின் சுற்றாடல் பகுதியில் உள்ள குப்பைகள், கழிவுகள் போன்றவற்றை தீயிட்டு எரித்து அல்லது நிலத்தில் வெட்டிப் புதைத்து விடவேண்டும்.

நுளம்புப் பெருக்கத்துக்கு வசதியாக உள்ள நீர் தேங்கும் இடங்கள் வெற்றுக் கொள்கலன்கள் என்பன துப்புரவு செய்யப்பட்டு அகற்றப்படவேண்டும் என்று பிரதேச சபையின் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறைகளைப் பின்பற்றாதவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்[illegible] அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-224)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.10

'எக்ஸ்போ எயார்' விமான சேவை நிறுவனத்தின் அனுசரணையுடன்' யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகம் பாடசாலைகளுக்கு இடையேயான ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று புதன் கிழமை யாழ்.இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**பெண்கள் பிரிவு**

* பண்டத்தரிப்பு மகளிர் எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி பி.ப.03.மணி.(4-23)

# கலந்துரையாடல்

வலி.வடக்கு,பெப்.10

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் தலைவர் மற்றும் செயலாளர்களுக்கான கலந்துரையாடல் உதவிப் பிரதேச செயலாளர் தலைமையில் நாளை வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

2010ஆம் ஆண்டுக்கான தடகளப் போட்டிகள் சம்பந்தமாக இதில் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி விளையாட்டு அலுவலர் செல்வி ம.சின்னத்தம்பி அறிவித்துள்ளார். (4-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ பரிபாலன சபையின் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், பெப்.10

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் புண்ணிய நாச்சி அம்மையார் தினத்தையொட்டி கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்ட பண்ணிசை, திருக்குறள் மனனப் போட்டிகளில் பரிசு பெற்றோரின் விவரம் வருமாறு.

பண்ணிசை

* கீழ்ப்பிரிவு - முதலாம் இடம்-ஆதித்யா அருணகிரிநாதன் (விஸ்வலிங்க மகா கணபதி அறநெறிப் பாடசாலை), 2ஆம் இடம் - லதாங்கி இராமகிருஷ்ணன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), 3 ஆம் இடம்- சங்கவி பரஞ்சோதி (யாழ்ப்பாணக் கல்லூரி) .

* மத்திய பிரிவு முதலாம் இடம்- சகிஷ்னா ரவிச்சந்திரன் (வேம்படி மகளிர் உயர் தரப்பாட சாலை)-,2 ஆம் இடம்-கோபிகா தர்மராசா (வட்டு மத்திய கல்லூரி), 3 ஆம் இடம் நவரத்தினராசா கபில்ராஜ்.

*மேற்பிரிவு - முதலாம் இடம் சிவபாலன் சிவசங்கர் ( யாழ். இந்துக் கல்லூரி), 2 ஆம் இடம்- தர்சிகா மார்க்கண்டு( வட்டு. இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம்-சர்மினி விக்னராஜா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

திருக்குறள் மனனப் போட்டி

* கீழ்ப்பிரிவு- முதலாம் இடம் - தபோதினி வாசன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), 2 ஆம் இடம்- சங்கவி தயானந்தன் (கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தி.), 3 ஆம் இடம் - ரூபவதனா துரை ராசா (யாழ்ப்பாணக் கல்லூரி)

*மத்திய பிரிவு- முதலாம் இடம் - விஜயகுமார் வத்சாங் கிதசர்மா (யாழ். இந்துக்கல்லூரி, 2 ஆம் இடம்- மீனேஸ்வரன் விதுருசன் (வட்டு திருநாவுக்கரசு ம.வி), 3 இடம் -சுபா வாமதேவன் ( ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

மேற்பிரிவு- முதலாமிடம்-யஸ்மிதி கதிர்காமநாதன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), 2 ஆம் இடம்-கஜவாணி கனகரத்தினம் (யாழ். இந்து மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் - அபூர்வசிங்கம் தர்சிகரூபன் (இணுவில் மத்திய கல்லூரி).

## மரண அறிவித்தல்

### திருமதி மரியம்மா மரியாம்பிள்ளை



சில்லாயைப் பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியம்மா (செல்லம்மா) மரியாம்பிள்ளை (உடையார்) கடந்த 07.02.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் மற்றும் சூசானம்மா (முருங்கன்) தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சவரிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் இமெல்டா கிறிஸ்ரோபரின் (இராசம்மா, முருங்கன்) அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மரியாம்பிள்ளையின் (உடையார்) அன்பு மனைவியும், எட்வின் ஜோசப் (ஓய்வு பெற்ற கல்வித்திணைக் கள உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), டெனிசியஸ் (ஓய்வு பெற்ற தபாலதிபர், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற வில்லியம் ஜெயராஜா (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்), றஞ் சிதம் (லண்டன்), புஸ்பம் (லண்டன்), புனிதம் (லண்டன்), அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை (செபில்ட் கலாம் பல் கலைக்கழகம், லண்டன்), இன்பம் (லண்டன்) ஆகியோரின் பாச மிகு தாயாரும், இராசமலர், ஜெயமணி (ஆசிரிய ஆலோசகர், யாழ்.கல்வி வலயம்), ஜெயமலர் பற்றிமா, யேசுதாசன் (லண் டன்), அருளானந்தம் ஜெயராஜா (லண்டன்), யோகதேவா (லண்டன்), ஜெயக்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், டாக்டர் றொகான், தயான், ராஜ், கொலின், மொறின், அரவிந், ஆர்த்தி, ஜெயசங்கீதா, யேசன், யோஆன், யூலியன், ஜெரமி, அனிக்கா, அந்தியா, ஜெனிபர், ஜெனுசா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி நாளை (11.02.2010) வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு யாழ்.புனித யுவானியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் இடம்பெறும் ஆராதனையின் பின் கதிரை மாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*891, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (92374)

தகவல்:
அருட் திரு.ரூபன் மரியாம்பிள்ளை (மகன்)
தொலைபேசி: 077716514, 0213219407

## விபத்தில் குடும்பஸ்தர் காயம்

யாழ்ப்பாணம், பெப்.10

யாழ்.வைத்தீஸ்வராப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-வான் விபத்தில் மோட்டார் சைக்கிள்களில் சென்றவர் காயமடைந்து சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கன்னாதிட்டியைச் சேர்ந்த ப.செல்வராஜா (வயது - 42) என்ற குடும்பஸ் தரே காயமடைந்த நிலையில் யாழ். போ தனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (1-16)

**Require Distributors/ Sales agents in North & East Provinces to distribute/ Sale**

- ⋆Gasoline generators (from 0.65KW - 6.5KW)
- ⋆Diesel generators (from 2KW - 5KW)
- ⋆Gasoline Water Pumps (1.5 - 2 - 3 - 4 inches)
- ⋆Diesel Water Pumps (2 - 3 - 4 inches)
- ⋆Air conditioners (Split type, Packaged type, Chillers, etc)
- ⋆Ice machines (Block Ice, Flake Ice, SeaWater Flake Ice machines in boats, Containerized ice machines, etc
- ⋆Cold rooms (Ice, Fish/ Meat, Fruit, Pharmaceutical, etc)

Contact: Mr. Aruna / Mr. Sirisoma
on 0112887135, 0115517193

K.S. Trading (Pvt) Ltd,
Nawala Road, Rajagiriya.

(சி/564741)

## சாரங்கா இசைக்குழுவின் வாழ்த்துக்கள்



### கலாபூசணம் திரு.தம்பன் சற்குருநாதன் அவர்களுக்கு

கலைத்துறையில் நீண்டகாலமாக அனுபவம் பெற்றுவரும் திரு.தம்பன் சற்குருநாதன் அவர்கள் 'ஞான ஏந்தல்', 'கானாமிர்தன்' எனும் பட்டங்களுடன் பல பட்டங்களை பெற்றதுடன் கடந்த 15.12.2009 அன்று கொழும்பு ஜோன் டீ சில்வா மண்டபத்தில் நடைபெற்ற கலைஞர்களுக்கான விருது வழங்கும் விழாவில் 'கலாபூசணம்' எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இசைக்குடும்பத்தில் பிறந்த இவர் வயலின் இசையில் வளம் குன்றாநீரூற்றாய் திகழ்ந்தவராகவும் ஆர்மோனியம் வாசிப்பதிலும் நடிப்புத்துறையிலும் பாடல்களை இசை அமைப்பதிலும் வல்லவராகவும் திகழ்ந்தார். திரு.த.சற்குருநாதன் எனும் இசை விருட்சம், தம் பணிதொடர சாரங்கா இசைக்குழுவினர் தமது இதயம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றார்கள்.

சாரங்கா இசைக்குழு
(92367) 34/3, கலைமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சைவப்புலவர்,
சைவசித்தாந்த பண்டிதர், வித்துவான்

## கு.வி.மகாலிங்கம்

திதி: துவாதசி

என்றென்றும் மாவடிப் பிள்ளையாரை
நினைவிலிருத்தி
குஞ்சுப் பரந்தன் நிலாவரையானை தொழுது வந்த
அப்பா, எங்கள் பப்பா

ஈழத்திலும் கனடா, அமெரிக்கா
இந்துப் பேரவையெங்கும்
தமிழ் மணம் பரப்பியது கண்டு- நாம்
மெய்சிலிர்த்தோம்
எம்மையெல்லாம் வாழ்வில்
வளம் பல பெற்று வாழவைத்து
நீங்கள் கனவாகப் போய்
நான்காண்டு சென்றாலும்
உம் நினைவு
எம்மைவிட்டு நீங்காது



பொன்னார் திருவடியில் தங்கள்
ஆத்ம சாந்தி பெற
நித்தமும் மாவடிப் பிள்ளையாரை வேண்டுகின்றோம்

சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி. (92375)

பாசமுள்ள
குடும்பத்தினர்



தோற்றம்:
11.11.1927

மறைவு:
25.01.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பேசும் தரப்பினர் நான்கு அணிகளில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட முஸ்தீபு

அம்பாறை, பெப். 10

அம்பாறை மாவட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் தரப்பில் போட்டியிட நான்கு அணிகள் தற்போதே முனைப்புக் காட்டுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் ஜனாதிபதி இணைப்பாளர் கு.இனியபாரதி உள்ளிட்ட குழுவினர் போட்டியிடலாமென நம்பப்படுகிறது.

தமிழ்க் கூட்டமைப்புச் சார்பில் கல்முனை மாநகரசபை எதிர்க்கட்சித் தலைவர் ஹென்றி மகேந்திரன், தற்போதைய எம்.பி.தோமஸ் உள்ளிட்டோரும் களமிறங்குவர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் எதிர்வரும் 10ஆம் திகதி இத்தேர்தல் தொடர்பில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய பின் முடிவெடுப்பர் எனத் தெரிகிறது. இருப்பினும் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் சீலன் தலைமையிலான குழுவினரும் தேர்தலில் போட்டியிட ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

ஈரோஸ் அணியும் லால் தலைமையில் களமிறங்கவிருக்கிறது என அறியமுடிகிறது. இதனைவிட இன்னும் ஒரு சிலர் ஐக்கிய தேசியக் கட்சி அல்லது வேறு கட்சிகளுடன் களமிறங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அம்பாறையில் பஸில் எம்.பி போட்டி?

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ தலைமை வேட்பாளராகப் போட்டியிடலாமென எதிர்பார்க்கப்படுகிறது எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் றியல் அட்மிரல் சரத்வீரசேகர, அமைச்சர் தயாரத்னா ஆகியோர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிடுவது பெரும்பாலும் ஊர்ஜிதமாகியுள்ளது.

சம்மாந்துறைத் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் சட்டத்தரணி அன்வர் சியாத் மற்றும் ஒரு சில முஸ்லிம் வேட்பாளர்களும் களத்தில் இறங்குவரென எதிர்பார்க்கப்படுகின்றது.

மூவினங்களைச் சேர்ந்த ஒன்பது வேட்பாளர்கள் அம்பாறை மாவட்ட ஸ்ரீல. சு.க. வேட்பாளர் பட்டியலில் இடம்பெறுவர் எனவும் கூறப்படுகின்றது. (ளி)




# மொரவெவ முஸ்லிம் வித்தியாலயம் சிங்களப் பாடசாலையாகும் அபாயம்

திருகோணமலை, பெப்.10

மொரவெவ பிரதேச செயலகப் பிரிவின் நாமல்வத்தை கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள நல்லகுட்டியாறு முஸ்லிம் வித்தியாலயம் பெரும்பான்மையினப் பாடசாலையாக மாறும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது 45 முஸ்லிம் மாணவர் கல்வி கற்கும் இப்பாடசாலையின் அதிபராக பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமையே இதற்குக் காரணம் எனவும் கூறப்படுகிறது.

கடந்த 1990 ஆம் ஆண்டு இப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் மீள் குடியேறி வருகின்றனர். அண்மையில் இப் பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்ட வேளையில் பெரும்பான்மையின அதிபரே இங்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

அயலில் உள்ள பெரும்பான்மை இன மாணவர்களை இணைப்பதன் மூலம் இதன் உருவம் மாற்றம் பெறும் அபாயம் உள்ளது என பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். மாவட்டத்தின் முஸ்லிம் அரசியல் தலைமைகள் இது விடயத்தைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என்பது பொதுமக்கள் கோரிக்கையாகும். (சி)

# தொடர்ந்தும் தொண்டர் ஆசிரியர் நியமனம் அம்பாறை மாவட்டத்தில் இழுபறியில்!

அம்பாறை, பெப். 10

'இலங்கையிலுள்ள சகல மாவட்டங்களுக்கும் தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டு முடிந்துள்ள நிலையில் இன்னும் அம்பாறை மாவட்ட தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருவது மிக மனவேதனையளிக்கின்றது'

- இவ்வாறு அம்பாறை மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் எம்.ஐ.எம்.றியால் மௌலவி தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு அவரது தலைமையில் அச்சங்கத்தின் பொருளாளர் ஏ.நௌபரின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, சம்மாந்துறை, அக்கறைப்பற்று வலயத் தொண்டர் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் சுமார் 4700 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க அனுமதிக்கப்பட்டு, தற்போது அந்த நியமனங்கள் வழங்கப்பட்டு முடிந்துள்ளன. இந்நிலையில், அம்பாறை மாவட்டத்தின் குறிப்பாக கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று கல்வி வலயங்களிலுள்ள தமிழ், முஸ்லிம் தொண்டர் ஆசிரியர்கள் 109 பேருக்கு இன்னமும் நியமனம் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றது.

அமைச்சரவை அங்கீகாரம், திறைசேரி அங்கீகாரம் என்பன வழங்கப்பட்ட நிலையில் எவ்வித நியாயமான காரணங்களுமின்றி இந்த நியமன இழுத்தடிப்பானது எமது அடிப்படை மனித உரிமையை மீறுவதாக அமைந்துள்ளது.

கடந்த 2009 பெப்ரவரி மாதத்தில் இந்த நியமனத்திற்கான நேர்முகப்பரீட்சை முடிவுற்று, தேர்வுப்பட்டியலும் மாகாண சபைக்கு அனுப்பப்பட்ட நிலையில் ஒரு வருட காலமாக நாம் ஏமாற்றப்பட்டு வருகிறோம்.

இது விடயத்தில் பொறுப்புவாய்ந்த அரசியல்வாதிகள், உயர் அதிகாரிகள், கிழக்கு மாகாணசபை என்பன கவனமெடுத்து எமக்குச் சாதகமான உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம். மாறாக இன்னமும் கால தாமதம் ஏற்பட்டால் நாங்கள் வீதியிலிறங்கிப் போராட்டத்தில் ஈடுபட நேரிடலாம் என மனவேதனையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம் எனவும் தனதுரையில் குறிப்பிட்டார். (ளி)

# யானைத் தொல்லையைக் கட்டுப்படுத்த மட்டு. அரச அதிபரிடம் வேண்டுகோள்

மட்டக்களப்பு, பெப்.10

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப் பிரதேசங்களை அண்டிய வயல் நிலங்களில் காட்டுயானைகளின் தொல்லைகளால் மானாவாரி நெற்செய்கையை உரியமுறையில் அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர். காட்டுயானைகளை விரட்டுவதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறு மட்டக்களப்பு மாவட்ட அரசஅதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் அவசர வேண்டுகோள் ஒன்றை மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் முன் வைத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு மற்றும் புல்லுமலை பகுதிகளை அண்டிய பிரதேசங்களிலும் மாவடிமுன்மாரி, ஆத்துச்சேனை, நாற்பதுகட்டை, நல்ல தண்ணீர் ஓடை, நெல்லிக்காடு, 39ஆம் கொலணி ஆகிய நெற்செய்கைக் காணிகளில் காட்டுயானைகள் கூட்டம் கூட்டமாக வந்து நெல்வயல்களை நாசப்படுத்துவதுடன், அங்குள்ள மக்கள் குடியிருப்புகளையும் சேதப்படுத்தி வருகின்றன. (ளி)

# கல்வி நிர்வாகச் சேவை அதிகாரிகளுக்கு கிழக்கிலங்கையில் அதிரடி இடமாற்றம்!

மட்டக்களப்பு, பெப்.10

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் வலயக்கல்வி அலுவலகங்களில் கடமையாற்றும் இலங்கை கல்வி நிர்வாகச் சேவை அதிகாரிகள் 'வருடாந்த இடமாற்றம்' என்ற பெயரில் எவ்வித விதிமுறைகளுமின்றி இடமாற்றம் செய்யப்பட்டு வருகின்றார்கள். இந்த இடமாற்றங்கள் குறிப்பாக தமிழ் பேசும் இலங்கை கல்வி நிர்வாகச் சேவை உத்தியோகத்தர்களுக்கே வழங்கப்பட்டு வருகின்றன. இந்த இடமாற்றங்கள் யாவும் உடனடியாக நிறுத்தப்பட்டு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் எதேச்சதிகாரமான செயற்பாடுகள் பற்றி ஆராயப்பட வேண்டும்''

-இவ்வாறு இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் கிழக்கு மாகாண சங்கம் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக இச்சங்கம் அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இம்முறை கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இந்த மாகாணத்திலுள்ள இலங்கைக் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றத்தை வழங்கும்போது தாபனக் கோவையின் எந்த ஏற்பாடுகளையும் பின்பற்றாது உடன் செயற்படும்படியான இடமாற்றங்களை வழங்கியுள்ளார். இவ்வாறான உடன் செயற்படும்படியான இடமாற்ற உத்தரவு அரசியல் ரீதியான அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையின் பேரிலான இடமாற்றங்களுக்கே வழங்கப்படுவது நிர்வாக நடைமுறையாகும்.

ஆனால், தற்போது வழங்கப்பட்டுள்ள இடமாற்றங்களின் விதத்தை அவதானிக்கின்றபோது முற்றிலும் அதேபாணியிலான அரசியல் ரீதியான ஒரு பழிவாங்கல் செயற்பாடு என்பது நிரூபணமாகின்றது. ஏனெனில் வழங்கப்பட்டுள்ள இடமாற்றக் கடிதங்களில் இந்த இடமாற்றங்களுக்கு எதிராக மேன்முறையீடு செய்யும் உரிமை கூட அதிகாரிகளுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

மேலும், கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளை இடமாற்றம் செய்வதற்காக எவ்வித இடமாற்ற சபையும் ஏற்படுத்தப்படாமல் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் ஆலோசனை பெறப்படாது மேற்படி இடமாற்றங்கள் ஒரு தலைப்பட்சமாக அமைச்சினால் நடைமுறைப் படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுவாக, பதவிநிலை அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்படும்போது ஒருமாதகால முன்னறிவித்தல் வழங்கப்பட்டு அவர்களுக்கு சேவை நிலையத்தை விட்டு வேறு நிலையம் செல்வதற்கு ஒழுங்கமைத்தல் படி, ஏனைய படிகள் வழங்கப்படுவதும் வழமையான நடைமுறையாகும். ஆனால் தற்போது கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்டுள்ள இடமாற்றங்களில் இந்த நடைமுறை முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்டு அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய அதிகாரிகளைக் கழுத்தில் பிடித்துத் தள்ளுகின்ற இடமாற்றம் போன்று இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அண்மைக்காலமாகக் கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு பெரும்பான்மை இனத்தவர்களின் [illegible] மாறி வருகின்றது. இந்த மாகாணத்தில் 90வீதமான தமிழ்மொழி மூல மாணவர்களும், ஆசிரியர்களும், கல்வி அதிகாரிகளும் இருக்கையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிங்கள மொழி பேசும் ஒரு கல்வி அமைச்சரும், கல்வி அமைச்சுச் செயலாளரும் இந்த அமைச்சை நிர்வகித்து வருகின்றனர். இது இம்மாகாணத்தில் பெரும்பான்மையாகவுள்ள தமிழ்பேசும் மக்களுக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியும்-அடிப்படை உரிமை மீறலுமாகும். நாட்டிலுள்ள எந்தவொரு மாகாணத்திலாவது அம்மாகாணத்தில் சிறுபான்மையாகவுள்ள இனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் தீர்மானம் எடுப்பவர்களாக நியமிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமக்கு தொழில் ரீதியாக ஏற்படும் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்குக் கிழக்கு மாகாணக் கல்வியமைச்சில் தீர்மானம் எடுக்கக்கூடிய தமிழ்பேசும் அதிகாரிகள் இல்லாமை காரணமாகப் பெரும்பான்மை இன அதிகாரிகளால் இழைக்கப்படும் அநீதிகளை ஏற்றுக்கொண்டு - பேசாமடந்தைகளாக இருக்கவேண்டிய நிலை அண்மைக்காலமாக இருந்து வருகின்றது. திட்டமிட்டு கல்வியமைச்சும், மாகாணக் கல்வித் திணைக்களமும் சிங்கள மயப்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ் பேசும் அதிகாரிகள் ஓரங்கட்டப்பட்டு ஒதுக்கப்படுகின்றனர்.

அமைச்சிற்குத் தமிழ் மொழி மூலமாக எழுதப்படும் கடிதங்களுக்கு எவ்வித பதிலும் தரப்படுவதில்லை. அமைச்சின் செயலாளருக்குத் தமிழில் எழுதப்படும் கடிதங்கள் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டு கொடுக்கப்படுகின்றது. இம்மொழி பெயர்ப்பும் மாதக் கணக்கில் இழுத்தடிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. இந்நிலையில் இழைக்கப்படும் அநீதிகளுக்கு உடனடிப் பரிகாரம் பெறமுடியாத சூழ்நிலை இருந்து வருகின்றது. கல்வி அமைச்சின் செயலாளரை தமிழ்பேசும் அதிகாரிகள் சந்தித்து தமது பிரச்சினையைத் தமது தாய் மொழியில் சொல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலை கடந்த இருவருடமாக நிலவி வருகின்றது.

கிழக்கு மாகாண கல்வியமைச்சின் நடவடிக்கைகளில் மாகாணத்தின் முதலமைச்சரோ, மாகாணப் பிரதம செயலாளரோ தலையிட்டு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க முடியாத கையறு நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சரின் உத்தரவுகள் கூட இவ் அமைச்சில் புறக்கணிக்கப்படுகின்றன. இந்த நிலையில் கல்வியமைச்சு யாருடைய கட்டுப்பாட்டில் அல்லது யாருடைய உத்தரவுக்கு இயங்குகின்றது என்பது புரியாத புதிராக உள்ளது.

இவ்வாறு பல்வேறு புறக்கணிப்புகளும் இனரீதியான சிந்தனைகளும் கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சில் கோலோச்சியுள்ளது. இதுபற்றி இந்த மாகாணத்தில் உள்ள அரசியல்வாதிகளும் அமைச்சர்களும் தமது கவனத்தைச் செலுத்துவதாக இல்லை. இது மிகவும் கவலைக்குரியதும் வருந்தத்தக்கதுமாகும். இந்நிலை தொடர்ந்தால் கிழக்கு மாகாணத்தில் தமிழ்பேசும் கல்விச் செயற்பாடுகள் பல தசாப்தங்கள் பின்னோக்கிச் செல்வதற்கான ஆபத்து இயல்பாகவே உருவாகி வருகின்றது.

எனவே, கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சிற்கு உடனடியாக தமிழ்பேசும் அதிகாரியொருவர் செயலாளராக நியமிக்கப்பட்டு இம் மாகாணத்தின் பெரும்பான்மைத் தமிழ்பேசும் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகளது அடிப்படை உரிமை காப்பாற்றப்பட வேண்டும். இவ்விடயத்தில் தாங்கள் உடனடிக் கவனம் செலுத்த வேண்டும் எனக்கோருகின்றோம்- என்றுள்ளது. (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அடிப்படை இரசாயனவியல்

## 2010 மாணவர்கள் இதுவரை முடிவடைந்த
பாடத்திட்டங்களை அலகு ரீதியாக ஆழமாக மீட்டல் செய்வதற்கான ஒரு விசேட தொகுப்பு

## பகுதி - I A
## அமைப்புக் கட்டுரை வினாக்கள்

01. a) 1) அணுத்திணிவு அலகு என்றால் என்ன?

2) $C_6H_{12}O_6$ மூலக்கூறின் சார்மூலக்கூற்றுத் திணிவை மேலே பகுதி 1 இலிருந்து உய்த்து அறிக.

b) 1) கேலுசாக்கின் விதியைக் கூறுக.

2) $A_2$, $B_2$ வாயுக்கள் சேர்ந்து $AB_4$ எனும் வாயு இனத்தைத் தோற்றுவிக்கின்றன. வேறு விளைவுகள் இல்லை. $A_2$, $B_2$ வாயுக்கள் ஒரே வெப்பநிலை அமுக்கத்தில் சேர்க்கப்பட்ட கனவளவுகள் 2:1 ஆகும். தாக்க இறுதியில் வாயுக்கலவையின் கனவளவு அதே வெப்ப நிலை அமுக்கத்தில் $180cm^3$ ஆகும் எனின், ஆரம்பத்தில் சேர்த்த $A_2$ இன் கனவளவைக் கணிக்குக.

3) Vml வாயு $C_2H_2$ ஐதரோகாபனை மிகை ஒட்சிசனில் 25°C இலும், 1atm இலும் தகனித்துக் குளிரவிட V + 10ml கனவளவுக் குறைவு ஏற்பட்டது. Vml வாயு நிலை $C_2H_6$ இனை மிகை ஒட்சிசனில் 25°C இலும், 1atm இலும் தகனித்துக் குளிரவிட என்ன கனவளவுக் குறைவு ஏற்படும்? பயன்படுத்திய எடுகோள்கள் யாதாகும்?

02. a) $H_2$, $Cl_2$ வாயுக்களைப் பயன்படுத்தி கேலுசாக்கின் விதியை வாய்ப்புப்பார்க்கும் பொருட்டு ஒரெ வெப்பநிலை அமுக்கத்தில் $H_2$ வாயுவும், $Cl_2$ வாயுவும் சம கனவளவில் சேகரிக்கப் பட்டன.
1) $H_2$, $Cl_2$ என்பன வெடித்தல் இல்லாமல் தாக்கமுறும் தாக்க நிபந்தனை யாது?

2) சமகனவளவு தூய $H_2$, தூய $Cl_2$ வாயுக்கள் நீரின் மேல் கலக்கப்படின் எவ்வகையான அவதானங்களைப் பெறலாம்.

3) அவதானங்களில் இருந்து கேலுசாக்கின் விதியை எவ்வாறு வாய்ப்புப் பார்க்கலாம்?

b) நீர்கொண்ட தாழியினுள் நீர் நிரப்பப்பட்டுக் கவிழ்த்துவைக்கப்பட்ட இரு கொதிகுழாய் களில் தனித்தனியாக $10cm^3$ ஒட்சிசன் வாயு செலுத்தப்பட்டது. சேகரிக்கப்பட்ட குழாய்கள் இரண்டிலும் நீர்மட்ட உயரங்கள் ஒரே அளவாகக் காணப்பட்ட பின்பு ஒட்சிசன் வாயு உள்ள குழாயினுள் நைத்திரிக் ஒட்சைட்டு வாயு முற்றாகச் செலுத்தப்பட்டது.
1) நைத்திரிக் ஒட்சைட்டு வாயு செலுத்தப்பட்ட பின்பு எம் மாற்றங்களை அவதானிப்பீர்?

2) ஒரே நீர்மட்ட உயரங்களில் வாயுக்களைச் சேகரித்ததன் நோக்கம் என்ன?

3) இறுதியில் எஞ்சியுள்ள வாயுவின் கனவளவு யாது?

4) எஞ்சியுள்ள வாயுவை அறியும் இரு முறைகள் தருக.

03. 20°C இல் சல்பூரிக் கரைசல் பற்றிய சில தகவல்கள் தரப்பட்டுள்ளன.
* சல்பூரிச் அமிலம் 98% w/w
* சார்மூலக்கூற்றுத் திணிவு 98.07
* 1ml கரைசலின் திணிவு 1.84g (S = 32, O = 16, H = 1)

மேலே தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
1) வெப்பநிலை தரப்பட்டதன் நோக்கம் என்ன?

2) தரப்பட்ட கரைசலின் அடர்த்தியைச் சர்வதேச அலகில் தருக.

3) சல்பூரிக் அமிலக் கரைசலின் செறிவினைக் கணிக்குக.

4) இக் கரைசலின் 25 $cm^3$ ஐ நீர் சேர்த்து 0.5 $dm^3$ கரைசலை ஆக்கினால் அக் கரைசலின் செறிவு யாது?

5) ஒரு மாணவன் அக் கரைசலைத் தயாரிக்கும்போது அமிலத்தின் சில துளிகள் அவனது உடலில் பட்டால் உடனடியாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் எவை?

6) ஆய்வுகூடத்தில் இவ் அமிலக் கரைசலைக் கொண்ட போத்தல்களைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்காகக் கையாளப்படும் உத்திகளைச் சுருக்கமாகத் தருக.


7) மேலே வினா 4 இல் தயாரிக்கப்பட்ட கரைசலுடன் முற்றாகத் தாக்கம் புரியக்கூடிய Zn இன் திணிவைக் காண்க. (Zn-65)

8) மேலே வினா 7 இல் வெளியான $H_2$ வாயு 25°C இலும் $1\times10^5$Pa அமுக்கத்திலும் சேகரிக்கப் பட்டால் அதன் கனவளவைக் காண்க.
(25°C இலும், $1\times10^5$Pa அமுக்கத்திலும் $H_2$ வாயுவின் மூலர்க் கனவளவு $24 dm^3mol^{-1}$)

04. a) $1moldm^{-3}$ $M(NO_3)x$ உம், $1moldm^{-3}$ $Na_2SO_4$ உம் கீழே தரப்பட்டுள்ள அட்டவணைப்படி கலக்கப்பட்டுத் தோன்றும் வீழ்படிவுகளின் உயரங்கள் அளக்கப்பட்டு அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| $1molm^{-3}$ $M(NO_3)x$ கனவளவு/ml | 02 | 04 | 06 | 08 | 10 | 12 | 14 | 16 | 18 |
| $1mol^3$ $Na_2SO_4$ கனவளவு/ml | 18 | 16 | 14 | 12 | 10 | 08 | 06 | 04 | 02 |
| வீழ்படிவு உயரம்/mm | 01 | 07 | 11 | 14 | 20 | 15 | 10 | 06 | 02 |

மேலே தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
1) வீழ்படிவு உயரத்திற்குக் கரைசல்களின் கனவளவு அமைப்புக்குமான வரைபை வரைக.




2) $M(NO_3)x$ இற்கும், $Na_2SO_4$ இற்கும் இடையிலான தாக்கத்திற்குரிய பரிமாணத் தினைத் துணிக.

3) x இன் பெறுமானத்தைக் கணிக்குக.

4) $2moldm^{-3}$ $M(NO_3)X$ ஐயும், $3moldm^{-3}$ $Na_2SO_4$ ஐயும் பயன்படுத்தி இருப்பின், மேற் படி கனவளவுத் தொகுதியைப் பயன்படுத்தி இருப்பின் அது எத்தொகுதி எனத் தீர்மா னிக்குக.

b) 2g முருகைக்கல் எடுக்கப்பட்டு $0.1moldm^{-3}$, $400cm^3$ HCl கரைசலில் கரைக்கப்பட்டுப் பெறப்பட்ட கரைசலின் $40cm^3$ எடுக்கப்பட்டு அக்கரைசலை முழுமையாக நடுநிலை யாக்க 0.2 $moldm^{-3}$ NaOH கரைசலின் $10cm^3$ தேவைப்பட்டது. இத்தரவுகளைப் பயன் படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.
1) $40cm^3$ கரைசலை நடுநிலையாக்கத் தேவையான NaOH இன் மூல் எண்ணிக்கை யைக் கணிக்குக.

(19 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் S.தங்கராஜாவின் வழிகாட்டலில் தொகுத்து வழங்குபவர்:
S.T.ஜனார்த்தனன் (ஆசிரியர், கொழும்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"2010 புலமைப்பரிசில் மாணவர்களுக்காக பல மாவட்ட ஆசிரியர்களால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பெறுமதிமிக்க படைப்பு"

# உள்நாட்டு 'முள்ளிவாய்க்கால்' முடிந்தது;

# சர்வதேச 'முள்ளிவாய்க்கால்' எப்போது?

கடந்த ஆறு தசாப்தங்களாக நடைபெற்ற தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தினால் ஏறக்குறைய இரண்டு இலட்சம் தமிழ் மக்கள்




கொல்லப்பட்டும், நாற்பதாயிரம் [illegible]களுக்கு மேல் காணாமல் போயும், ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்டோர் ஊனமுற்றும், ஆயிரக்கணக்கில் தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டும், பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்களும் நாசமாக்கப்பட்டுள்ளன என பல சர்வதேச நிறுவனங்கள் கணிப்பிட்டுள்ளன.

இதேவேளை, மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்டோர் உள்நாட்டில் இடம்பெயர்ந்தும், ஏறக்குறைய ஐந்து இலட்சம் பேர் வெளிநாடுகளில் தஞ்சம் கோரியுமுள்ளனர்.

இவ்வேளையில், பல நாடுகளின் உதவியுடன் நடந்து முடிந்தது இலங்கையின் ஈவிரக்கமற்ற முள்ளிவாய்க்கால் நடவடிக்கை. இதனால் ஏற்பட்ட தாக்கங்கள், மாற்றங்கள், ஏமாற்றங்களை இங்கு விசேடமாகக் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லையென நம்புகின்றேன்.

இம் முள்ளிவாய்க்கால் நடவடிக்கை, இலங்கையின் ஜனாதிபதி தேர்தலை இரண்டு வருடங்கள் முன்கூட்டி நடத்துவதற்கு வழிவகுத்தது மட்டுமல்லாது, இந்த நடவடிக்கைக்கு ஆணை பிறப்பித்தவரும், அதை நிறைவேற்றியவரும், தேர்தலில் போட்டியிட்டு, இறுதியில் ஆணை பிறப்பித்தவரான இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் வெற்றியும் கண்டுள்ளார்.

வெற்றி - தோல்விக்கான ஆய்வுகள் ஒருபுறமிருக்க, ஏற்கனவே கடந்த நான்கு ஆண்டுகளாக பதவி வகித்த மஹிந்த ராஜபஷ தொடர்ந்தும் மேலும் ஏழு ஆண்டுகள் பதவியில் இருக்க சட்டபூர்வமாக தகுதியுடையவராகியுள்ளார்.

### சர்வதேச முள்ளிவாய்க்கால்

இந்த வகையில் சர்வதேச ரீதியாக ஜனநாயக நாடுகளில் வாழும் தமிழீழ மக்கள் மீது இலங்கை அரசினால் மேற்கொள்ளவிருக்கும் 'சர்வதேச முள்ளிவாய்க்கால்' நடவடிக்கை பற்றி ஆராய்வது மிக அவசியம்.

இதுவொரு இரகசியமான விடயமோ, திட்டமோ அல்ல.! வன்னி மக்கள் மீதான முள்ளிவாய்க்கால் நடவடிக்கைகள் என்று முடிவடைந்ததோ, அன்றிலிருந்து இலங்கையின் ஜனாதிபதி முதல் பிரதமர், அமைச்சர்கள், அரசின் முக்கிய பேச்சாளர்கள் வரை, எதிர்காலத்தில் புலம்பெயர் வாழ் தமிழ் மக்களின் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டுமென கங்கணம் கட்டியுள்ளனர்.

இலங்கை அரசு வெளிப்படையாகக் கூறிவரும் இவ் 'சர்வதேச முள்ளிவாய்க்கால்' நடவடிக்கையில் இவர்கள் வெற்றி கொள்வார்களா? - அல்லது தோல்வியை தழுவிக்கொள்வார்களா? - என்பது, சர்வதேச ரீதியான ஜனநாயக அரசுகளில் மட்டுமல்ல, புலம்பெயர் வாழ் தமிழ் மக்களின் நடவடிக்கைகளிலும் தங்கியுள்ளது. இதற்கு இராஜதந்திர ரீதியான அணுகுமுறை மிகவும் அவசியம்.

### இராஜதந்திரம்

முதலில் இராஜதந்திம் என்றால் என்ன? மதிநுட்பத்துடன் கூடிய விட்டுக்கொடுப்பு, பரிமாற்றம் ஆகியவற்றுடன் உணர்ச்சி வசமற்ற அணுகுமுறை. இராஜதந்திர அணுகுமுறையை மேற்கொள்ளும் போது, மிக நீண்ட எதிர்காலத்தை மனதில் கொள்வார்கள்.

இந்த இராஜதந்திர அணுகுமுறையினால் இலங்கை அரசு சர்வதேச ரீதியாக ஏற்கனவே பல அரசுகளை அணுகி, நல்ல பயனை அடைந்து வருகின்றது. ஆனால், புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் எந்த அரசின் தயவுமின்றி, எமக்குள்ளேயே தொடர்ந்து வீராப்பு பேசுவது எதிர்காலத்தில் எந்த வகையிலும் ஆக்க பூர்வமாகாது.

முதலில், புலம்பெயர் வாழ் மக்கள் இலங்கை அரசின் சர்வதேச ரீதியான சூழ்ச்சி வலைகளை, சரியான முறையில் புரிந்துகொள்ள வேண்டும். அடுத்து அவற்றுக்கு பரிகாரம் காண்பதற்கு யாரை அணுக வேண்டும் என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும்.

### இலங்கையின் திட்டம்

இலங்கை அரசு நடத்தவிருக்கும் சர்வதேச ரீதியான, கபடத்தனமான திட்டங்களை கொண்ட சர்வதேச முள்ளிவாய்கால் நடவடிக்கையை நாம் மிகச் சுலபமாக கணிப்பிடலாம்.

முதலாவதாக - இலங்கையில் தாம் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்கள், மனிதாபிமான குறைபாடுகள், அரசியல் செயல் திட்டங்களுக்கு எதிராகப் புலம்பெயர் நாடுகளில் குரல் கொடுப்போரை ஒரு சட்ட வலையினுள் அகப்பட்ட வைக்கும் திட்டத்தை கொண்டுள்ளனர்.

அதாவது மேற்குறிப்பிட்ட வேலைத் திட்டங்களில் ஈடுபடுவோர், சட்டங்களில் தவறி நடக்கின்றனர் எனக் கூறி, உண்மைக்கு புறம்பான தகவல்களை, இலங்கை அரசே உற்பத்தி செய்து, குறிப்பிட்ட நாடுகளின் அரசுகளிடம் சமர்பித்து, சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு தூண்டுவது.

இரண்டவதாக - சர்வதேச ரீதியாக மனித உரிமை, மனிதபிமான, அரசியல் செயற்பாடுளை மேற்கொள்ளும் புலம்பெயர்வாழ் தமிழர் மீது, இலங்கை அரசுடன் இணைந்து இயங்கும் தமிழ் கூலிப்படைகளினால் வன்முறைகளை மேற்கொள்ளுமாறு தூண்டுவது.

இத்திட்டத்திற்கு உடந்தையாக செயற்படுவதற்கென, ஏற்கனவே பல நாடுகளுக்கு சிறீலங்காவின் இராணுவ உயர் அதிகாரிகள், தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மூன்றவதாக - ஏற்கனவே இலங்கை அரசுடன் சேர்ந்து இயங்கும் தமிழ் அமைச்சர்கள், உயர் பாதுகாப்பு அதிகாரிகள், அரசியல் புள்ளிகள் போன்றோரை - தற்போதைய இலங்கை அரசுடன் அதிருப்தியடைந்தவர்கள் போல் பாசாங்கு செய்து, இயலுமானால் இந் நபர்கள் தமது பதவிகளை போலியாக இராஜினாமா செய்வதன் மூலம், புலம் பெயர்ந்தோரின் செயற்பாடுகளுக்குள் இலகுவாக நுழைந்து, அவற்றை அழிப்பது போன்ற பல திட்டங்களை கொண்டுள்ளார்கள்.

### மனித உரிமை, மனிதாபிமான, அரசியல் செயற்பாட்டாளர்கள்

இவ்விதமான பல சூழ்ச்சி வலைகளை இலங்கை அரசு கொண்டிருக்கும் வேளையில், புலம் பெயர் வாழ் மனித உரிமை, மனிதாபிமான, அரசியல் செயற்பாடுகளின் நடவடிக்கை எப்படியாக இருக்க முடியும்?

- ச.வி.கிருபாகரன் -
(மனித உரிமைகள் செயற்பாட்டாளர், பிரான்ஸ்)

முதலாவதாக - புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் தாம் வாழும் நடுகளின் சட்ட திட்டங்களை மதித்து நடக்க வேண்டும். விசேடமாக ஊடகத்துறையில் சம்பந்தப்பட்டோர், ஜனநாயக நாடுகளில் உள்ள எழுத்துச் சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்தால, பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படலாம்.

இராண்டவதாக - மேல் குறிப்பிட்ட வேலை திட்டங்களில் ஈடுபடுவோர், தாம் வாழும் நாடுகளில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுடன் (மனித உரிமை, மனிதாபிமான, சமய அமைப்புக்கள்) நெருங்கிய நட்பை ஏற்படுத்தி கொள்வதுடன், அந்நாடுகளில் உள்ள கல்விமான்கள, அரசியல் கட்சிகளுடன் நெருங்கி வேலை செய்யலாம்.

அத்துடன் தாம் வாழும் நாடுகளின் வெளிநாட்டு பணிப்பாளர், அதிகாரிகளுடன் நட்பை வளர்த்து கொள்ள வேண்டும். முடியுமானால் அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அரச தலைவர்களுடனும் நட்பை தேடிக் கொள்ளலாம்.

இதேவேளை, திடீரென ஏற்படும் சந்தேகத்துக்குரிய நபர்களின் தொடர்பில், நடவடிக்கையில் மிக அவதானமாக இருக்கவேண்டும்!

காரணம் தற்போதைய காலகட்டத்தில், 'எந்தப் புற்றில் எந்த பாம்பு உள்ளது' என்பதை யாராலும் அறிந்து கொள்ள முடியாதுள்ளது. ஆகையால் மேற் கூறப்பட்ட விடயங்கள் போன்ற வேறு பல எதிர்பாராத விடயங்களில், புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் அவதானமாக இருக்க தவறும் பட்சத்தில், இலங்கை திட்டமிடும் சர்வதேச முள்ளிவாய்க்கால் நடவடிக்கை மிக இலகுவாக நிறைவேறும்.

### கை கட்டி வேடிக்கை பார்க்க முடியுமா?

இன்றைய காலகட்டத்தில் இலங்கை தீவின் வடக்கு, கிழக்கில் வாழ்பவர்களாக இருந்தாலென்னா, புலம்பெயர் வாழ் தமிழர்களாக இருந்தாலென்ன, சகலரும் கடந்த மூன்று தசாப்த யுத்தத்தினால் ஏதோ ஒரு விதத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். பலர் உடன்பிறப்புக்களை இழந்துள்ளனர், சிலர் உறவினர்களை இழந்துள்ளனர், யாவரும் சொத்துக்களை இழந்துள்ளனர். சிலர் மன நோயாளிகளாகவும் உள்ளனர்.

இந்த இன அழிப்பை கைகட்டி வேடிக்கை பார்க்க விரும்பாத புலம்பெயர் மக்கள், சர்வதேச ரீதியாக நியாயம் கேட்கும் ஒவ்வொரு தடவையும், இலங்கை அரசு மிக இலகுவாக இவர்கள் செயற்பாடுகளுக்கு பயங்கரவாத முத்திரை குத்தி தமிழ் மக்களை தனிமை கொள்ளச் செய்கிறார்கள்.

உலகின் முக்கிய புள்ளிகள், சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள், ஐ.நா மனித உரிமையாளர் ஆகியோர், இலங்கை நடத்தி முடித்துள்ள போர்க் குற்றங்களை விசாரிக்க வேண்டுமென கூறும் இவ்வேளையில், இலங்கை இவ் வேண்டுகோளை மறுத்து வருகிறது. இவற்றிற்கு இலங்கை அரசினுடைய பொருளதார அரசியல் கொள்கை மட்டும் காரணியாக இல்லாது, சில நாடுகளின் முக்கிய புள்ளிகளுடனான இவர்களது தனிப்பட்ட நட்பும் காரணியாக அமைகிறது.

அப்படியானல் தமிழ் மக்கள் இலங்கைத்தீவில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியாக அழிந்து போக வேண்டியது தானா?

இவ்வேளையில் சர்வதேச ரீதியாக இலங்கை அரசு ஏற்றுக் கொண்ட சர்வதேச சட்டங்களை மீறுகிறார் களென்று சுட்டி காட்டுவது, குரல் கொடுப்பது ஒவ்வொரு மனித உரிமைச் செயற்பட்டாளர், மனித நேய பணிப் பாளரின் முக்கிய கடமையாகும். இச் செயற்பாடுகளை யாரும், சட்ட ஒழுங்கை மீறுவதாக குற்றம் சுமத்த முடியாது!

நன்றி: 'தமிழ்வின்' இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களது சமயலறைக் கழிவுப் பொருள்களை தோட்டத்திற்குரிய உரமாக்குவது எவ்வாறு?

பகுதி -2



### 2:1 நாம் ஏன் கழிவுகளை உரமாக்குகின்றோம்?

அநேகமாக சிறீலங்காவின் நகரப்பகுதியிலாயினும் சரி கிராமப்புறத்திலாயினும் சரி உற்பத்தியாகும் கழிவுப் பொருள்கள் கிடங்குளிலேயே சென்று முடிவடைகின்றன. தோற்றத்தில் குப்பை புதைக்கும் குழிகள் எல்லாம் ஒற்றுமையுடையன. எல்லாக் குழிகளும் வெறுப்பூட்டும் தோற்றமும் துர்நாற்றத்தை வெளிவிடுவனவாகவும் நுளம்புகளும் ஏனைய இலையான்களும் இனம்பெருகக் காரணமாக இருப்பனவுமாகவும் இருக்கும். எல்லோரும் வெறுக்கின்ற டெங்கு நுளம்புகளும் இதனுள் அடங்கும்.

வாழ வேறு மாற்றுவழியில்லாத மனிதர் இந்த நுளம்பு உற்பத்திக்குக் காரணமாக இருக்கின்ற புதைகுழிகளின் அருகிலேயே எதுவித கௌரவமும் அற்றவர்களாக வாழக்கை நடத்தவேண்டியுள்ளது. அவர்கள் தொடர்ச்சியான மனக்கிலேசத்துடனும் உடல் உபாதைகளுடனும் இந்தக் குப்பைக் கிடங்குகளின் அருகேயுள்ள தங்கள் வீடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

## எனது தாயாருக்குக் கொடுக்கப்பட்ட நகைகள் குப்பைகளை விற்றதன் மூலம் பெறப்பட்ட பணத்தில் பாட்டியால் செய்யப்பட்டன

எங்களுடைய வீடுகளில் உற்பத்தியாகும் கழிவுகளை குப்பைக் கிடங்குக்கு போக விடாதிருக்க முயற்சி செய்தோமாயின் குப்பைக் கிடங்கிற்குள் போகும் அரைப்பகுதியையாவது நாம் குறைக்கலாம். அதற்கு சூழலுடனான நட்பும் மகிழ்ச்சியுமான ஒரேவழி எங்கள் சொந்த சமையலறைக் கழிவுகளையும் தோட்டக் கழிவுகளையும் எங்கள் சொந்தத் தோட்டத்திற்குரிய உரமாக மாற்றுவதே ஆகும்.

### 2:2 இந்த உரம்பற்றிய விசேடம்தான் என்ன?

உடைந்து முடிகின்ற போதும் நிலையாக இருக்கின்ற எல்லா உற்பத்திப் பொருளும் ஒன்றுசேரும்போது அது உரம் என அழைக்கப்படுகின்றது. கழிவுகளைப் போலன்றி கழிவுகளில் இருந்து உருவாகும் உரமானது வேலை செய்வதற்கு மகிழ்ச்சி தரும் ஒரு பொருளாகும். நன்கு முதிர்ந்த உரமானது கருமையான நிறமுடையதாகவும் ஒரே தன்மையுடையதாகவும் இருக்கும். சுத்தமான மண் வாசனை உடையதாக இருக்கும். இதனைவிட உரமானது மண்ணைப் பதப்படுத்தும்.

உங்களது தோட்டம் மணற்பாங்கானது என வைத்துக்கொள்வோமாயின் அந்த மண் ஈரத்தை நன்கு பாதுகாத்து வைத்திருக்காது. அந்த நிலையில் நீங்கள் உங்கள் தோட்டத்திற்குத் தொடர்ந்து நீர் ஊற்றாவிட்டால் உங்களது தாவரங்கள் விரைவில் காய்ந்துவிடும். நீங்கள் இந்த வரண்ட மண்ணுடன் உரத்தைக் கலக்கும்போது உங்கள் மண் குறிப்பிடத்தக்க நீண்ட காலத்திற்கு ஈரத்தை வைத்துக்கொள்ள இந்த உரம் உதவும். அப்போது உங்கள் தோட்டத்திற்கு அடிக்கடி நீர் ஊற்றும் தேவை இல்லாது போய்விடுகின்றது.

உங்கள் தோட்டம் களி மண் போன்ற மண் கொண்டதாக இருப்பின் இம் மண் தன்னுள்ளே காற்றையும் நீரையும் சுற்றிவர அனுமதிக்காது. அப்போது உங்கள் தோட்டத்தில் நீங்கள் எதனையும் வளர்க்க முடியாது போய்விடும். இந்த மண்ணுடன் இயற்கை உரத்தைக் கலக்கும்போது மண்ணினுள்ளே காற்று இடங்கள் உருவாகி நீர் சுற்றியோட இடமேற்படும்.

மண்ணின் மேற்பரப்பில் உங்கள் தாவரங்களைச் சுற்றி நீங்கள் இந்த உரத்தைப் போடும்போது மேற்பரப்பு மண் காய்ந்து போகாது காப்பாற்றப்படும். அத்துடன் உங்கள் தாவரத்தைச் சுற்றி இந்தக் கடும் நிறம் உள்ள உரம் போடப்பட்டிருக்கும்போது அது உங்கள் தோட்டத்துக்கு நன்கு கவனிக்கப்படுவதும் முன்னேற்றமானதுமான ஒரு தோற்றத்தைத் தரும்.

உங்கள் தோட்டத்திலுள்ள தாவரங்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு போசாக்குகளான நைட்ரஜன், பொஸ்பரஸ், பொட்டாசியம் என்பன தேவை. இந்தப் போசாக்குகளை நிறைவு செய்யவே தாவரங்களுக்கு செயற்கை உரங்கள் பாவிக்கப்படுகின்றன. இந்தச் செயற்கை உரப் பாவிப்பின் பெரிய பிரச்சினை என்னவென்றால் இது உடனடியாக நீரில் கரைந்துவிடும். விரைவாக நீரினால் எடுத்துச் செல்லப்பட்டுவிடும்.

இவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட செயற்கை உரமானது இறுதியில் குளங்களையோ வாவிகளையோ அடைந்து அவற்றில் உள்ள தாவரங்களின் வளர்ச்சியை விரைவுபடுத்திவிடும். இந்த அதிகப்பட்ட தாவர வளர்ச்சியானது நீரை மாசுபடுத்திவிடும். இவ்வாறு நீர் மாசுறுவதால் அவற்றில் உயிர்வாழும் மீன்போன்ற உயிரினங்கள் இறந்துவிடுவதுடன் துர்நாற்றமும் வெளிவர ஆரம்பிக்கும். அத்துடன் கழுவிச் செல்லப்படும் இயற்கை உரமானது நிலநீர் வடிகாலமைப்பில் கலந்து வேறோரு வடிவில் சூழலை மாசடையச் செய்துவிடும்.

இயற்கை உரப்பாவனையில் கவர்ச்சிகரமான இன்னொரு பகுதி என்னவெனில் செயற்கை உரத்தில் உள்ள போஷாக்குகள் இயற்கை உரத்தில் உண்டு. அதன் அளவு குறைவாயினும் அவை இலகுவில் கரைந்து விடுவதில்லை. அதனால் பெரிய மழையின்போதுகூட அவை கழுவப்பட்டுச் செல்வதில்லை.

இயற்கை உரத்தில் இருக்கும் போஷாக்கானது மிகவும் மெதுவாகவே வெளிவிடப்படுவதனால் தாவரங்களுக்குப் போசாக்குத் தேவையான போதும் மட்டுமே அவை உறிஞ்சப்படும். சுருக்கமாகக் கூறின் இயற்கை உரம் போடப்படும் தாவரங்களால் சுற்றாடல் மாசடைவதில்லை.

இயற்கை உரமானது கல்சியம், இரும்பு, மக்னீசியம், மஸ்கனிஸ், சொலிக்கன் போன்றவற்றோடு ஏனைய தாதுப்பொருள்களான Boron, Cobalt, Zinc அயடினையும் கொண்டுள்ளது. தாவரங்களுக்குத் தேவையான கட்டுப்பாடு அளவுடைய இந்த தாதுப்பொருள்கள் தாவரங்களை சத்துக் குறைவில் ஏற்படும் நோய்களில் இருந்து பாதுகாக்கின்றது.

அதனால் நிச்சயமாக இயற்கை உரமானது உங்கள் தோட்டத்துத் தாவரங்களுக்கு இயற்கையுடன் நட்பைப் பேணும் நல்ல உரமாகும். இதனை உங்கள் தோட்டத்திலேயே தயாரிக்கும்போது பெறுமதி மிக்கதும்கூட.

### 2:3 எல்லாக் கழிவுகளும் உரமாக மாறுமா?

கழிவுகள் உரமாக மாற்றப்படுதலானது ஒரு இயற்கை நடைமுறையாகும். விடயம் யாதெனில் இயற்கைப் பொருள்தான் உரமாக மாறும். உதாரணமாக வாழைப்பழத்தோல், ஆட்டுப்புழுக்கை, இலைகள், வெட்டப்பட்ட புற்கள் போன்றவை உரமாக மாற்றமடையும். தேங்காய் சிரட்டைகளும் கடதாசிகளும் கூட உரமாக மாறும். ஆனால் மெதுவாகவே நாங்கள் கடையில் வாங்கும் அத்தனை சாமான்களுடனும் எண்ணற்ற ''பொலித்தீன்'' உறைகள் வீடு வந்து சேர்கின்றன. இதைவிட மதிய உணவுப் பேப்பர் (Lunch Sheet), தயிர், ஐஸ்கிறீம் போன்றவற்றின் பெட்டிகள் உடைந்த கழித்துவிடப்பட்ட பிளாஸ்ரிக் பொருள்கள் என்பன உரமாக மாறுவதில்லை. எமது வீட்டுக் கழிவுகளை உரமாக மாற்றும் நடைமுறையில் கடினமான பகுதி இதுதான்.

எங்களால் கழித்து விடப்படுகின்ற பொருள்களை வீதியிலிருந்து துப்புரவுத் தொழிலாளர் எடுத்துச் சென்று எமது கண்ணுக்கும் மூக்குக்கும் தெரியாத இடத்தில் அழித்து விடுதல்தான் காலம்காலமாக நடைமுறையில் உள்ள விடயமாகும். இந்தவிதமான கழிவகற்றும் முறையானது கௌரவமானதல்ல என்பதை நாமறிவோம். ஆயினும் இது நம் எல்லோருக்கும் வசதியான முறையாக இருக்கின்றது.

ஒரு இடத்தில் உரமாக்கக்கூடிய கழிவுகள் இன்னொரு இடத்தில் உரமாக்கப்பட மாட்டாது என்கின்ற உண்மையுடன் எம்[illegible] முடிவதில்லை. ஒவ்வொரு முறையும் நாம் எதையாவது தூர எறியும்போது நாங்கள் ஒரு நிமிடம் யோசிக்க வேண்டும். ஆனால் அது எமக்குக் கடினமாக இருக்கின்றது.

கடினமாக இருக்கிறது ஏனெனில் நமது பெறுமதியான நேரத்தை குப்பையைப் பற்றிச் சிந்திப்பதில் செலவிட நாம் விரும்பவில்லை. இந்தக் கடினமான எண்ணத்திலிருந்து நாம் விடுபடும்போது எமது சொந்தத் தோட்டங்களில் இயற்கைப் பொருள்கள் உரமாக மாறுகின்ற வெகுமானத்தை நாம் அனுபவிக்க முடியும்.

தமிழாக்கம்: சுசீலா சாரங்கபாணி

### 2:4 கழிவு எவ்வாறு உரமாக மாறுகின்றது?

இயற்கை உற்பத்திகள் இலட்சம் இலட்சம் காலமாக உரமாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. உலகில் மனிதன் தோன்றுவதற்கு முன்பிருந்தே இந்த உரவாக்கம் இடம்பெற்றிருக்கின்றது. உரவாக்கம் என்பது பூமியில் உள்ள பொருள்களை ஒரு சுற்று வட்டத்தில் கொண்டு வரும் செயற்பாடாகும். பூமியானது தனது ஆட்சியில் வைத்திருக்கும் லட்சோபலட்சம் அங்கிகளையும் உயிரிகளையும் பூமியில் உற்பத்திகளை நிலையான உற்பத்திகளாக மாற்றப்பயன்படுத்துகின்றது. இதுவே உரமென்று அறியப்படுகின்றது.



உரத்தின் முக்கிய பலன் என்னவெனில் இதன் தன்மையானது மறுபடியும் புதிய உற்பத்திகளைத் தோற்றுவிக்க இயற்கைக்கு உதவுகின்றது.

எந்த ஒரு சிறு நுண் அங்கிகளையும் கண்களால் பார்க்க முடியாது. இவை உருவத்தில் மிகவும் சிறிதாகையால் இவற்றைப் பார்ப்பதற்கு மிகவும் சக்திவாய்ந்த பூதக் கண்ணாடி தேவைப்படும். ஒவ்வொரு உற்பத்திப் பொருள்களிலும் இலட்சக்கணக்கான பக்றீரியா, பங்கசு போன்ற நுண் அங்கிகள் காணப்படுகின்றன. உற்பத்திப் பொருள் உரமாக உடைந்து போகும் வரை இவ்நுண் அங்கிகள் அவற்றின் மூலமாகவே உணவு பெறுகின்றன. நைட்ரஜன் ஆனது அமோனியாவாகவும் அமோனியா நைத்திரேட் ஆகவும் மாற்றப்பட்டு தாவரங்கள் இயற்கை உரமாக போசிக்க வைப்பது இந்த நுண் அங்கிகளேயாகும்.

(வளரும்)

கலாநிதி சாந்தினி
கலாநிதி கே.எஸ்.வல்கம



## நீண்ட காலம் நீடித்துழைக்கும் சீமெந்து

- தரமான சீமெந்து எரிமலை சாம்பல் மூலம் தயாரிக்கப்படுகின்றது.
- போசலானா சீமெந்து உறுதி மிக்கது, நீண்டகாலம் நீடித்துழைக்கும்.
- இலங்கையில் SLS 1247 தரத்துடன் உற்பத்தி செய்யப்படும் ஒரே சீமெந்து டோக்யோ சுப்பர் போசலானா மட்டுமே.

**டோக்யோ சுப்பர் போசலானா - நீண்டகாலம் நிலைத்திருக்கும்**

TOKYO CEMENT GROUP




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிகளின் வர்ண வகைகள்



மனிதர்களைப் பார்த்து ஒரு சில வார்த்தைகள் பேசும் கிளிகள் உண்மையில் புத்திசாலியான பறவைகள் தான். சோதிடர் முதல் வீட்டின் மாடத்திலும் செல்லமாக அன்பாக வளர்க்கப்படும் கிளிகளின் பல வகை இனங்கள் காணப் படுகின்றன. ஸிட்டாஸிடே (Psittacidac) எனும் குடும்பத்தைச் சேர்ந்த இவற்றுள் 330 வகையினங்கள் காணப்பட்டாலும் 20 வகைகள் எம்மோடு வாழ்கின்றன. எமக்கு பச்சைக் கிளியைத்தான் தெரியும். ஆனால் மஞ்சள், கறுப்பு, நீலம் என பல வர்ண ஜாலங்களிலும் கிளிகள் காணப் படுகின்றன.

ஆவுஸ்திரேலியாவின் மயில் கொண்டைக் கிளிக்குத்தான் ''உலக அழகிப்பட்டம்'' அவ்வளவு கொள்ளை அழகான கிளி! நியூசிலாந்தின் ஆந்தைக்கிளி பறப்பதோடு சிலவேளைகளில் நடந்தும் செல்லக் கூடியது. சோலைகளும் அடர்ந்த காடுகள் மரக்கூடங்கள் உள்ள இடங்கள் தான் இவற்றின் சொர்க்கபுரி. மரப்பொந்துகளில் கூடு கட்டி அழகிய வட்டவடிவ நுழைவாயில்கள் அமைத்து மேலும் நுணுக்கமான வேலைப்பாடுகள் செய்து அரண்மனை வாழ்வு வாழ்கின்றன.

யாருக்கும் தீங்கிழைக்காத இவை விவசாயிகளுக்கு இடையூறுகளைக் கொடுக்கின்றன. வயல் வெளிகளில் விளையும் தானியங்கள், நாற்றுகள் , பழவகைகள் போன்றவற்றை சேதப்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது.

கூட்டம் கூட்டமாகவே இவை உணவு தேடச் செல்கின்றன. மனித, பிற விலங்கினங்களின் நடமாட்டத்தை மிகத் துல்லியமாக உணரக் கூடிய வல்லமை இவற்றின் சிறப்பு ஆகும்.

மாலை வேளைகளில் திசை மாறாது தங்களின் இருப்பிடங்களுக்கு வந்து விடுகின்றன. உணவு உண்ட சந்தோசக் களிப்பில் கோரஸ் கத்தல் காதைப் பிளக்கும். அடர்ந்த மரக் கூட்டங்களில் நீண்டநேரம் இவற்றின் இன்னிசைக் கச்சேரிகள் இடம் பெறும். இதன் பின்னர் விடியும் வரை கூட்டில் ஓய்வெடுக்கின்றன. சில குறும்புக்கார கிளிகள் தலைகீழாய் தொங்கியபடி ஜாலியாகக் குட்டித் தூக்கம் போடும். மேலும் பழவகைகள் காணப்படும்.

காலங்களில் இவற்றின் அட்டகாசம் அதிகமாயிருக்கும்.

பழங்களைக் கொத்தி உண்பதோடு மட்டுமன்றி அவற்றில் சேதமும் விளைவிக்கின்றன. ஒற்றைக்காலில் நின்றபடி மற்றைய காலால் கூட இரையைப் பற்றிப் பிடித்து உ ண்ணும் தன்மை கொண்டவை.

கிளிகள் பிற பறவைகளை அதிகம் சேர்த்துக் கொள்வதில்லை. இவற்றின் ஒற்றுமை மகா ஆச்சரியம். ஒரு கிளி இறந்தால் அதனைச் சுற்றி எல்லாம் ஒன்று கூடி நீண்ட நேரம் சோககீதம் இசைத்துக் கொண்டேயிருக்கும்.

கிளிக் கூட்டத்தில் வாலிபக் கிளிகள் கண்களை உருட்டி கண்களால் காதல் மொழி பேசி தமக்குப் பிடித்த இணையோடு சேர்கின்றன. பெண் கிளியைக் கவர்வதற்கு ஆண்கிளிகள் சிலவற்றுக்கு 'பிங்க்' அல்லது 'றோஸ்' நிறங்களில் சிறகமைப்புக் காணப்படும்.

இந்த வண்ணப் புறத்தை அடிக்கடி காதலிக்குத் தூக்கிக் காட்டும். சிறகுகளை சிலிர்த்து தன் காதலை வெளிக்காட்டும்.

பின்னர் தன் காதலிக்கு சுவையான இரையைத் தேடி சினிமாப்பட கதாநாயகர்கள் போல் தன் வாயிலிருக்கும் இரையை முத்தமிட்டவாறே ஊட்டிவிடும்.

கிளிகள் கவர்ச்சியான தோற்ற அமைப்பும், அபூர்வமான குணங்களையும் கொண்டிருப்பதால் பெருமளவில் உலகெங்கும் செல்லப் பிராணிகளாக வளர்க்கப்படுவதோடு மட்டுமன்றி வீடுகளில் அழகுக்காகவும் வளர்க்கப்படுகின்றன.

து.ஜெயரூபன், கந்தரோடை.

# முதுமையை வெல்லுதல் சாத்தியமா?

முதுமையடைதலை நிறுத்துதல் சாத்தியமா? உடல் கலங்களைச் சீரழித்து மனித இனத்தை முதுமையடையச் செய்யும் பொறிமுறைகள் என்ன என்பதையிட்டு மேலை நாடுகளில் தீவிர ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் முதுமையுடன் தொடர்பான அல்கெமயர், மாரடைப்பு, புற்றுநோய் முதலிய கொடிய நோய்கள் பற்றிய ஆய்வுகள் வெகுவாக முன்னேற்றம் அடைந்துள்ளன. விரைவில் இவற்றுக்குத் தகுந்த மருந்துகள் கண்டுபிடிக்கப்படும் சாத்தியம் தெரிகிறது என்கிறார் லண்டன் பல்கலைக்கழக கல்லூரியின் முதுமை ஆரோக்கிய நிறுவன அத்தியட்சகர் லிண்டா பட்றிஜ்.

முதுமையடைதல் ஆய்வுகளின் முக்கிய குறிக்கோள். ஆயுள் காலத்தை நீடிப்பது மட்டுமல்ல, முதுமையிலும் ஆரோக்கியத்தை விருத்தியடையச் செய்து சந்தோஷமாக வாழ வைத்தலே என்கிறார் அவர்.

அமெரிக்கா முதுமை ஆய்வு நிறுவனத்தில் மேற்கொண்ட ஆய்வு முயற்சி ஒன்றில் உணவுக் கட்டுப்பாடு, குறிப்பாக கலோரிப் பெறுமானம் குறைந்த உணவுகளை உட்கொள்ளுதல் வாழ்வுக் காலத்தை அதிகரிக்கச் செய்யும் என கண்டறிந்துள்ளார்கள். அந்த ஆய்வில் உணவுக் கட்டுப்பாட்டில் இருந்த மந்திகளுக்கு தொந்தி வயறு குறைவாகவும், குளுக்கோஸ் சகிப்புத் தன்மை விருந்தியடைந்தும், இன்சுலின் உணர்ச்சியுடையதாகவும் இருந்தது கண்டறியப்பட்டது. இவற்றின் விளைவாக அந்த மந்திகளுக்கு முதுமை தொடர்பான நோய்கள் தோன்றும் வாய்ப்பு குறைவாக இருந்தது.

அதேவேளை விஸ் கொன்சின் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பிறிதொரு ஆய்வில் உணவுக் கட்டுப்பாடு இல்லாமல் வளர்ந்த மந்திகளில் முதுமை தொடர்பான நோய்களினால் 37% மரணமடைந்தன என்றும் உணவுக் கட்டுப்பாட்டில் பரிசோதனைக் கூடத்திலிருந்த மந்திகளில் 17% மட்டுமே அவ்வகை நோய்களினால் இறந்தது தெரியவந்தது. இந்த ஆய்வுகள் ஆரம்ப நிலையிலேயே இருக்கின்றன. ஆய்வு முழுமையடைந்ததும் விரைவில் முதுமையை வெல்லும் வழிவகைகளை மக்களுக்கு விரைவில் எடுத்துச் சொல்வோம் என்கிறார் லிண்டா.

எஸ். பேராசிரியன்


எமது தாய்நாட்டின் பொருளாதார அபிவிருத்திற்கான பயணத்தில் இணைந்து உறுதுணையளித்திட அனைத்து தேசபக்தி மிக்க இலங்கையர்களுக்குமான தருணம் இதோ!

LOLC
அபிவிருத்திப் பாதையின் முன்னோடி



உங்கள் வெளிநாட்டு பணத்தினை இலங்கையில் முதலீடு செய்யும் பெறுமதிமிக்க தருணத்தில் இணைந்த பெருமையினை நீங்களும் பெற்றிடுங்கள். நீங்கள் உழைத்த பணத்தை தாய்நாட்டில் முதலீடு செய்திடுங்கள். LOLC குழுவினை சேர்ந்த லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடட் உங்களின் முதலீடுகளுக்கு சிறந்த பாதுகாப்பினையும் வட்டியினையும் வழங்கிடும். LOLC பலமிக்க சர்வதேச நிதி ஸ்தாபனத்தினை பின்பலமாககொண்டது. LOLC ஆனது உலகின் மிகப்பெரிய லீசிங் நிறுவனம் மற்றும் ஜப்பானின் இரண்டாவது மிகப் பெரிய நிதி தீர்வுகளுக்கான நிறுவனமாக ஓரிக்ஸ் கூட்டுத்தாபனம் - ஜப்பானின் கீழ் 26 நாடுகளில் செயல்படும் உலகளாவிய ஓரிக்ஸ் வலையமைப்பின் அங்கத்தவர்.

லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடட் fitch rating இல் A- தரச்சிறப்பை பெற்றுள்ளது.

- உங்களின் பணத்தை ஒருமாதத்தின் பின் வேண்டிய நேரம் மீளப்பெறலாம். பகுதியாகவும் மீளப்பெறலாம்.
- குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் பெறும் மீளப்பெறல்களுக்கு வட்டியில் கழிவு இல்லை
- வைப்புக்களின் பெறுமதி அதிகரிக்க புதிய வைப்புக்கள் மூலம் எந்த நேரமும் அதிகரிக்கலாம்
- வட்டி மாதாந்தம் வழங்கப்படும்.

உங்கள் தேசத்தின் அபிவிருத்திக்கு உதவும் அதேவேளை, உங்கள் பணத்தை பாதுகாப்பான மற்றும் அதிக வட்டியை தரும் இடத்தில் முதலீடு செய்யுங்கள்

அழையுங்கள் 0773 815602

Email : lofin@lankaorix.com

லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடட்
LOLC வர்த்தக குழுமத்தின் நிறுவனம்
100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இராஜகிரிய.
தொலைபேசி: 5880880, ஈமெயில் lofin@lankaorix.com, வெப்: www.lankaorix.com

லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடட் 2001 டிசெம்பர் 13 ஆம் திகதி சட்டமுறைகளின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட பொது .பிட்ஸ் ரேடிங்ஸ் நிறுவனத்தினால் A- (lka) தரச்சிறப்பை பெற்றுள்ளது. 1988 ஆண்டு 78 ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் சட்டப்பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

BRANDS ALLEY


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் வைத்தியசாலைக்கு புதிய பிரசவ விடுதி

நவாலி,பெப்.10

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட பிரசவ விடுதியின் பால் காய்ச்சிப் படம் வைக்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ஏகாம்பரமூர்த்தி பத்மராணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன் திறப்புவிழா விரைவில் இடம் பெறலாமென்று தெரிவிக்கப்படுகிறது.

(ரி-100)

## பொன்சேகாவை சில சக்திகள் பகடைக்காயாகப் பயன்படுத்தின

### ரத்ன ஜோதி தேரர் கூறுகிறார்

கொழும்பு, பெப்.10

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் நோக்கில் சில சக்திகள் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன. தத்தமது நோக்கங்களை நிறைவேற்றும் குறிக்கோளுடன் சரத் பொன்சேகாவைச் சில சக்திகள் பகடைக் காயாகப் பயன்படுத்தியுள்ளன என 'புனிதி இளைஞர் அமைப்பின்' பணிப்பாளர் நாயகம் ரத்னஜோதிதேரர் தெரிவித்துள்ளார்.

அரசை நெருக்கடியான நிலைக்கு இட்டுச்செல்லும் நோக்கில் சில ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்கள் நடைபெற்றுவருகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமது குழுக்கள் மீது தாமே தாக்குதல்களை நடத்தி அந்தப் பழியை அரசின் மீது சுமத்துவதற்கும் சிலர் முயற்சித்து வருகின்றனர். தேர்தலின் பின்னர் பல்வேறு பிரதேசங்களில் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்நிலைமையானது எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின்போது அரசுக்கு எதிரான ஓர் அபிப்பிராயத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் சூழ்ச்சித் திட்டமே ஆகும். மக்கள் பேராதரவைப் பெற்றிருந்த முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை அரசியலில் ஈடுபடவைத்து அவரை அரசியல் அநாதையாக எதிர்க்கட்சிகள் மாற்றியுள்ளன. - என்று அவர் தெரிவித்தார்.

(சி)

# 17ஆவது ஆண்டு நினைவஞ்சலி



காரைநகர் வாரிவளவு

அமரர்

**உயர்திரு இ.ச.பேரம்பலம்**

E.S.P. அவர்கள்

ஸ்தாபகர் E.S. பேரம்பலம் அன் கம்பனி
(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

(திதி: 10.02.2010)

தோற்றம்
26.04.1926

மறைவு
19.01.1993

ஆண்டுகள் பலவாகினும்
ஆன்ற பெரியோனே, நீர்
பூண்ட பணிகள் எல்லாம்
பொன்னெழுத்தில் ஆகுமன்றோ!
ஈண்டு இங்கே எழுந்து நிற்கின்ற
E.S.P. என்னும் எழிலார் நிறுவனத்தை
தாயாய்ப் புரந்து தரணிக்கே அளித்து
எம்மைச் சேயாக்கி, சேவைக்காக்கி
எமக்குப் பெரும் பதத்தை வழங்கி நின்றீர்
நண்பனாய் மந்திரியாய் நல்லாசானுமாய்
பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய்
எல்லாமாய் எமக்கிருந்த ஏற்றமிகு பெருந்தகையீர்
சொல்லில் அடங்காது, நும் தூய பணிகள் என்றும்
நெஞ்சிலே கொண்டுமை நீள நினைத்தென்றும்
நீண்ட வழி சென்றே நீர் நினைத்த பணி
முடித்து நிற்போம்...

E.S.P & COMPANY,
124 Old Moor Street,
Colombo - 12.

நீங்காத நினைவுகளுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(C/564738)

## யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

**வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி - 2010**

தலைவர் : திருமதி சிவமலர் அனந்தசயனன் (அதிபர்)
காலம் : 11.02.2010 வியாழக்கிழமை
நேரம் : பி.ப. 1.30மணி
இடம் : கல்லூரி மைதானம்.

பிரதம விருந்தினர்கள்
திரு.நடராஜர் பகீரதன் அவர்கள் (மகாஜனன்)
முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம்.
திருமதி அருந்ததி பகீரதன் அவர்கள்
உதவி முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, மானிப்பாய்.
கௌரவ விருந்தினர்
திரு. லலித் வீரசிங்ஹ அவர்கள்
O.I.C Police Station, Tellippalai

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(C/564685) கல்லூரிச்சமூகம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**தர்மலிங்கம் ரவிராஜ்**

தோற்றம்:
27.01.1958

மறைவு:
11.01.2010

கடந்த 11.01.2010அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (10.02.2010) புதன்கிழமை எமது இல்லத்தில் மு.ப. 11மணியளவில் நடைபெறும்.

இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'உதயபானு',
கண்டிவீதி, கொடிகாமம். குடும்பத்தினர்.

(92354)


## வெள்ளிவிழாவை முன்னிட்டு

அனைத்து கணினி பாடநெறிகளுக்கும் CSC வழங்கும்

75% நேரடி ஸ்கொலர்சிப் விசேட சிறப்புச் சலுகை

25 YEARS

CSC®
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2000 CERTIFIED INSTITUTION

**வெள்ளிவிழா சிறப்புச் சலுகை 28-02-2010 வரை மட்டுமே!**

* மாணவர்கள் விரும்பிய பாடநெறி ஒன்றை நேரடியாக தெரிவு செய்யலாம்.
* பதிவுகளை உடனே மேற்கொண்டு வகுப்புக்களில் இணைந்து கொள்ளலாம்.
* தெரிவு செய்யும் பாடநெறிக்கு 25% மட்டுமே கட்டணமாக செலுத்த வேண்டும்.
* இலவச பாடப்புத்தகங்கள் வழங்கப்படும்.
* 100% செயன்முறைப் பயிற்சி.
* அடிப்படைத் தகைமை G.C.E (O/L).
* டிப்ளோமா சான்றிதழ்கள் அனைத்தும் Asian - CSC நிறுவனத்தால் வழங்கப்படும்.



Diploma Courses

* Information Technology
* IT & Web Programming
* PC Professional
* Graphic Design & DTP
* Macromedia Application
* Adv. Java Programming
* Office Automation
* Software Engineering
* Web Design & Development
* Digital Video Production
* Hardware & Networking
* Computer Applications
* Digital Pre-Press

சர்வதேச தர நிர்ணய கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பக் கல்லூரி

ISO 9001 : 2000

மேலதிக விபரங்களுக்கு

ASIAN COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021-222 5677

கொடிகாமம் வீதி, நெல்லியடி.
T.P : 021-3734088



## M- 80 விற்பனை

ஒரு கை
பாவிப்பில் உள்ள
M-80 பஜாஜ்
மோட்டார் சைக்
கிள் விற்பனைக்கு
உண்டு.
NO.26,
சீனிவாசகம் றோட்,
யாழ்ப்பாணம்.

(92360)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
04 ★ 09 ★ 1949



மறைவு
11 ★ 01 ★ 2010

**பொன்னையா திருக்கேதீஸ்வரம்**

கடந்த 11.01.2010 திங்கட்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (10.02.2010) புதன்கிழமை மு.ப. 10மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வில் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பாடசாலை வீதி,அளவெட்டி தெற்கு. (92349) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைப்புக் கட்டுரை வினாக்கள்: தொடர்ச்சி......

04\. b) 2) $40cm^3$ கரைசலில் உள்ள $H^+$ இன் மூல் எண்ணிக்கை யாது?

..............................................................

3) முதலாவது தாக்கத்தின் பின் $400cm^3$ கரைசலில் $H^+$ இன் மூல் எண்ணிக்கை யாது?

..............................................................

4) ஆரம்பத்தில் சேர்த்த $H^+$ இன் மூல் எண்ணிக்கை யாது?

..............................................................

5) $CaCO_3$ உடன் தாக்கம்புரிந்த $H^+$ இன் மூல் எண்ணிக்கை யாது?

..............................................................

6) முருகைக்கல்லில் உள்ள $CaCO_3$ இன் மூல் எண்ணிக்கை யாது?

..............................................................

7) முருகைக்கல்லில் உள்ள $CaCO_3$ இன் திணிவு நூற்றுவீதம் யாது?

..............................................................

8) இக் கணிப்புக்குப் பயன்படுத்திய எடுகோள் யாது?

..............................................................

## பகுதி – II B, கட்டுரை வினாக்கள்

05\. அ. பிணைப்புச் சக்தியை வரையறுக்குக.

ஆ. சில இரசாயனத் தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| பிணைப்புப் பிரிகைச் சக்தி | $KJmol^{-1}$ |
|---|---|
| C - H | + 435 |
| Cl - Cl | + 243 |
| C - Cl | + 339 |
| H - Cl | + 431 |

கீழே தரப்பட்டுள்ள தாக்கத்திற்கான வெப்ப உள்ளுறை மாற்றத்தைக் கணிக்குக.

$CH_4 + Cl_2 \rightarrow CH_3Cl + HCl$

இ. 1) வன்மூலங்களால் வன் அமிலங்களின் நடுநிலையாக்கல் வெப்ப உள்ளுறை ஒரு மாறிலி எனும் நோக்கலை விளக்குக.

2) ஒரு வன்னமிலத்தால் 2M.25ml NaOH கரைசலை முற்றாக நடுநிலையாக்க 2.85KJ வெப்பம் வெளிவிடப்பட்டது. ஒரு வன்னமிலத்தால் அதே செறிவும் கனவளவும் உடைய அமோனியா கரைசல் ஒன்றை முற்றாக நடுநிலையாக்க 2.75KJ வெப்பம் வெளிவிடப்பட்டது. மென்மூலத்தின் கூட்டற்பிரிவின் வெப்ப உள்ளுறையைக் காண்க.

ஈ. KI, NaBr, LiCl என்பவற்றின் சாலகச்சக்தி அதிகரிக்கும் ஒழுங்கைக் குறிப்பிடுக.

06\. அ. $25^oC$ இல் $CH_3COOH$ இன் கூட்டற்பிரிகை மாறிலி $1.8\times10^{-5}moldm^{-3}$ எனின், இவ் வெப்பநிலையில் PH=4 ஐக் காட்டும் $CH_3COOH$ கரைசலின் செறிவு யாது?

ஆ. 0.01M HCl கரைசலின் $2\times10^{-8}$ $moldm^{-3}$ $Mn^{2+}$ உம், $2\times10^{-8}moldm^{-3}$ $Cu^{2+}$ உம் இருக்கின்றன. இக்கரைசல் 0.01 M $H_2S$ இனால் திரும்பலாக்கப்படின், $Mn^{2+}$, $Cu^{2+}$ என்பவை சல்பைட்டுக்களாக வீழ்படியுமா அல்லது படியமாட்டாதா என அறிக.

$H_2S$ இன் $K_1$, $K_2$ முறையே $1.0\times10^{-7}$, $1.2\times10^{-5}$

MnS இன் K S.P = $1.4\times10^{-5}$

CuS இன் K.S.P = $8.5\times10^{-45}$

இ. NO வாயுவானது $Cl_2$ வாயுவுடன் தாக்கம்புரிந்து NaCl வாயுவானது $25^oC$ இல் உருவா கின்றன. இத்தாக்கம் பற்றிய தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| [NO].$moldm^{-3}$ | [$Cl_2$] $moldm^{-3}$ | $Cl_2$ தாக்கமுறும் வீதம் $moldm^{-3}S^{-1}$ |
|---|---|---|
| 0.1 | 0.1 | $8\times10^{-3}$ |
| 0.5 | 0.1 | $2\times10^{-1}$ |
| 0.1 | 0.5 | $4\times10^{-2}$ |

1) இரண்டு தாக்கங்களினதும் தாக்க வரிசைகளைக் கணிக்குக.

2) தாக்கத்தின் தாக்கவீத மாறிலியைக் கணிக்குக.

3) 0.3mol No(g) உம், 0.06mol $Cl_2$(g) உம் 3 லீற்றர் குடுவையில் கலக்கப்பட்டால் $25^oC$ இல் 0.5 S எத்தனை மூல் $Cl_2$(g) அழிந்துவிடும் எனக் கணிக்குக.

ஈ. $H_2NCH_2COOH$ தாக்கற்தன்மை உடையது எனும் கூற்றை மெய்ப்பிக்குக.

07\. அ. 1) ''நியம தோன்றல் வெப்பவுள்ளுறை'' என்ற பதத்தை வரையறுக்குக.

2) பின்வரும் தரவுகளைத் தகுந்த சக்திமட்ட வரைபு ஒன்றில் பயன்படுத்தி கிரபைற்றின் பதங்கமாதல் சக்தியைக் கணிக்குக.

$C_2H_{2(g)}$ இன் நியம தோன்றல் வெப்பவுள்ளுறை = +226.5 $KJmole^{-1}$

H - H, C - H, C = C பிணைப்புக்களின் பிணைப்புச் சக்திகள் முறையே +434.7, +413.8, +810.9 $KJmol^{-1}$ ஆகும்.

ஆ. ''பிணைப்புச்சக்தி'' என்ற எண்ணக்கருவைப்பற்றி யாது விளக்குகின்றீர்? பின்வரும் தரவுகளில் இருந்து மெதேனில் C - H இன் சராசரிப் பிணைப்புச் சக்தியைத் தகுந்த வெப்ப இரசாயனச் சக்கரத்தை உபயோகித்துக் கணிக்குக.

C (பென்சிற்கரி) + $2H_2(g) \rightarrow CH_4$ $\Delta H = 74.8KJmol^{-1}$

C (பென்சிற்கரி) $\rightarrow$ (g) $\Delta H$ = -710.5 $KJmol^{-1}$

$H_2(g) \rightarrow 2H(g)$ $\Delta H$ = -432.0 $KJmol^{-1}$

இ. 100ml 0.1m NaOH கரைசல் வெப்பக் குடுவையில் உள்ள 100ml 0.1M HCl கரைசலுள் சேர்த்துக் கலக்கப்பட்டபோது 0.6K வெப்பநிலை உயர்வு அவதானிக்கப்பட்டது. வெப்பக் குடுவையின் வெப்பக் கொள்ளளவு $142JK^{-1}$ எனக் கொள்க.

1) NaOH - HCl நடுநிலையாக்கல் வெப்பத்தைக் கணிக்குக.

2) உமது கணிப்பில் நீர் பயன்படுத்தும் இரு முக்கிய எடுகோள்களைக் குறிப்பிடுக.

08\. அ. 1M பேரியம் குளோரைட்டுக் கரைசலும், 1M அமோனியம் சல்பேற்றுக் கரைசலும் உமக்குத் தரப்பட்டால், இவற்றிடையே நடைபெறும் தாக்கத்திற்கான பீசமானத்தை ஆய்வுகூடத்தில் எவ்வாறு துணிவீர் என்பதை விளக்குக.

ஆ. 1M, 200ml ஐதரோகுளோரிக் அமிலக் கரைசல் 1.2g மக்னீசியத்துடன் தாக்கமடைய விடப்பட்டது.

1) நி.வெ.அ இல் என்ன கனவளவு ஐதரசன் வெளிவிடப்படும்?

2) மிகையான அமிலத்தை நடுநிலையாக்குவதற்கு வேண்டிய 0.5M சோடியம் ஐதரொட்சைட்டுக் கரைசலின் கனவளவு யாது?

( H=1, Mg=24, Na=23, O=16, Cl=35.5)

09\. அ. 1) மூலர்க்கனவளவு என்பதை வரையறுக்குக.

2) $KMnO_4$ இனைப் பயன்படுத்தி ஒட்சிசனின் மூலர்க்கனவளவு துணியும் பரிசோதனையின் இரசாயனத் தாக்கத்தைச் சமன்செய்த சமன்பாடு மூலம் தருக.

3) இப்பரிசோதனையில் $KMnO_4$ பயன்படுத்துவதற்கான 2 காரணங்களைத் தருக.

4) இப் பரிசோதனையில் இருந்து ஒட்சிசனின் மூலர்க்கனவளவை எவ்வாறு துணிவீர் என சுருக்கமாகத் தருக.

ஆ. 1) 1.96g $cm^{-2}$ அடர்த்தியுடைய வர்த்தக சல்பூரிக் அமிலத்தில் 98% (w/w) சல்பூரிக் அமிலம் உண்டு. இதன் செறிவை $moldm^{-3}$ இல் காண்க.

2) இவ் அமிலத்தை உபயோகித்து எவ்வாறு 0.1M $250cm^3$ சல்பூரிக் அமிலக் கரைசல் தயாரிக்கலாம்?

3) தயாரித்த சல்பூரிக் அமிலக் கரைசலை முகவை ஒன்றினுள் இட்ட மாணவன் அம் முகவையில் $32^oC$ எனக் குறிப்பிடப்பட்டிருந்ததை அவதானித்தான். இவ்வாறு முகவையில் வெப்பநிலை குறிப்பிடப்பட்டிருந்ததன் காரணம் என்ன?

10\. 0.5M $MgCl_2$ நீர்க்கரைசலையும், 1.5M KOH நீர்க்கரைசலையும் தகுந்த ஒழுங்கமைப்பின் மூலம் $40cm^3$ கொண்ட தொகுதிகள் உருவாக்கப்பட்டன. இவற்றைக் கவனத்திற்கொண்டு வினாக்களுக்கு விடை தருக. (Mg = 24, O = 16, H = 1)

அ. $MgCl_2$, KOH தாக்கத்திற்கான சமப்படுத்திய சமன்பாட்டைத் தருக.

ஆ. $MgCl_2$, KOH தாக்கத்திற்கான பீசமானம் யாது?

இ. அதிகூடிய வீழ்படிவினைப் பெறும் தொகுதியை உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட $MgCl_2$ நீர்க்கரைசலின் கனவளவு யாதெனக் கணிக்குக.

ஈ. பெறப்படும் உச்ச வீழ்படிவின் திணிவைக் கணிக்குக.

உ. சேர்க்கப்படும் $MgCl_2$ இன் கனவளவு $32cm^3$ ஆகக் கொண்ட தொகுதியில் பெறப்படும் வீழ்படிவின் திணிவிற்குச் சமனான திணிவை ஏற்படுத்தக்கூடிய வேறொரு தொகுதியில் சேர்க்கப்படும் KOH இன் கனவளவு யாதெனக் கணிக்குக.

11\. அ. பின்வருவனவற்றை வரையறுக்குக.

1) நடுநிலையாக்கல் வெப்பம்.

2) நடுநிலையாக்கற்சக்தி.

ஆ. ஒரு மூலர் ஐதரோகுளோரிக் அமிலம், 2 மூலர் ஐதரோகுளோரிக் அமிலம், திண்மசோடியம் ஐதரொட்சைட்டு என்பன உமக்குத் தரப்பட்டால், ஆய்வுகூடத்தில் எசுவின் விதியை எவ்வாறு வாய்ப்புப் பார்ப்பீர் என்பதை விளக்குக.

இ. பின்வரும் தரவுகளைப் பயன்படுத்தி எதீனில் காணப்படும் C = C பிணைப்புச் சக்தியைக் கணிக்குக.

| பிணைப்புச்சக்தி | |
|---|---|
| C - C | 348 KJ/mol |
| Cl - Cl | 342 KJ/mol |
| C - Cl | 338 KJ/mol |
| $C_2H_4 + Cl_2 \rightarrow C_2H_4Cl_2$ | $\Delta H$ - 170KJ |

12\. அ. 1.8 கி/ச.ச.மீ அடர்த்திகொண்ட தூய சல்பூரிக் அமிலத்தில் இருந்து 1l, 0.05 மூலர் சல்பூரிக் அமிலக் கரைசலை எவ்வாறு தயாரிப்பீர்?

ஆ. 0.05 மூலர் செறிவுடைய 100 மி.கி சல்பூரிக் அமிலம் ஒரு குடுவையில் எடுக்கப்பட்டு சிறிதளவு நீரற்ற சோடியம் காபனேற்று சேர்க்கப்பட்டது. மேலும் வாயு வெளியேறாதவரை கரைசல் வெப்பமேற்றப்பட்டபின் கரைசலின் கனவளவு 100 மி.கி ஆகும்வரை நீர் சேர்க்கப்பட்டது. இக் கரைசலின் 25 மி.கி இன் நடுநிலையாக்கத்திற்கு 18 மி.கி 0.1 மூலர் NaOH கரைசல் தேவைப்பட்டது. சேர்க்கப்பட்ட சோடியம் காபனேற்றின் திணிவு என்ன?

(Na=23, C=12, O=16)

இ. 0.2 மூலர் $CuSO_4$ கரைசல் 0.1 மூலர் $Ba(OH)_2$ கரைசல் என்பன பின்வரும் கனவளவு விகிதங்களில் கலக்கப்பட்டு உண்டான வீழ்படிவின் உயரங்கள் அளவிடப்பட்டன. கரைசலின் கனவளவுக்கு எதிராக வீழ்படிவின் உயரத்தைக் குறித்துப் பெறக்கூடிய வரைபைத் தருக.

$CuSO_4 + Ba(OH)_2 \rightarrow BaSO4\downarrow + Cu(OH)_2\downarrow$

-நிறைவுற்றது-

''2010 புலமைப்பரிசில் மாணவர்களுக்காக பல மாவட்ட ஆசிரியர்களால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பெறுமதிமிக்க படைப்பு''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



மனைவி வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக்கலாம். தொழில் ரீதியாக உங்களின் செயற்பாடுகளை மற்றவர்கள் பாராட்டலாம். உங்களின் அனுபவம் ஒன்றை மற்றவர்களுக்கு அறிவுரையாகச் சொல்வீர்கள். ஒவ்வாத பண்டங்களை சாப்பாட்டு வயிறு உபாதைகளுக்கு ஆள்படலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும் நாள்.

### இடபம்



ஏமாற்றங்களைத் தவிர்க்க எச்சரிக்கையாகச் செயற்பட வேண்டிய நாள். எந்த வேலையும் உடனுக்குடன் முடியாமல் இழுத் தடிக்கலாம். சிலரை தேடிச் சென்று பார்க்க முற்பட்டு அவர்கள் இல்லாமல் திரும்பலாம். பணவரவு ஒன்று வந்தாலும் அதை உடனே கடன் மிகுதி ஒன்றைத் தீர்க்கக் கொடுக்கலாம். மனக்குழப்பம் கூடும்.

### மிதுனம்



ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் வருமானம் பெறலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்க நேரிடலாம். நண்பர்கள் மூலம் மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி கிடைக்கலாம். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். புதிய உறவுப் பெண்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். பிள்ளைகளால் சந்தோஷம் உண்டு.

### கடகம்



உறவினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். எதிர்பார்த்த சில விடயங்கள் நடக்காமல் போனாலும், எதிர்பாராத ஒரு காரியம் நடக்கலாம். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். வீடு மாற்ற விவகாரங்களில் முன்னேற்றமான திருப்பங்கள் உண்டு.

### சிங்கம்



வெளியிடங்களுக்குச் செல்லும்போது, உங்களை முன்பே அறிந்த ஒருவர் கண்டு கொள்ளாமல் இருக்கலாம். வெளிநாட்டுப் பயண முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பணிபுரிவோர் மேலதிகாரிகளின் கட்டளைகளை மறப்பதன் மூலம் அதிருப்திக்கு ஆளாகலாம். சில வேலைகளில் ஆரம்பத்தில் தாமதம் ஏற்பட்டாலும், பின்னர் முடிவுக்கு வரும்.

### கன்னி



பழைய பொருள்களை மாற்றி புதிய பொருள்கள் வாங்கலாம். உறவினர்கள் சிலருக்கு முக்கியமான விடயங்களில் நல்ல யோசனை சொல்வீர்கள். எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். மாமன், மைத்துனர்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். எதையாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும்.

### துலாம்



திட்டமிட்டது மட்டுமின்றி, திட்டமிடாத காரியங்களும் நடக்கும் நாள். நண்பர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். ஏதாவது ஒரு வழியில் பணவரவுகளைப் பெறலாம். தந்தை வழியில் ஏற்பட்ட சிரமங்கள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். அயலார் அனுசரணையாக நடந்துகொள்வர். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு.

### விருச்சிகம்



வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கிக் கொடுக்க கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். கடன் மிகுதிகள், கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள். மற்றவர்களுக்காக நீங்கள் பிணை கொடுக்கலாம். அரட்டை அடிப்பதில் நாட்டம் செல்லும். சில வேலைகளுக்காக அங்கு இங்கு அலைய நேரிடலாம். நீண்ட நேரம் தூங்கலாம்.

### தனுசு



இல்லம் தேடி நல்ல செய்திகள் வரும் நாள். பண விடயங்களில் மற்றவர்களிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றி பெருமை அடைவீர்கள். சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். கல்மனம் படைத்த சிலரிடமும் சாதகமாகப் பேசிக் காரியம் சாதிப்பீர்கள். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர்.

### மகரம்



புதிய காரியங்களுக்கு அடித்தளம் அமைப்பீர்கள். தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தங்கள் போட மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிடைக்கும். உறவினர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். குறைந்த செலவில் முடியும் என நினைத்த காரியம் ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். மறதியைத் தவிர்க்க வேண்டிய நாள்.

### கும்பம்



உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும் நாள். பெண்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். மற்றவர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கைக்காட்ட முற்படுவீர்கள். பெரிய மனிதர்களின் நட்பைப் பெறலாம். நீண்ட நாள்களாகச் சந்திக்காத உறவினர் ஒருவரைச் சந்திக்கலாம். தொழில் மீதான பற்றுதல் அதிகரிக்கும்.

### மீனம்



என்ன ஆகுமோ என பயந்த விடயம் ஒன்று பிசுபிசுத்துப் போகலாம். உறவினர் ஒருவரை பற்றி மற்றொரு உறவினரிடம் விமர்சிப்பீர்கள். மாமன், மைத்துனர்கள் உங்களிடம் யோசனை கேட்டு நடக்கலாம். மற்றவர்களுக்கு தெரியாமல் ரகசியமாக சில வேலைகளை செய்ய முற்படுவீர்கள். பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள்.

---


**உங்கள் சேவையால் மனம் மகிழ்கின்றோம்**

**திருமதி மேரிகிளமென்ரினா மாட்டின் நெல்சன்**

(வரலாற்று நாயகி, S.L.T.S.I)



**சேவை விபரம்:**

★ முதல் நியமனத் திகதி : 01.12.1982 (மனைப் பொருளியல்)

★ இ/பறக்கட்டிய தமிழ் மகா வித்தியாலயம் 01.12.1982 - 31.12.1986

★ யா/கோப்பாய் அரசினர் பயிற்சிக்கலாசாலை 01.01.1987 - 31.12.1988

★ யா/புனித றோக்ஸ் றோ.க.வித்தியாலயம் 01.01.1989 - 14.12.2009

தனது பணியால் பாடசாலை வரலாற்றின் பெரும் பகுதியில் என்றும் நிலைத்து நிற்கும் ஆசிரியை திருமதி மே.கி.மா.நெல்சன் அவர்களை நெஞ்சமதில் நிறுத்தி மனமார வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/புனித றோக்ஸ் றோ.க.வித்தியாலயம்,
யாழ்ப்பாணம். (92342)


## அரிவாள் வெட்டி மூவர் காயம்

யாழ்ப்பாணம்,பெப்.10

நெல் அறுவடை அரிவாள் வெட்டி மூவர் காயமடைந்தனர். நெல் அறுவடை செய்யும் வேளையிலேயே அரிவாள் வெட்டிக் காயமேற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 7 ஆம் திகதி இந்தச் சம்பவங்களில் மந்துவிலைச் சேர்ந்த ஐ.புருசோதரன் (வயது -20), ம.கிரிசன் (வயது-16) தனங்கிளப்பைச் சேர்ந்த ச.விவேகானந்தன் (வயது-35) ஆகியோர் கைகளில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அறுவடைக் கூலி அதிகரிப்பினால் போதிய பயிற்சி இல்லாமல் அறுவடையில் ஈடுபட்ட வேளையில் காயமேற்பட்டதாகக் கூறப்பட்டது. (50-207)


**மாதகல் தூய லூர்து அன்னை திருவிழா**




மாதகல் தூய லூர்து அன்னை ஆலய நவநாள் வழிபாடுகள் கடந்த 05.02.2010 அன்று ஆரம்பமாகின. நற்கருணை வழிபாடு எதிர்வரும் 13.02.2010 சனிக்கிழமை மாலை 6 மணிக்கும் திருநாள் திருப்பலி 14.02.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 6.30மணிக்கும் நடைபெறும்.

**பங்குத் தந்தையும் பங்கு மக்களும்.** (92331)



சிவமயம்

**விவாஹ சுபமுகூர்த்தப் பத்திரிகை**

நிகழும் மங்களகாமான விரோதி ஸ்ரீ தை மீ 29ஆம் உ வியாழக்கிழமை (11.02.2010) காலை 10.50 தொடக்கம் 11.50 வரையுள்ள ரிஷப லக்கினமும் உத்திராட நக்ஷத்திரமும் சந்திர காலவோரையும் கூடிய சுபமுகூர்த்தத்தில்

*புன்னாலைக்கட்டுவன் - ஈவினை கற்பக விநாயகர்தேவஸ்தானத்தைச் சேர்ந்த*
பிரம்மஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள் – விஜயலக்ஷ்மி தம்பதிகளின் சீமந்த புத்திரன்
சிரஞ்ஜீவி சர்வேஸ்வர சர்மா
*அவர்களுக்கு*

*கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தைச் சேர்ந்த*
பிரம்மஸ்ரீ சுப்ரமணிய கௌரிபாலக் குருக்கள் – மஞ்சுஸ்ரீ தம்பதிகளின் சீமந்த புத்திரி
சௌபாக்கியவதி சரண்யா
*அவர்களை*

கன்னிகாதான, திருமாங்கல்யதாரண, பாணிக்கிரஹணம் செய்ய பெரியோர் நிட்சயித்துள்ளனர். அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

திருமண மண்டபம் : சிவசக்தி மண்டபம், ஆவரங்கால்.

11.02.2010 காலை 6.00 ஸமாவர்த்தனமும், மாலை 5.00 மணிமுதல் வரவேற்புபசாரமும் மணமகன் இல்லத்தில் இடம்பெறும்.



மணமகன் இல்லம்
ஈவினை பிள்ளையார் வீதி,
புன்னாலைக்கட்டுவன்.
தொ.பே.0777-110146

மணமகள் இல்லம்
...ஒழுங்கை,
பருத்தித்துறை.
தொ.பே. 021-3007659



**வணிகவியல் கல்லூரி ஆரம்ப வைபவம்**

எமது கல்லூரி நாளை February 11ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு CIMA கொழும்பு கிளையின் பிரதான பணிப்பாளரான Mr.Bradley Emerson ஆலும் சிறப்பு விருந்தினரான U.K CIMA தலைமையகத்தின் உயர் பணிப்பாளர் குழுவின் அங்கத்துவரான Mr.Andrew Harding இனாலும் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்படும் என்பதை பெருமையுடன் தெரிவிக்கின்றோம்.

CIMA வகுப்புகளும் Certificate in Business English வகுப்புகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இம்மாதம் (February) முடிவுக்குள் பதிவு செய்யும் மாணவர்களுக்கு விசேட ஆரம்ப சலுகைகள் வழங்கப்படும்!

SPECTRA SCHOOL OF BUSINESS
NO.19, Stanly Road (People's Bank Lane), Jaffna.
Tel: 021 222 1422
Email: jaffna @ spectraskills.com (92362)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தலிபான்களின் இறுதிக் கோட்டையை மீட்க பெரும் தாக்குதலுக்குத் தயாராகிறது ஆப்கான்

## அப்பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேற்றம்

காபூல், பெப். 10

ஆப்கானிஸ்தானின் தென் மாநிலமான ஹெல்மாண்டுவிலுள்ள மாஜ்ரா பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற ஆரம்பித்துவிட்டார்கள். தலிபான்களின் கட்டுப்பாட்டிலுள்ள கடைசிப் பகுதி இதுவாகும்.

இப்பகுதியை மீட்பதற்காகப் பாரிய இராணுவ அதிரடி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதையொட்டி, முன்கூட்டியே பகுதி குடியிருப்பாளர்கள், குடும்பம் குடும்பமாக வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தங்குவதற்காகத் தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாஜ்ரா பிராந்தியத்துக்கப்பால் அமைக்கப்பட்டுள்ள இம்முகாம்களில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் தங்குவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அவர்களுக்கான உணவுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாஜ்ரா பகுதியைத் தலிபான்களிடமிருந்து மீட்பதற்காக 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட பிரிட்டிஷ் இராணுவச் சிப்பாய்கள் குவிக்கப்பட்டுள்ளனர். இவர்களைத் தவிர அமெரிக்க, ஆப்கானிஸ்தான் இராணுவச் சிப்பாய்களும் மீட்புப்பணியில் ஈடுபடவுள்ளார்கள்.

2001 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதலை அமெரிக்கா ஆரம்பித்தது. அதுமுதல் இடம்பெற்றுள்ள தாக்குதல்களை விட, மாஜ்ரா பகுதியை மீட்பதற்கான தாக்குதல் பாரிய அளவில் அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் போர் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் ஆகியவையும் ஈடுபடுத்தப்பட வுள்ளன.

அதேசமயம், எத்தகைய தாக்குதலையும் தாங்கள் எதிர்கொள்ளத் தயார் என தலிபான்கள் அறிவித்தல் விடுத்துள்ளார்கள். எனினும், அவர்களைச் சரணடையுமாறு சர்வதேச இராணுவச் செய்தித் தொடர்பாளர் எரிக் ட்ரெம்பிளே கேட்டுக்கொண்டுள்ளார்.

# ஆஸ்திரேலிய பெண் இஸ்ரேலில் கைது

டெல் அவிவ், பெப். 10

ஆஸ்திரேலிய பெண் ஒருவர் இஸ்ரேல் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். விசா காலாவதியான பின்னரும் அவர் இஸ்ரேலில் தங்கியிருந்தமையே கைதுக்கான காரணம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

22 வயதான பிரிஜ்ஜட் செப்பல் எனும் பல்கலைக்கழக மாணவியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

''இவரது விசா கால எல்லை இன்னும் நிறைவு பெறவில்லை. இவர் சட்டத்துக்கு முரணாகக் கைதுசெய்யப்பட்டுள்ளார்'' என இஸ்ரேலிய மேல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# தேவாலயங்களில் பெண் ஆயர்கள்; 'சேர்ச் ஒவ் இங்கிலாந்து' சபை முடிவு

லண்டன், பெப். 10

'சேர்ச் ஒவ் இங்கிலாந்து' என்னும் கிறிஸ்தவ அமைப்பும், அதன் தேவாலயங்களில் பெண் ஆயர்களை நியமிக்க முடிவு செய்துள்ளது. இந்த அமைப்பின் உயர்மட்டக் கூட்டம் லண்டனில் நடைபெற்றது. இதில் இந்த முடிவு ஏகமனதாக எடுக்கப்பட்டது.

கிறிஸ்தவ தேவாலயங்களில் பெண்கள் ஆயர்களாக நியமிக்கப்படுவதில்லை. எனினும், கிறிஸ்தவ மதத்தில் ஒரு பிரிவான ஏஞ்சலிக்கல் சபையைச் சேர்ந்த சில ஆலயங்களில் பெண்கள் ஆயர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அமெரிக்கா, கனடா, நியூசிலாந்து ஆகிய நாடுகளிலுள்ள இந்த ஆலயங்களில் பெண் ஆயர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதேபோல, இங்கிலாந்திலுள்ள 'சேர்ச் ஒவ் இங்கிலாந்து' கிறிஸ்தவ அமைப்பும் பெண் ஆயர்களை நியமிக்க முடிவுசெய்துள்ளது.

இந்த நியமனங்களை எப்படிச் செய்வது? இதற்கான சட்டத்திட்டங்களை எப்படி வகுப்பது? என்பவை குறித்து மிக விரிவாக ஆராயப்பட்டது. ஆனால், இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. ஜூலை மாதம் அடுத்தகட்ட கூட்டம் நடைபெறவுள்ளது. அதில் இறுதி முடிவு எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த சபையில் ஒரு பிரிவினர் பெண்களை ஆயர்களாக நியமிக்க எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். பெண்களை நியமித்தால் சபையில் இருந்தே தாங்கள் விலகிவிடுவர் என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

# ஈரான் மீது தடைகளை விதிக்க மேற்குலக நாடுகள் ஆயத்தம்

## பி.பி.ஸி. உலக சேவை அறிவிப்பு

லண்டன், பெப். 10

ஈரானுக்கு எதிராகக் கடுமையான தடைகளை விதிக்க மேற்குலக நாடுகள் ஆயத்தமாகி வருகின்றன என பி.பி.ஸி. உலக சேவை குறிப்பிட்டுள்ளது.

யுரேனியம் உற்பத்தி தொடர்பாக ஈரான் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையைத் தொடர்ந்து மேற்குலக நாடுகள் ஈரான் மீது தடை விதிப்பது குறித்து ஆராய்ந்து வருகின்றன என்றும் அது தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கலோஸ் சார்கோசி, அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் ரொபர்ட் கேட்ஸ் ஆகியோர் பரிஸ் நகரில் ஈரானிய விவகாரம் தொடர்பாக பேச்சுகள் நடத்தியுள்ளனர்.

ஈரானின் நடவடிக்கைகள் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன என பிரிட்டன் அறிவித்துள்ளது. ஈரானில் அணு உற்பத்தி தொடர்பான நடவடிக்கைகளை மேலும் விஸ்தரிக்கும் முனைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை ஒரு சாதகமான நிலையாகக் கருத முடியாது என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

அனைத்து உலக நாடுகளும் ஒன்றிணைந்து ஈரானுக்கு எதிராகச் செயற்படவேண்டும். இது மிகவும் அவசியமானதொன்று என மேற்குலக நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன. ஈரானுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபை ஏற்கனவே மூன்று தடவைகள் தடைகளை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# இந்தியாவுடன் பேச்சு நடத்த தமக்கு நெருக்கடி ஏதுமில்லை என்கிறது பாக்.

''இந்தியாவே எங்களிடம் வலிந்து பேச்சுக்கு முன்வந்துள்ளது. இந்தியாவுடன் பேச்சு நடத்த எங்களுக்கு எவ்வித நெருக்கடியும் கிடையாது'' என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

''மும்பைத் தாக்குதலுக்குப் பின்னர் இந்தியா தானாகவே பேச்சை துண்டித்துக் கொண்டது. இப்போது அதுவே பேச்சு நடத்த முன்வந்துள்ளது. நாங்கள் அந்நாட்டிடம் மண்டியிடவில்லை'' என பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சர் ஷா மஹ்மூத் குரேஷி அளித்துள்ள பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மாகாணத்திலுள்ள தனது சொந்த நகரான முல்தானுக்கு ஞாயிற்றுக்கிழமை குரேஷி விஜயம் செய்தார். அப்போது அவர் செய்தியாளர்களுக்கு இந்தப் பேட்டியை அளித்துள்ளார்.

''மும்பைத் தாக்குதலை அடுத்து இராஜதந்திர ரீதியில் பாகிஸ்தானை தனிமைப்படுத்தவேண்டும் என்று இந்தியா நினைத்தது. அதற்கான நடவடிக்கையிலும் மும்முரமாகத் தொடர்ந்து ஈடுபட்டது. ஆனால், பாகிஸ்தான் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்ததால் இந்தியாவின் எண்ணம் ஈடேறவில்லை'' என்றும் அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

''இந்தியாவுடன் மீண்டும் பேச்சு நடத்த எங்களுக்கு எவ்வித நெருக்கடியும் இல்லை. அப்படியே நெருக்கடி வந்திருந்தாலும் அதை நாங்கள் சகித்துக்கொண்டிருக்க மாட்டோம். எங்கள் தேச நலனை எந்த வகையிலும் விட்டுக்கொடுக்க மாட்டோம்'' என்றும் ஷா மஹ்மூத் குரேஷி சூளுரைத்துள்ளார்.

''எனினும், இந்தியா பேச்சுக்கு அழைப்பு விடுத்துள்ளது. இதை நாம் ஏற்றுக்கொள்வோம். ஏனென்றால் காஷ்மீர், நதி நீர்ப் பிரச்சினை ஆகியவை உட்பட அந்நாட்டுடன் பேசித் தீர்வுகாண வேண்டிய ஏராளமான விடயங்கள் நீண்டகாலமாகவே கிடப்பில் போடப்பட்டுள்ளன'' என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

''இந்தப் பேச்சுகள் அவசியமானவை. இதற்காக இரு நாடுகளின் வெளியுறவு செயலர்களின் சந்திப்பு நிகழும். அப்போது அனைத்து விவகாரங்களையும் பாகிஸ்தான் முன்வைத்து விவாதிக்க முயலும். மும்பைத் தாக்குதல் விவகாரத்தை பாகிஸ்தான் கண்டிக்கிறது. இந்த விடயத்தில் ஆரம்பத்திலிருந்து இந்த நிமிடம் வரை பாகிஸ்தானின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை'' என்றும் குரேஷி குறிப்பிட்டுள்ளார்.

''தீவிரவாதிகள் இந்தியாவுக்கு மட்டுமல்ல, பாகிஸ்தானுக்கும் கடும் சவாலாக உள்ளனர். கடந்த இரு ஆண்டுகளில் எத்தனையோ தீவிரவாதத் தாக்குதல்களைப் பாகிஸ்தான் சந்தித்துள்ளது. எனினும், சிறிதும் மனம் தளராமல் அவர்களை ஒழிக்க மக்களும், இராணுவச் சிப்பாய்களும் தொடர்ந்து போராடி வருகின்றனர்'' என்றும் அவர் விவரித்துள்ளார்.

# இந்தியாவுக்கு அதிக முக்கியத்துவமா? பாக். குற்றச்சாட்டுக்கு அமெ. மறுப்பு

வாஷிங்ரன், பெப். 10

பாகிஸ்தான் கூறுவதைப்போல அமெரிக்கா அதிகம் முக்கியத்துவம் தந்து இந்தியாவை ஆதரிக்கவில்லை என்று அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் ரொபர்ட் கேட்ஸ் தெரிவித்துள்ளார்.

''எந்தவொரு கட்டத்திலும் இந்தியாவை அமெரிக்கா ஆதரிக்கவில்லை. இதை இந்தியாவும் விரும்பியதில்லை. இந்தியா, அமெரிக்கா இரு நாடுகளின் வரலாற்றை அறிந்தவர்கள் இரு நாடுகளிடையிலான உறவு எத்தகையது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்'' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்தில் பாகிஸ்தானில் ரொபர்ட் கேட்ஸ் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். அப்போது அங்கு பாகிஸ்தான் தெரிவித்த கருத்துகளுக்குக் கேட்ஸ் அளித்த விவரத்தை அமெரிக்கப் பாதுகாப்பு மையமான பென்ரகன் வெளியிட்டுள்ளது.

இதில் அவர் கூறியிருப்பவை வருமாறு:-

''இந்தியாவும், பாகிஸ்தானும் தங்களிடையே நிலவும் பிரச்சினைகளைத் தாங்களே பேசித் தீர்த்துக்கொள்ள முடிவு செய்துள்ளன. இதில் மூன்றாம் நாடுகள் தலையிடுவதை இரு நாடுகளுமே ஏற்றுக்கொள்ளவில்லை.

''இரு நாடுகளுமே வெளிப்படையான திறந்த மனதுடன் பேச்சு நடத்துவது சிறந்தது. இதன்மூலம் கருத்து வேறுபாடுகளைக் களையமுடியும். இரு நாடுகளும் தற்போது மீண்டும் பேச்சு நடத்த முன்வந்துள்ளன.

''ஆப்கானிஸ்தான் விடயத்தில் இரு நாடுகளின் செயல்பாடு குறித்து இரு நாடுகளிடமும் தவறான தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன. இதை இரு நாடுகளும் தெளிவாகப் பேசித் தீர்த்துக்கொள்ளவேண்டும். இது மிகவும் அவசியம்.

''இரு நாடுகளும் தங்களுக்கிடையே தோன்றியுள்ள சந்தேகங்களை வேறு வழிகளின் (தூதரகப் பேச்சு) மூலம் தீர்த்துக்கொள்வது நல்லது. இரு நாடுகளுக்கிடையிலான பேச்சுகளில் அமெரிக்கா பங்காற்றுவதற்கு ஒன்றுமில்லை. ஒரு வேளை இரு நாடுகளும் அமெரிக்காவின் உதவியைக் கோரினால் எந்த அளவுக்கு உதவ முடியுமோ அந்தளவுக்கு அதைச் செய்ய அமெரிக்கா தயாராக உள்ளது.

# பாகிஸ்தானில் சூடு: 4 பாதுகாவலர் பலி

இஸ்லாமாபாத், பெப். 10

பாகிஸ்தானின் ராவல்பிண்டி நகரில் மர்ம நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 4 பேர் இறந்தனர். முன்னாள் அமைச்சர் ஷேக் ரஷீத் அகமது காயமடைந்தார்.

முன்னாள் ஜனாதிபதி முஷாரபுக்கு நெருக்கமாக இருந்தவர் ஷேக் ரஷீக் அகமது, பின்னர் அவாமி லீக் என்ற கட்சியை இவர் தொடங்கினார். தற்போது இவர் நாடாளுமன்றத்தின் அரசியல் நிர்ணய சபைக்கு நடைபெறும் இடைத்தேர்தலில் போட்டியிடுகிறார்.

# மைக்கல் ஜக்ஸனின் மரணத்துக்கு சிகிச்சையளித்த டாக்டரே காரணம்

## பொலிஸாரின் குற்றப்பத்திரிகையில் தகவல்

லொஸ் ஏஞ்சல்ஸ், பெப். 10

பிரபல பொப் பாடகர் மைக்கல் ஜக்ஸன் மரணத்துக்கு, அவருக்கு சிகிச்சை அளித்த டாக்டரே காரணம் என பொலிஸார் லொஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள குற்றப்பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளனர்.

பிரபல பொப் பாடகர் மைக்கல் ஜக்ஸன் கடந்த ஜூன் மாதம் 25 ஆம் திகதி அமெரிக்காவில் திடீரென மர்மமான முறையில் மரணம் அடைந்தார். அவர் கொலை செய்யப்பட்டாரா? அல்லது இயற்கை மரணமா? என்பது தெரியாமல் இருந்தது. லொஸ் ஏஞ்சல்ஸ் பொலிஸார் இதுபற்றி விசாரணை நடத்தினர்.

அவரது உடல் பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. அதில் அவரது உடலில் 'புரோப்பல்' மயக்க மருந்து, 'லோராசெபாம்' என்ற வலி நிவாரண மருந்து ஆகியவை அதிக அளவில் கலந்து இருந்தமை தெரியவந்தது. இதனால்தான் மைக்கல் ஜக்ஸன் மரணம் அடைந்துள்ளார் என பிரேத பரிசோதனை அறிக்கை தெரிவித்தது.

இந்த மருந்துகளை மைக்கல் ஜக்ஸனின் தனி டாக்டர் கான்ரட் முராரி கொடுத்து இருந்தார். இதனால் அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இப்போது லொஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றத்தில் பொலிஸார் டாக்டர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்துள்ளனர்.

அதில் மைக்கல் ஜக்ஸன் சாவுக்கு டாக்டர்தான் காரணம். அவர் கொடுத்த மயக்க மருந்து மற்றும் வலி நிவாரண மருந்துகளே ஜக்ஸனின் உயிரை பறித்துள்ளது. மருத்துவ விதிகளின்படி அந்த மருந்துகளை அதிக அளவில் பயன்படுத்தக்கூடாது. அத்தியாவசிய நேரங்களில் மட்டும்தான் பயன்படுத்தலாம். ஆனால், அதை டாக்டர் மீறிவிட்டார் என்றும் கூறியுள்ளனர்.

ஆனால், டாக்டர் கான்ரட் முராரி இக்குற்றச்சாட்டை மறுத்துள்ளார். ''இந்த மருந்துகளை நான் மைக்கல் ஜக்ஸனுக்கு கொடுக்கவில்லை. அவருக்கு வழக்கமாகக் கொடுக்கும் மருந்துகளைதான் கொடுத்தேன். விதிமுறைகளை மீறி அதிகபட்ச மருந்துகளையும் கொடுக்கவில்லை. எனவே, மைக்கல் ஜக்ஸன் சாவுக்கு நான் காரணம் அல்ல'' என்றும் அவர் கூறியுள்ளார்.

டாக்டர் மீது பொலிஸார் கூறியுள்ள குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் டாக்டருக்கு 4 ஆண்டுவரை சிறைத்தண்டனை கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரில் பனிப்பாறைகள் சரிந்ததில் 17 இராணுவத்தினர் பரிதாப மரணம்!

ஸ்ரீநகர், பெப். 10

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் குல்மார்க் பகுதியில் குளிர்கால இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இந்திய இராணுவத்தினர் 17 பேர் பனிப்பாறைகள் மேலே விழுந்ததால் பனியில் புதையுண்டு இறந்தனர். உயிருக்கு ஆபத்தான நிலையில் 17 பேர் மீட்கப்பட்டனர். மற்றவர்கள் காயங்களுடன் தப்பினர்.

சுற்றுலாப் பயணிகள் பனிச்சறுக்கு விளையாட்டில் ஈடுபடும் குல்மார்க் நகருக்கு 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பயிற்சிக் களத்தில் நேற்றுமுன்தினம் திங்கள்கிழமை காலை 8 மணிக்கு இந்தியத் தரைப்படையின் மலைப்பிரிவு போர்ப் பயிற்சி இராணுவத்தினர் பயிற்சியைத் தொடங்கினர். அப்போது கடுமையாக பனிப் பொழிவு இருந்தது.

அருகில் இருப்பவர் கூட யாரென்றே தெரியாத அளவுக்கு பனிமூட்டம் இருந்தது. அந்த நிலையில் திடீரென்று எங்கிருந்தோ பனிப்பாறைகள் சரிந்து அப்படியே அடுக்கடுக்காக தொடர்ந்து விழ ஆரம்பித்தன. இராணுவத்தினர் குழுமியிருந்த அந்த இடமே வெளியுலகுக்குத்தெரியாத அளவுக்கு பனிப் பாறைகள் விழுந்து கொண்டே இருந்தன.

மிகவும் கனமான, எலும்புகளைச் சில்லிட வைக்கும் அந்தப் பனிப்பாறைகள் விழுந்து அழுத்தியதால் இராணுவத்தினர் அனைவருமே அவற்றில் சிக்கிக் கொண்டு வெளியேற முடியாமல் திண்டாடினர். அப்போது அவர்களுக்கு காயம் காரணமாக உடலில் எலும்பு முறிவு உள்ளிட்ட சேதங்கள் பயங்கரமாக ஏற்பட்டன. தோல் கிழிந்து ஆங்காங்கே ரத்தம் உறைய ஆரம்பித்தது.

பனிப்பொழிவால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு பனிக் கட்டிகளை உடைத்துக் கொண்டு வெளியே வர முடியாத நிலைமை ஏற்பட்டது. அந்த இடமே பனிப்பாறைகளால் மூடப்பட்டுவிட்டதால் மற்றவர்களுக்கு சம்பவம் நடந்த இடம் எதுவென்றே கண்டுபிடிக்க முடியாமல் போனது.

பயிற்சிக்குச் சென்ற இராணுவத்தினர் சிக்கிக்கொண்டதை ஓரளவுக்குத் தள்ளியிருந்த மற்ற இராணுவச் சிப்பாய்கள் பார்த்து தங்களுடைய தளங்களுக்குத் தெரிவித்த பிறகே தெரியவந்தது. அப்படியும் வீதி வழியாகவோ வான் வழியாகவோ உடனே மீட்கச் செல்ல முடியாதபடிக்கு மிகவும் மோசமான வானிலை நிலவியது. தரையில் இருப்பவர்களாலேயே பார்க்க முடியவில்லை என்பதால் வான் வழியாக ஹெலிகாப்டர்களில் அங்கே செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. பனிப் பொழிவு காரணமாகவும் பனிப்பாறைகள் விழுந்ததாலும் ஆறு அடிக்கும் மேல் உறை பனி மூடியிருந்தது. இதனால் உடல் விறைத்து நரம்புகள் வெடிக்கும் நிலைமையே காணப்பட்டது.

அப்படியும் தங்களுடைய உயிரைத் துச்சமாக மதித்து, தங்களுடைய சகாக்களை மீட்க மற்ற இராணுவச் சிப்பாய்கள் துடிப்பாகச் செயற்பட்டனர். அதனால் உயிரிழப்பு எண்ணிக்கை குறைந்தது. காயமடைந்தவர்களும் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பவர்களும் ஸ்ரீநகரில் உள்ள இராணுவ வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டிருக்கின்றனர்.

இந்த இராணுவப் பயிற்சிப் பாடசாலையில் 350 பேர் தங்கிப் படிக்கின்றனர். சியாசின் போன்ற மிகவும் உயரமான, பனிப் பொழிவு மிகுந்த பகுதிகளைக் காவல் காப்பது எப்படி என்று பயிற்சி பெறுவதற்காக இந்த பயிற்சிப்பாடசாலை காஷ்மீரில் குல்மார்க் அருகில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்த இடம் தரை மட்டத்திலிருந்து 10 ஆயிரம் அடி உயரத்தில் இருக்கிறது. இன்னும் அடுத்த 24 மணி நேரத்துக்கு இப்படி பனிப்பாறைகளின் சரிவு இருக்கும் என்றும் வானிலை மையம் எச்சரித்தி ருக்கிறது.

பனிப்பொழிவு காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை அடியோடு நிறுத்தப்பட்டிருக்கிறது. உள்ளூர்வாசிகளும் வீடுகளிலேயே முடங்கிக் கிடக்கின்றனர்.



சென்னை அருகே எஸ்.ஆர்.எம். பல்கலையில் நடந்த பட்டமளிப்புவிழாவில் 'இஸ்ரோ' தலைவர் ராதாகிருஷ்ணனுக்கு பல்கலை. வேந்தர் பச்சமுத்து பரிசு வழங்குவதையும், அருகில் சபாநாயகர் மீராகுமார் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## பீகார், ஒரிஸாவில் மாவோயிஸ்ட் அதிரடி; தண்டவாளங்கள் வெடிவைத்துத் தகர்ப்பு!

ரூர்கேலா, பெப். 10

பீகார், ஒரிசா உட்பட ஐந்து மாநிலங்களில் மாவோயிஸ்ட்கள் நேற்றுமுன்தினம் நடத்திய முழு அடைப்பின்போது, இரண்டு இடங்களில் தண்டவாளங்கள் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டன. இதனால், அங்கு ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மத்திய அரசு கைவிட வேண்டும் என வலியுறுத்தி, ஒரிசா, பீகார், ஜார்க்கண்ட், மேற்கு வங்கம், சட்டீஸ்கர் உள்ளிட்ட மாநிலங்களில், மாவோயிஸ்ட்கள் முழு அடைப்பிற்கு நேற்றுமுன்தினம் அழைப்பு விடுத்திருந்தனர். இந்த முழு அடைப்பால் பெரிய அளவில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படவில்லை.

இருந்தாலும், பீகாரில் பாதுகாப்பு படையினரை ஏற்றிச் சென்ற ரயில் ஒன்றைக் குறிவைக்கும் நோக்கத்தில், நார்கான்ஜோ என்ற இடத்தில் மாவோயிஸ்ட்கள், தண்டவாளத்தை வெடி வைத்துத் தகர்த்தனர். இதனால், இந்தப் பகுதியில் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அதேபோல், ஒரிசாவில் பலுடலா என்ற இடத்திலும் தண்டவாளத்தை தகர்த்தனர்.

இதில் சென்ற சரக்கு ரயிலின் இரண்டு பெட்டிகள் தடம் புரண்டன. இந்தச் சம்பவம் காரணமாக, ஹவுரா - மும்பை இடையேயான ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## 'திருக்குறள் பேரொளி' கருணாநிதிக்கு விருது

சென்னை, பெப். 10

முதல்வர் கருணாநிதியின் திருக்குறள் பணிகளைப் பாராட்டி 'திருக்குறள் பேரொளி' விருதை உலகத் திருக்குறள் பேரவை அமைப்பு வழங்குகிறது.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் அதற்கான விழா இன்று 10 ஆம் திகதி நடைபெறுகிறது.

இதுகுறித்து உலகத் திருக்குறள் பேரவைத் தலைவர் குன்றக்குடி பொன்னம் பல அடிகளார் நேற்றுமுன்தினம் கூறியவை வருமாறு -

சென்னையில் வள்ளுவர் கோட்டம், குமரி முனையில் வள்ளுவருக்கு 133 அடி சிலை, பெங்களூரில் திறக்கப்படாமல் இருந்த வள்ளுவர் சிலையைத் திறந்தது, 1,330 குறள்களையும் ஒப்பிக்கும் குழந்தைகளுக்கு பொற்கிழி பரிசு ஆகியவை முதல்வர் கருணாநிதியின் அரிய சாதனை யாகும்.

அவரது இந்த அரிய பணிகளைப் பாராட்டி 'உலகத் திருக்குறள் பேரவை' அமைப்பு சார்பில் 'திருக்குறள் பேரொளி' என்ற விருதினை வழங்க உள்ளோம் - என்றார்.

## விலைவாசி உயர்வைக் கண்டித்து 19 இல் விஜயகாந்த் ஆர்ப்பாட்டம்



சென்னை, பெப். 10

விலைவாசி உயர்வைக் கண்டித்து பெப்ரவரி 19 ஆம் திகதி தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தலைமையில் சேலத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

கடந்த சில மாதங்களாக அத்தியாவசியப் பொருள்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இதுதவிர பஸ் கட்டணம், பால் விலை, சமையல் எரிவாயு விலை, வீட்டு வாடகை, படிப்புச் செலவு, மருத்துவச் செலவு ஆகியவையும் உயர்ந் துள்ளன. இதனால் குடும்பச் செலவு இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது.

பெப்ரவரி 6 ஆம் திகதி டில்லியில் நடைபெற்ற முதல்வர்கள் மாநாட்டில் ஏதாவது நிவாரணம் கிடைக்கும் என்று பொது மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் பெருத்த ஏமாற்றம்தான் மிஞ்சியது.

பருப்பு வகைகள் பற்றாக்குறை பல ஆண்டுகளாக உள்ளது. ஆனால் அதன் உற்பத்தியை அதிகரிக்கவோ, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவோ மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கிலோ 3 ரூபாவுக்கு 20 கிலோ அரிசி வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்து தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. அது பற்றி கேள்வி எழுப்பினால் 'அதனை அரசியல் ஆக்காதீர்கள்' என்று நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறுகிறார்.

அரிசி இருந்தால்தானே கொடுக்க முடியும் என்று உண்மையை பிரதமர் மன்மோகன் சிங் ஒப்புக் கொண்டுள்ளார். பல்வேறு போராட்டங்கள் நடத்தியும் விவசாய பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசு ஊக்கம் கொடுக்கவில்லை.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த ஒரு குழு அமைத்து அதில் மாநில முதல்வர்களை உறுப்பினர்களாக்கி மாநில அரசுகளின் வாயையும் அடைத்துள்ளது.

தமிழகத்திலிருந்து அத்தியாவசியப் பொருள்கள் வெளிநாடுகளுக்கு கடத்தப்படுவதை தி.மு.க. அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

விலை உயர்வுக்கு காரணமான மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்து சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு பெப். 19 ஆம் திகதி எனது (விஜயகாந்த்) தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் - என்றுள்ளது.

# இந்தியச் செய்திகள்

## அமிதாப்பச்சன் நடிப்பில் மலையாளத்தில் படமாகிறது 'கந்தகார்' விமானக் கடத்தல்!



சென்னை, பெப். 11

கடந்த 1999 ஆம் ஆண்டு இந்திய விமானம் ஆப்கானிஸ்தானிலுள்ள கந்தகாருக்கு கடத்தப்பட்ட சம்பவத்தை அடிப்படையாக வைத்து மலையாளத்தில் படம் தயாராகிறது.

இந்தப் படத்துக்கு, 'கந்தகார்' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இதில், முக்கிய வேடத்தில் அமிதாப்பச்சன் நடிக்கிறார். இந்தத் தகவலை 'கந்தகார்' படத்தை இயக்கவிருக்கும் மேஜர் ரவி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு -

இந்திய விமானம் கந்தகாருக்கு கடத்தப்பட்ட சம்பவம், உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அந்தச் சம்பவத்தை மலையாளத்தில் படமாக்கத் திட்டமிட்டிருக்கிறோம். படத்துக்கு, 'கந்தகார்' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. அதில், மோகன்லால் - அமிதாப்பச்சன் ஆகிய இருவரும் இணைந்து நடிக்கிறார்கள்.

இதற்கான கதை விவாதம், கொச்சியில் நடந்தது. அதில், மோகன்லால், அமிதாப்பச்சன் ஆகிய இருவரும் கலந்துகொண்டார்கள். அப்போது, 'கந்தகார்' படத்தின் கதையை அமிதாப்பச்சனிடம் கூறினேன்.

கதையைக் கேட்டு அமிதாப்பச்சன் திருப்தியடைந்தார். கதை தனக்கு மிகவும் பிடித்திருக்கிறது எனக் கூறிய அவர், இந்தப் படத்தில் நான் நடிக்கிறேன் என்று கூறினார். அமிதாப்பச்சன் நடிக்கும் முதல் மலையாள படம் இது.

இந்தப் படத்துக்காக, ஒரு இளம் தமிழ் நடிகரை தேடிக்கொண்டிருக்கிறேன். (முன்பு, இந்த வேடத்தில் கமல்ஹாசன் நடிப்பார் என்று பேசப்பட்டது.)

படத்தின் கதாநாயகி, இன்னும் முடிவு செய்யப்படவில்லை. 'நாடோடிகள்' படத்தில் நடித்த [illegible] னையில் இருக்கிறது - என்றார்.

## கோவை மாநாட்டில் பிரபாகரனின் படம்; புதிய தமிழகம் தலைவர் மீது வழக்கு



கோவை, பெப். 10

தடைசெய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவாக, சட்டத்துக்கு புறம்பாக செயற்பட்டார் என புதிய தமிழகம் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமி மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

கோவை வ.உ.சி. பூங்கா மைதானத்தில் கடந்த இரு நாட்களாக உலகத்தமிழர் பாதுகாப்பு மாநாடு நடந்தது. மாநாட்டு அரங்குகளில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் படம் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததோடு, விற்பனையும் செய்யப்பட்டது. தகவல் அறிந்த ரேஸ் கோர்ஸ் பொலிஸார் மாநாட்டு பந்தலுக்கு சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் படத்தை விற்பனை செய்யக்கூடாது என எச்சரிக்கை விடுத்தனர்.

இதுதொடர்பாக 11 பேர் மீது வழக்குப் பதிவு செய்து மூன்று பேரைக் கைது செய்தனர். இதற்கிடையில், உலகத்தமிழர் பாதுகாப்பு மாநாட்டுக்கு ஏற்பாடு செய்த புதிய தமிழகம் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமி மீது, தடை செய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவாக, துண்டு பிரசுரம் வெளியிட்டு மத்திய, மாநில அரசுக்கு எதிராகச் செயற்படுதல், சட்டத்துக்கு புறம்பாக செயற்படுதல்' ஆகிய பிரிவுகளில் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரச திணைக்கள பணியாளர்களுக்கான பதவி உயர்வு, வினைத்திறமை காண் பரீட்சைகள்

## 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப்.10

வடக்கு மாகாண அரச திணைக்களங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் பரீட்சை, பதவி உயர்வுப் பரீட்சை ஆகியவை இவ் வருடம் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் நடத்தப்படவுள்ளன.

அதற்கான விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் திணைக்கள தலைவரின் சிபார்சுடன் அனுப்பி வைக்குமாறு ஆணைக்குழுவின் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி திணைக்களத்தில் நூலகர் தரம்III, சனசமூக அபிவிருத்தி அலுவலர், ஆய்வு உத்தியோகத்தர், வருமான உத்தியோகத்தர், வருமான பரிசோதகர், முன்பள்ளி ஆசிரியர் ஆகியோருக்கும்-

விவசாய திணைக்களத்தில் தொழிலாளர், விவசாய போதனாசிரியர் ஆகியோருக்கும் கிராம அபிவிருத்தி திணைக்களத்தில் தையல் போதனாசிரியர் ஆகியோருக்குமான பதவி உயர்வு பரீட்சைகளும்-

உள்ளூராட்சி திணைக்களத்தில் தொழில் நுட்ப உத்தியோகத்தர், முன்பள்ளி ஆசிரியர், ஆய்வு உத்தியோகத்தர், வருமான மேற்பார்வையாளர், வருமான பரிசோதகர் ஆகியோருக்கும்-

கிராம அபிவிருத்தி திணைக்களத்தில் தையல் போதனாசிரியர், கிராம அபிவிருத்தி அலுவலர் ஆகியோருக்கும்-

கைத்தொழில் திணைக்களத்தில் தையல் போதனாசிரியர்களுக்கும், சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தில் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும்

சமூக சேவைகள் திணைக்களத்தில் நன்னடத்தை உத்தியோகத்தர்களுக்கும், மாகாண பொது நிர்வாக திணைக்களத்தில் இலங்கை தொழில்நுட்ப சேவை பயிற்சித்தரம், 1999ஆம் ஆண்டு நியமனம் பெற்றோர், சாரதி சேவை, அலுவலக ஊழியர்கள், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், கணனி பதிவு இயக்குநர் ஆகியோருக்கும்

விவசாய திணைக்களத்தில் விவசாய போதனாசிரியர் ஆகியோருக்கான வினைத்திறன் காண் பரீட்சைகளும் நடத்தப்பட வுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

## மெற்றாஸ்மயில் நேற்று மாரடைப்பால் காலமானார்



யாழ்ப்பாணம், பெப்.10

கிளிநொச்சி கல்வி வலய நிர்வாக அதிகாரியான 'கலாபூஷணம்' 'தமிழ் கலைக் காவலன்' மெற்றாஸ்மயில் நேற்று மாரப்படைபால் காலமானார்.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழக செயலாளராக நீண்ட காலம் பணியாற்றிய இவர் நாட்டுக்கூத்து வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைத்துள்ளார்.

தீவக கல்வி வலயத்தில் நிர்வாக உத்தியோத்தராக பல வருடங்கள் பணியாற்றி இவர், கல்விப் பணிகளை சீராக மேற்கொண்ட சிறந்த நிர்வாக அலுவலராகவும் திகழ்ந்தார்.

'வேழம்படுத்த வீராங்கனை' என்ற நாட்டுக்கூத்தை 38 மேடைகளில் மேடையேற்றிப்பெருமை கண்டவர் மெற்றாஸ் மயில். (ஒ-1)

## கண்டெடுக்கப்பட்ட ஆபரணம்

யாழ்ப்பாணம், பெப்.10

யாழ். மாவட்டச் செயலக உத்தியோகத்தர் ஒருவரால் நேற்று யாழ். வீதியில் கண்டெடுக்கப்பட்ட ஆபரணம் ஒன்று மாவட்டச் செயலக நிர்வாக உத்தியோத்தரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதற்குரியவர் அலுவலக நாள்களில் சென்று அதற்குரிய அடையாளத்தை நிரூபித்து ஆபரணத்தைப் பெற்றுச் செல்லலாம் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப்.10

நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் நா.அருட்சோதி தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொ.இரவிச்சந்திரன் கலந்துகொள்வார். (ஒ-207)

* * *

மயிலிட்டி பாரதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் ஆதரவுடன் அமரர் மாணிக்கம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் தாச்சி சுற்றுப்போட்டியில் -

இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மயிலிட்டி கலைமகள் வித்தியாலய மைதானத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-அளவெட்டி பாரதி வி.க. எதிர் மயிலிட்டி கண்ணகி வி.க. (04-86)

## இருபாலையில் குளத்தில் மிதந்த இரண்டு சடலங்கள் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், பெப்.10

இருபாலை கிழக்கில் உள்ள குளம் ஒன்றில் இருந்து மாணவன் மற்றும் மாணவியின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

யாழ். நீதிமன்ற நீதிவான் எஸ். ஆனந்தராஜாவின் உத்தரவின் பேரில் சடலங்கள் கோப்பாய் பொலிஸாரால் நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இருவரின் சடலங்கள் குளத்தில் மிதப்பதாக கிடைத்த தகவலையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டார்.

குளக்கட்டில் இருவரும் சேர்ந்து எழுதியதாகக் கூறப்படும் கடிதம் ஒன்றும் விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்டது.

தமது மரணங்களுக்குத் தாங்களே பொறுப்பு என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்து பிரேத பரிசோதனைக் காக சடலங்களை யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

உயிரிழந்தவர்கள் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவபீடத்தில் முதலாம் ஆண்டில் பயின்ற மட்டக்களப்பைச் சேர்ந்த இரவீந்திரதாசன் விக்ரர் அருள்தாசன் என்ற மாணவரும் வன்னிப் பகுதியைச் சேர்ந்த வேலாயுதம் திருவிழி என்ற மாணவியும் எனக் கூறப்பட்டது. (ஒ-1)

## யாழ். மாநகர சபைக்கு மேலும் இரு தீயணைப்பு இயந்திரங்கள்

### கனேடியத் தூதுவர் நேற்றுத் தகவல்

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவுக்கு மேலும் இரண்டு புதிய தீயணைப்பு இயந்திரங்களை வழங்குவதற்கு கனேடிய அரசாங்கம் முன்வந்துள்ளது.

யாழ். மாநகர சபையில் புதிதாக உருவாக்கப்படவுள்ள தீயணைப்புப்பிரிவுக்கு ஏற்கனவே ஒரு தீயணைப்பு இயந்திரத்தை கனடா வழங்கி இருந்தது.

தலா ஒரு கோடி ரூபா பெறுமதியான நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய மேலும் இரண்டு இயந்திரங்களை கனேடிய் அரசாங்கம் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்தாகும்.

* யாழ். மாநகரசபை அலுவலகத்தில் நேற்று மாலை முதல்வர் திருமதி யோ. பற்குணராஜாவைச் சந்தித்த கனேடியத் தூதுவர் புறுஸ் லெலி இந்தத் தகவலைத் தெரிவித்தார். (ஒ-ரி-14)

# சொந்த மண்ணில் வைத்து இந்திய அணி படுதோல்வி!

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி, ஓர் இன்னிங்ஸ் மற்றும் 6 ஓட்டங்களால் சொந்த மண்ணிலேயே படுதோல்வியடைந்தது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி, இந்திய அணிக்கு எதிரான 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதன் முதலாவது போட்டி கடந்த 6ஆம் திகதி ஆரம்பமாகியது.

முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி 558 ஓட்டங்களைக் குவித்தது. அதேவேளை இந்தியா வெறும் 233 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதனால் அடுத்த இன்னிங்ஸையும் இந்திய ஆட வேண்டிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கி ஆடியது.

மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவின் போது 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 66 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முரளி விஜய் (27), சச்சின் (15) ஆகியோர் களத்தில் இருந்தனர்.

தொடர்ந்து நேற்றுத் தனது ஆட்டத்தைத் தொடர்ந்து இந்திய அணி, முரளி விஜயை (32) வேகமாகவே இழந்தது.

பின்னர் வந்த பத்திரிநாத் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஒரு முனையில் விக்கெட்டுகள் சரிந்தாலும் தனித்து நின்று போராடிய சச்சின் டெண்டுல்கர் சதமடித்த கையோடு ஆட்டமிழந்தார். இது இவரது 47ஆவது சதம் ஆகும். அத்துடன், இந்தச் சதம் மூலம் தொடர்ந்து மூன்று சதங்களையும் அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் வந்த வீரர்களான டோனி (25), ஹர்பஜன் சிங் (39), சஹீர்கான் (33), சஹா (36) ஆகியோர் ஓரளவு ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தனர்,


பின்னர்வந்த மிஷ்ரா ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழக்க இந்திய அணி, நான்காம் நாளான நேற்றையதினம் முடிவதற்கு முன்னரே 319 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது. இதன் மூலம் இந்திய அணி, ஓர் இன்னிங்ஸ் மற்றும் 6 ஓட்டங்களால் சொந்த மண்ணிலேயே படுதோல்வியடைந்தது.

தென்னாபிரிக்க அணி சார்பாக பந்து



வீச்சில், ஸ்ரைன், ஹரிஸ் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். எஞ்சிய விக்கெட்டுகளை பார்னல் (2), மோர்கல் (1), கலிஸ் (1) ஆகியோர் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக ஆம்லா தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்க அணி முன்னிலை வகிக்கிறது.




பெல்கிரேடில் நடைபெற்ற பெடரேஷன் கிண்ணத்துக்கான 'குழு- 1' டென்னிஸ் இரட்டையர் ஆட்டத்தில் ரஷ்யாவின் ஸ்வெட்லானா குஸ்னெட்சோவா - அலிசா கிளெபனோவா ஜோடியை எதிர்த்து ஆடிய செர்பியாவின் அனா இவானோவிக்-ஜெலினா ஜான்கோவிக் ஜோடி 1-6, 4-6 என்ற நேர் [illegible] தது.போட்டி ஆரம்பமாக முன்னர் வீராங்கனைகள் [illegible]

## மேற்கிந்தியத் தீவுகளுடனான மோதல்: ஆஸ்திரேலியாவுக்கு 2ஆவது வெற்றி!

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது போட்டியிலும் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றுள்ளது.

ஆஸ்திரேலியல-மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவருகிறது.

முதலாவது போட்டியில் ஆஸி. வென்றது. இந்நிலையில் இரண்டாவது போட்டி நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அதன்படி களமிறங்கிய அவ்வணிக்கு ஆரம்பமே பேரதிர்ச்சியாக அமைந்தது.

அணி எந்தவித ஓட்டமும் பெறாத நிலையில் கெய்ல் (0) ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த வீரர்களும் விரைவாகவே ஆட்டமிழந்து செல்ல 39.4 ஓவர்களில் 170 ஓட்டங்களுக்குள் மேற்கிந்தியத் தீவுகள் அணி சுருண்டது.

அவ்வணி சார்பாக டியோனறின் (23), ராம்டின் (30), பொலட், (32), ஸ்மித் (43), ராம்புல் (18) ஆகியோர் ஓரளவு ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

ஏனைய வீரர்கள் எவரும் இரட்டை ஓட்டங்களை எட்டவில்லை. ரோஜ் ஓட்மெதுவும் பெறாமல் களத்தில் இருந்தார்.

ஆஸி. அணி சார்பாக பந்துவீச்சில் போலிஞ்சர் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். மைக்கெய் 2 விக்கெட்டுகளையும், ஜோன்சன், வோட்ஷன், கௌரிச் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து 171 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கோடு களமிறங்கிய ஆஸி. அணி, ஆரம்பம் முதலே அபாரமாக ஆடியது.

வோட்ஷன் அரைச்சதம் (53) கடந்து வெளியேறினார். மார்ஷ் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த பொண்டிங் (57), கிளார்க் (27) ஆகியோர் கடைசிவரை நின்று அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துன் சென்றனர்.

இறுதியில் ஆஸ்திரேலியா, 26.3 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 171 ஓட்டங்களைப் பெற்றது. இதன் மூலம் 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

ஆட்டநாயகனாக போலிஞ்சர் தெரிவு செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத் பொன்சேகா கைது விடயம்; அமெரிக்கா ஆழ்ந்த கவலை

வாஷிங்ரன், பெப். 10

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த வேட்பாளர் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டுள்ளமை குறித்துக் கவலை வெளியிட்டுள்ள அமெரிக்கா, நாட்டில் காணப்படும் பிளவை இது மேலும் மோசமாக்கும் என்றும் எச்சரித்துள்ளது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் பிலிப் குரோலி ஏ.எவ்.பி. செய்திச் சேவைக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

தேர்தலொன்று முடிந்தவுடன் எடுக்கப்படும் வழமையான நடவடிக்கையல்ல சரத் பொன்சேகாவின் கைது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சரத் பொன்சேகாவை நடத்தும் விதம் குறித்து அவதானமாக இருக்குமாறு மஹிந்த ராஜபக்ஷவிற்கு அறிவுறுத்தும் முயற்சியில் அமெரிக்க இராஜதந்திரிகள் ஈடுபட்டுள்ளனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இது தொடர்பாக பிலிப் குரோலி மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கை நிலைவரத்தை மிக உன்னிப்பாக அவதானித்து வருகிறோம். எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் அது இலங்கையின் சட்டங்களுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும் என நாம் கவலை கொண்டுள்ளோம்.

இலங்கைச் சமூகத்திற்குள் காணப்படும் பிளவுகளுக்குத் தீர்வு காணவேண்டிய பாரிய தேவை இலங்கை அரசிற்குள்ளது. இலங்கை அரசு தான் எடுக்கும் எந்த நடவடிக்கையும், சமூகத்தில் காணப்படும் பிளவை மேலும் தீவிரப்படுத்தாததாக அமைவது குறித்து எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்.

இலங்கை அரசு எதனைச் செய்தாலும் அது எதிர்காலத்தில் ஜனநாயகக் கட்டமைப்புகள் குறித்த கருத்தில் தாக்கத்தைச் செலுத்தும்.

மேலும் தேர்தல் முடிவடைந்த பின்னர் உடனடியாக எடுக்கப்படக்கூடிய நடவடிக்கையல்ல இது. - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-சி)

## HSBC வங்கியின் யாழ்ப்பாணக்கிளை நாளை திறக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், பெப்.10

HSBC வங்கி யாழ்ப்பாணத்தில் தனது கிளையை காங்கேசன்துறை வீதியில் 145ஆம் இலக்க கட்டடத்தில் நாளை வியாழக்கிழமை வைபவரீதியாகத் திறந்து வைக்கவுள்ளது.

வங்கிக்கிளையை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித்நிவாட் கப்ரால் திறந்து வைப்பார். இந் நிகழ்வில் பிரிட்டிஷ் தூதர் டாக்டர் பீற்றர் ஹெய்ஸ், இலங்கை மற்றும் மாலைதீவுக்கான வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி நிக் நிக்கலஸ் ஆகியோரும் விசேட விருந்தினர்களாக கலந்து கொள்வர். (அ-1)

## உலகப்பொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரைவில் வழங்கப்படும் என அமைச்சு அறிவித்துள்ளது.

உலக தொழில் மையத்தைச் சேர்ந்த குழுவொன்று விரைவில் இலங்கை விஜயம் செய்ய உள்ளது எனவும், இவர்கள் ஆய்வு நடத்தியதன் பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அமைச்சரவைப் பத்திரம் மூலம் நஷ்ட ஈடு வழங்குவதற்கான நிதி ஒதுக்கப்படும் என குறிப்பிடப்படுகிறது.

## இந்தியாவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கவிருந்தார் என்றும் -

எனினும் பொன்சேகாவின் கைது காரணமாக அந்த விஜயத்தை இடைநடுவில் கைவிட்டுவிட்டு அவர் நாடுதிரும்ப நேரிட்டுள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இன்று காலை நாடு திரும்பும் ரணில் விகிகரமசிங்க ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்வது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி கட்சி உறுப்பினர்களுடன் இன்று காலையே கலந்தாலோசிப்பார் என்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து ஏனைய எதிர்க் கட்சிகளுடனும் ரணில் விக்கிரமசிங்க கலந்தாலோசிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தளபதிப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களிலேயே சில அரசியல் கட்சிகளுடன் தொடர்பு வைத்திருந்தமையுடன் தேசிய பாதுகாப்பிற்குக் குந்தகம் விளைவித்தார் என அரசு குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த பாதுகாப்புப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இவ்விடயம் குறித்து மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இராணுவ சட்டத்தின் 57ஆவது பிரிவின் கீழேயே பொன்சேகா கைது செய்யப்பட்டார்.

இந்தச் சட்டத்தின் கீழ் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியையும் அவர் இராணுவ இரகசியங்களை வெளியிட்டிருந்தால் அல்லது அரசிற்கு எதிராக செயற்பட்டிருந்தால் கைது செய்யலாம். இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தலாம்.

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியாக இருந்தாலும் ஓய்வு பெற்று, ஆறு மாதங்களுக்குள் அவரைக் கைது செய்யலாம். - எனத் தெரிவித்துள்ளார். (அ-சி)

## நாடாளுமன்றம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல்கள் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி நடைபெற்று புதிய நாடாளுமன்றம் அந்த மாதம் 22 ஆம் திகதி முதல்முறையாகக் கூடும் என்று ஜனாதிபதியின் ஊடக அதிகாரி சந்திரபால லியனகே கூறினார்.

நாடாளுமன்றில் ஆறு வருடம் பூர்த்தி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதியாகும். ஆயினும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற கையோடு நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினால் அதிலும் அரசு வெற்றிபெறும் வாய்ப்பு அதிகம் எனக் கருதியே அது இப்போது கலைக்கப்பட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

நாடாளுமன்றம் முன்கூட்டியே கலைக்கப்படும் என்று எதிர்வுகூறப்பட்டமையால் பிரதான கட்சிகளான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் தேர்தல் களத்தில் குதிப்பதற்கான நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## அரசமைப்பையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

சரத் பொன்சேகாவைக் கைது செய்திருப்பதன் மூலம் இந்நாட்டின் அரசமைப்பும் ஜனநாயகமும் முற்றாக மீறப்பட்டுள்ளன. இது முற்றிலும் ஒரு ஜனநாயக விரோத செயற்பாடு.

அரசுக்கு எதிராக பொன்சேகா சதி செய்தார் என்றும் இராணுவத்தில் இருந்து கொண்டு அவர் அரசியல் செய்தார் என்றும் அரசு கூறியுள்ளது. அவர் ஒருபோதும் அப்படிச் செய்தவரல்லர்.

எப்படி இருப்பினும், அவரை இராணுவத்தினர் கைது செய்ய முடியாது. பொலிஸ்தான் கைது செய்து விசாரிக்க வேண்டும். பொன்சேகா இறுதியாக கூட்டுப்படைத் தளபதியாக இருந்தார். அந்தச் சட்டத்தின் கீழ்தான் செயற்பட்டார். அப்படியாயின் இராணுவச் சட்டத்தின் கீழ் அவரைக் கைது செய்யமுடியுமா?

இரவில் வந்து மிரட்டி பொன்சேகாவைக் கைது செய்தமையை ஏற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுக்கு எதிராக நீதிமன்றம் செல்லத் தயாரான சந்தர்ப்பத்தில்தான் பொன்சேகா கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனநாயகத்திற்கு எதிராக அரசு எடுத்திருக்கும் இந்நடவடிக்கையை ஆட்சேபித்து நாம் பதில் நடவடிக்கை எடுப்போம். அனைத்துக் கட்சிகளுடனும் பேசி பொன்சேகாவின் உயிரைப் பாதுகாக்க நாம் நடவடிக்கை எடுப்போம். - எனக் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

## பொன்சேகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது குறித்து சர்வதேசத்திற்கு முறையிடவுள்ளோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள சரத் பொன்சேகாவின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்றபோதே கரு ஜெயசூரிய இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

இந்த ஊடக சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர். (அ-சி)

## நாட்டுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தக் குற்ற விசாரணைகளில் தான் சாட்சியமளிப்பார் என பொன்சேகா தெரிவித்து பி.பி.ஸி. செய்திச் சேவையில் வெளியான கருத்துகள் படையினருக்கு அவர் விசுவாசமில்லாதவர் என்பதைப் புலப்படுத்தியுள்ளன எனவும் அரச இணையத்தளம் தெரிவித்துள்ளது.

உலகின் மிகவும் ஈவிரக்கமற்ற பயங்கரவாதக் குழுவிடமிருந்து நாட்டைக் காப்பாற்றிய படையினருக்குத் துரோகமிழைப்பது தொடர்பில் பொன்சேகா உறுதியாக இருந்தமையை பி.பி.சியில் வெளியான அவரது கருத்துக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துவிட்டன எனவும் அந்த இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது. (அ-சி)

## பொன்சேகாவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடம் இரகசியமாகவே பேணப்படும்.

- இவ்வாறு இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

ஜெனரல் சரத் பொன்சேகாவின் உறவினர்கள் அவரைப் பார்வையிட கோருவார்களேயாயின் அவர்களுக்கு அரசு அனுமதிவழங்கும்.

இராணுவத்தில் கடமையாற்றுகையில் மேற்கொண்ட குற்றச் செயல்கள் மற்றும் ஊழல் போன்றவற்றிற்காகவே ஜெனரல் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவத்திலிருந்து விலகிய ஆறு மாதங்களுக்குள் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும் - என்றார்.

இதேவேளை, சரத் பொன்சேகா எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதைக் கண்டுபிடித்துத் தருமாறு அவரது குடும்பத்தினர் ஐ.சி.ஆர்.சியிடம் கோரியுள்ளனர்.

பொன்சேகா குடும்பத்தினரின் கோரிக்கை குறித்து ஐ.சி.ஆர்.சி. பேச்சாளர் சரசி விஜயரட்ண தெரிவிக்கையில், குடும்பத்தினரின் கோரிக்கை தொடர்பாக தாங்கள் பரிசீலித்து வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளார். (அ-சி)

## பொன்சேகாவை மிருக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் வெளியே இழுத்து மிருகம் போல நடத்தினர்.

அவர் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது எனக்குத் தெரியாது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக 30 வருட காலமாகப் போரிட்ட எனது கணவரை நடத்தும் விதம் இதுதானா?

### எனது குடும்பத்துக்கு நடைபெற்றது போன்று நாளை மற்றவர்களுக்கும் நடக்கலாம்

இராணுவத் தலைமையகத்தின் அருகில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் காரணமாக ஏற்பட்ட காயங்களுக்காக சரத் பொன்சேகா மருந்து பாவிக்கிறார்.

தற்போது அவருடைய உடல் நிலை எவ்வாறுள்ளது என்பது குறித்து நான் ஆழ்ந்த கவலையடைந்துள்ளேன். அவர் திங்கள் இரவு மருந்து பாவிக்கவில்லை.

இலங்கை இராணுவத்தினர் மிகவும் ஒழுக்கம் வாய்ந்தவர்கள் என எப்போதும் நான் கருதி வந்துள்ளேன்.

எனினும் அவர்கள் எனது கணவரைக் கொண்டுசென்ற விதம் ஏமாற்றம் அளிப்பதாகவுள்ளது. எனது குடும்பத்தினருக்கு நடைபெற்றது போன்று நாளை மற்றவர்களுக்கும் நடக்கலாம்.

அவர் கைது செய்யப்படலாம் என எதிர்பார்த்திருந்தோம். ஆனால் இந்த விதத்தில் அது நடக்கும் என நாம் எதிர்பார்க்கவில்லை.

நான் அரசிற்குச் சொல்ல விரும்புவது இதுதான். நீதியாக நடந்து கொள்ளுங்கள். அவரை மனிதனைப் போல நடத்துங்கள்.

தேர்தல் தினத்தன்று சதிப்புரட்சியொன்றிற்குத் திட்டமிட்டார் என அவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

நானும் எனது இரு பிள்ளைகளும் அன்றைய தினம் அவருடனேயே இருந்தோம். சதிப்புரட்சி எதற்கும் அவர் திட்டமிடவில்லை. இது அர்த்தமற்ற, முட்டாள்தனமான குற்றச்சாட்டு.- எனத் தெரிவித்தார் அனோமா பொன்சேகா. (அ-சி)


வந்துவிட்டது வெற்றித்தேர்வு
தரம்:4,5 வினாப்பத்திரம் தேவையான பாடசாலைகள்இன்றே தொடர்புகொள்க
வெற்றித்தேர்வு பரீட்சை ஞாயிறு
நல்லூர் சயன்ஸ் அக்கடமியில்
தொடர்புகளுக்கு:0212229016/ 0775388471
தரம்:4 முதல் தரம்:11 வரை
முதலாவது பரீட்சை வினாப்பத்திரம் புத்தகசாலைகளில்

Computer Engineer -USA
ICTA வழங்கும் Scholorship
Per Module ~~Rs.15000~~ Rs.3800
கற்கும் அனைவருக்கும் Free Courses
ICDL-Computer Driving Lincence)
Dip.. in hardware
A+,N+ (ComTIA)
இச்சலுகை 12.02.2010 வரை மட்டுமே
MCS விபரங்களுக்கு நேரில் 324, பலாலி வீதி,
Supported By UNDP/JRRP பரமேஸ்வராசந்தி அருகில்
T.P-772395895 யாழ்ப்பாணம், Bus Root - 764

புதிய பிரிவுகள் ஆரம்பம் !!
Higher National Diploma in Pharmacy
(External - Two Years)
HND in Pharmacy Examination Conducted by Sri Lankan Medical Council (SLMC)
Bachelor of Pharmacy (B.Pham) UK & Australia & Canada (3rd & 4th Year)
HND in Pharmacy (2 Years)
After A/L (Bio / Maths)
100% Visa Guaranteed !!!
அனைத்து Visa ஒழுங்குகளும் எமது நிறுவனத்தால் செய்து தரப்படும்.
புதிய பிரிவுகள் ஆரம்பம் :- 13/02/2010
விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

NIRU KONDAVIL
A/L 2011,2012
கணிதப் பிரிவுகள்
2012 வகுப்புகள் ஆரம்பம் 14.02.2010 ஞாயிறு

அடுத்த பிரிவு ஆரம்பம்
AAT,HNDA,Bcom.BBA பூர்த்தி செய்து பாடவிலக்கு பெற விண்ணப்பித்தவர்களும், புதிதாக விண்ணப்பிப்போரும் 13.02.2010 க்கு முன் உடன் தொடர்பு கொள்ளவும்.
CIMA
விபரங்களுக்கு நேரில்
MCS 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
Supported By UNDP/JRRP
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764

INVITATION
Missionary Arrival in Jaffna
A Presentation
By
C.T.E.Mills, Jr.
At
Uduvil Girls' College
On
Wednesday, February 10,2010,4.30 p.m.
Principal, Uduvil Girls' College.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன்-(பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.02.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org